Registered as a News Paper
பொழிவு - 15
குவிப்பு - 01
பக்கங்கள்- 16
விலை ரூபா 40.00
ஜனவரி 2012
(ISSN 1800-2641)


# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.

## ஆசியாவிலேயே முதன் முதலாக தியானயோக சபையை நிறுவிய தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு விழா

'தோலகட்டி சுவாமி' என மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட வணக்கத்திற்குரிய இறையடியார் பி. ஏ. தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு விழா கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி நினைவுகூரப்பட்டது ((1912.01.06 – 2012.01.06). செபமாலை மாதா துறவற சபையின் ஸ்தாபகரான இவர் ஆசியாவிலேயே முதன் முதலாக தியானயோக சபையை நிறுவியவர் (The Founder of the First Asian Contemplative Congregation) என்ற பெருமைக்குரியவர். கத்தோலிக்க திருச்சபையில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு ஆரம்ப நிலையான 'இறை அடியார்' (Servant of God) என்ற நிலையை 2006ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் இவருக்கு வழங்கினார். ஈழத் தமிழ்த் திருச்சபை முதன் முதல் புனிதர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுமானால் அது தோமஸ் அடிகளாராகவே இருக்க முடியும்.



செபமாலை மாதா துறவற சபையின் ஸ்தாபகர் இறையடியார் தவத்திரு வ. அ. தோமஸ் அ.ம.தி அடிகளாருடைய குருத்துவ நூற்றாண்டு விழா நிகழ்வுகள் கடந்த ஜனவரி மாதம் 06ஆம் திகதி யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் இடம்பெற்றது.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நூற்றாண்டு விழாத் திருப்பலி இடம்பெற்றது. தொடர்ந்து நூற்றாண்டு விழாவை நினைவுகூரும் பல்வேறு உரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து தோமஸ் அடிகளாரின் கல்லறையும் திருவுருவச் சிலையும் அமைந்துள்ள நினைவு மண்டபம் செபமாலை மாதா துறவற சபையின் உயர் தலைவர் அருட்திரு. ஏ. எம். ஸ்ரீபன் அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது. யாழ் ஆயர் தோமஸ் அடிகளாரின்-கல்லறையை ஆசீர்வதித்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)




## பொங்கலோ பொங்கல்! பொங்கட்டும் பொங்கல்

தமிழர் புத்தாண்டாம் பொங்கல் திருநாளில் மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றோம்.

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் 27வது ஆண்டு நினைவு





வங்காலை ஆலய வளாகத்திற்குள் வைத்து 1985ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி படுகொலைசெய்யப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளாரின் 27வது ஆண்டு நினைவு நிகழ்வுகள் கடந்த ஜனவரி 6ஆம் திகதி வங்காலையில் நடைபெற்றன.

அன்றைய தினம் காலை 6.30 மணிக்கு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து பஸ்ரியன் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு முன்னால் அஞ்சலி வைபவம் இடம்பெற்றது. இதன்போது மறைந்த அடிகளாரின் நினைவுகள் இரைமீட்டப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் வங்காலை மக்கள் தமக்காக உயிர்கொடுத்த உத்தமர் பஸ்ரியன் அடிகளாரின் நினைவை நன்றியோடு நினைவுகூர்வது பாராட்டுக்குரியது. வங்காலை பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் இந்நினைவு நிகழ்வினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## எருசலேமில் மகாத்மா காந்திக்கு நினைவு மண்டபம்




அமைதியை உணர்த்தும் விதமாக எருசலேமில் மகாத்மா காந்திக்கு நினைவு மண்டபம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய தேசத்து மகாத்மா காந்தியின் அஹிம்சை வழியே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு என்று கருதி, இதனை உணர்த்தும் விதமாக அவரின் உருவச்சிலையும், தியான மையமும் அமைக்க எருசலேம் மாநகராட்சி முடிவெடுத்துள்ளது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)


## வேளாங்கண்ணி திருத்தலம் 50வது ஆண்டு நிறைவு



தமிழ் நாட்டில் உள்ள வேளாங்கண்ணி திருத்தலம் பசிலிக்கா நிலைக்கு உயர்த்தப்பட்ட 50வது ஆண்டு நிறைவு இந்த வருடம் நினைவுகூரப்படுகின்றது. 1962ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி அன்றைய திருத்தந்தை 23ஆம் அருளப்பர் இத்திருத்தலத்தை பசிலிக்கா நிலைக்கு உயர்த்தினார். திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இதனை "கீழைத்தேச நாடுகளின் லூர்துபதி" என அழைத்தமை குறிப்பிடத்தக்கது.

## அன்னை தெரேசாவின் வல்லமை எல்லோரிலும் புதைந்து கிடக்கின்றது!

### கொல்கொத்தாவில் தலாய் லாமா



அன்னை தெரேசாவைப்போல் ஏழைகளிடையே பணியாற்றுவதற்குரிய வல்லமை ஒவ்வொருவருக்குள்ளும் புதைந்து கிடக்கின்றது. அதனை அடையாளம் கண்டு வாழ்க்கையை மாற்ற ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் என அழைப்பு விடுத்தார் பௌத்தமத உயர் தலைவர் தலாய் லாமா.

அன்னை தெரேசா குறித்து கொல்கத்தாவில் அண்மையில் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தலாய் லாமாவின் இக்கூற்றினால் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி வங்காலையில் நடைபெற்ற அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரின் குருத்துவ பொன்விழா நிகழ்வின்போது குருக்கள் துறவியர் விழா நாயகரை அழைத்துக்கொண்டு பவனியாக அணிவகுத்துச் சென்றபோது....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## மறைக்கல்வியின் பல்பரிமாணங்கள்

இயேசு விட்டுச்சென்ற இனிய பணியைத் தொட்டுத் தொடர்வதுதான் மறைக்கல்விப் பணி. நம் மறைமாவட்டத்தினது விசுவாச வாழ்வின் வளர்ச்சியில் மறைக்கல்விப் பணி பெரும் பங்காற்றிவந்துள்ளதை நாம் அறிவோம். விசுவாச வாழ்வு என்பது ஒரு தொடர் பயணம். இதற்கு பயிற்சி அவசியம். வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் தேவை. அது முதிர்ச்சியை நோக்கிப் பயணிக்க வேண்டும். இதற்கு மறைக்கல்வியியலின் பல்வேறு பரிமாணங்களை புரிந்துகொள்வது அவசியமாகிறது.

மறைக்கல்வியானது திருமுழுக்குப்பெற்ற அனைவரையும் விசுவாச வாழ்வில் ஆழப்படுத்தி உறுதிப்படுத்துகிறது. அதாவது விசுவாச வாழ்வில் முதிர்ச்சியைக் கொண்டுவருகிறது. **இந்த விசுவாச வாழ்வின் பயிற்சியானது தொட்டில் முதல் சுடுகாடு வரை அதாவது பிறப்பு முதல் இறப்புவரை தொடர்கிறது.**

தொடக்கத்தில் மறைக்கல்வி என்பது விசுவாசக் கோட்பாடுகளை சிறுவருக்கு கற்றுக்கொடுப்பது என்ற நிலை இருந்தது. அதனால் மறைக்கல்வி என்றால் சிறுபிள்ளைகளுக்குரியது என்ற கருத்தே இருந்தது. இன்று இந்தக் கருத்து மாற்றம்பெற்றுள்ளது. கிறிஸ்தவர்கள் அனைவருமே தங்கள் விசுவாச வாழ்வில் தொடர் பயிற்சி பெறவும், வளரவும், வாழவும் உறுதுணையாக உள்ள ஒரு பயிற்சிப் பாசறையாக மறைக்கல்வி இன்று உருப்பெற்றுள்ளது.

**மறைக்கல்வி என்பது விசுவாசப் போதனையாகும்.** சிறுவருக்கும் இளையோருக்கும், முதிர்வயதினருக்கும் சிறப்பாக கிறிஸ்தவக் கோட்பாடுகளை பொதுவாக, முறையாக மற்றும் தெளிவாகக் கற்று கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு அழைத்துச்செல்லும் நோக்கோடு கொடுக்கப்படுவதாகும்.

மறைக்கல்வி கிறிஸ்தவர்களுடைய விசுவாச வாழ்வின் முதிர்ச்சிக்கும், உலக வாழ்வில் அவர்கள் சாட்சியம் பகர்வதற்கும் உதவுகின்றது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் எழுதிய 'Verbum Domini' (VD) (ஆண்டவரின் அருள்வாக்கு என்ற புதிய திருத்தூது மடல் **மறைக்கல்வியின் மையம் இறைவார்த்தை** என்பதை ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகின்றது. இந்த மடல் சிறப்பாக மறைக்கல்வியின் மாண்பைப் பறைசாற்றுகின்றது. (VD 74)

"இன்றைய திருச்சபையின் மேய்ப்புப்பணி அலுவலில் இறைவார்த்தையை அடிப்படையாகக்கொண்ட மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து எல்லா கிறிஸ்தவர்களுக்கும் மறைக்கல்வியாளர்களுக்கும் ***இறைவார்த்தைப் பயிற்சி*** அளிப்பது காலத்தின் கட்டாயம்" (VD 74) என இத்திருத்தூது மடல் வலியுறுத்துகின்றது.

"மறைக்கல்வியின் முக்கிய ஆதாரமாகவும் தொடக்கமாகவும் இறைவார்த்தை இருக்கிறது என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூறுகின்றோம்" என இந்திய ஆயர்கள் கூறுகின்றனர் (இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் அறிக்கை ஜனவரி 2011, தூய இதய குருத்துவக் கல்லூரி, சென்னை).

**மறைக்கல்வியின் நோக்கம் இறைவார்த்தையின் ஒளியில் கிறிஸ்துவின் மறையுண்மைகளைப் புரியவைப்பதே ஆகும்.**

இந்திய ஆயர் பேரவையினால் 1997இல் வெளியிடப்பட்ட 'பொது மறைக்கல்வி வழிகாட்டி' மறைக்கல்வியின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றை முன்வைக்கிறது.

1. உண்மையின் புரிதலை ஆழப்படுத்துவதே மறைக்கல்வி. இதைத்தான் மறைப்போதகம் என்கிறோம். மறைக்கல்வியின் முதல் செயற்பாடு ***மறைப்போதகமே.***
2. மறைக்கல்வியானது அர்த்தமுள்ள வழிபாட்டிற்கு இட்டுச்செல்லும் ***வழிபாட்டுக்கல்வியாகக்*** கொடுக்கப்பட வேண்டும்.
3. மறைக்கல்வியானது ஆண்டவர் இயேசுவிடம் திரும்பிச்செல்லும் மனமாற்றத்தின் வழிகளைத் தரும் ***அறநெறிப் பயிற்சியையும*** கொடுக்க வேண்டும்.
4. மறைக்கல்வி ***இறைவேண்டல் செய்யக்*** கற்றுக்கொடுக்க வேண்டும்.
5. மறைக்கல்வி நம்பிக்கையின் சிறுகுழுமங்களை ***(அன்பியங்களை)*** கட்டி எழுப்ப வேண்டும்.
6. மறைக்கல்வி நமது ***பல்சமய சூழமைவில் வாழவும், சாட்சியம் பகரவும*** உதவவேண்டும்.

**மறைக்கல்வியின் அடித்தளம் மனமாற்றம் ஆகும்.** நமது இதயத்தை இயேசுவை நோக்கித் திருப்புவதையே மனமாற்றம் என்கிறோம். இதைத்தான் நாம் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். (பொது மறைக்கல்வி வழிகாட்டி 62)

ஒருசில மறையுண்மைகளை கற்றுக்கொள்வதால் மறைக்கல்வி பெற்றுவிட்டோம் என்று பலரும் நினைக்கிறோம். நாம் ஏற்றுக்கொள்ளும் மறையுண்மைகளால் இயேசுவை அறிந்துகொள்ள மட்டுமே முடியும். மறைக்கல்வி என்பது வெறும் அறிவு மட்டுல்ல அது இயேசு அனுபவமாக மாறவேண்டும். அதை இந்த ஆண்டில் செய்வோமா?

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*

**அன்புடன் - அருட்பணியாளர் தமிழ் நேசன்.**

**பதிப்பாசிரியர் - மன்னா**



# வாசகர் எண்ணங்கள்

## இனியொரு படைப்புத் தோன்றாது

வான மாமழை பொழியும் பொழுதில் - நித்தம்
வந்து பொழியுமின்பக் கடலே மன்னா!
எம் மனக்கண்முன் மிளிர்ந்த மின்னலே,
நின்னொடு வாழ்வை எம் மத்தியில்
செம்மைபெறச் செய்தவனே!
வருடம் பலவினும் உன்னைப்போல்
இனியொரு படைப்புத் தோன்றாது.
பல பல செய்திகளுக்கு உயிர்மிகக் கொடுத்து
ஒளியருள் புரிந்த மன்னவனே - உன்
படைப்புக்கள் அனைத்தையும் எம் வாழ்வின்
அனுபவமாக்கி அழகுற நீ செய்யும்
சேவகத் தன்மையோ பெறுமதி வாய்ந்தவை
பல்லின்பத்துடன் வாழ்க வளமுடன்!

*நின்னொடு வாழ்ந்த நினைவுகளுடன்,*
*ஸ்டெலா மேரி, இல 32, து. வாகை, நேரியகுளம்.*

## புதுப்பொலிவுடன் திகழ்வாய்

புதுவருடம் பிறந்தால் நீ புதுப்பொலிவுடன் திகழ்வாய்
புதுப்பூவாய் பூத்து என்றும் புதுக் கவிதையாய் மலர்வாய்
எம் ஆக்கம் உன்னில் செழிக்க எம்மிடையே வருவாய்
எம் ஆக்கம் கொண்டு நீ எம்மிடையே வாழ்வாய்
புனிதர்களின் வாழ்வை புதிதாய் உன்னில் காண்கின்றோம்
புதுவருடம் முழுவதும் புதுமுகமாய் நீ மலர்ந்திட
புதுத்துளிகளுடன் வாழ்த்துக்களை வைக்கின்றோம்.

*கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட். பேசாலை.*

## தோழியாய் தோள் கொடுத்தாய்

தோழியாய் தோள் கொடுத்தாய் - நான்
தோற்றுப்போகும் காலங்களில்
என் கால் தடங்களையும் வரலாறாய்
என் வாழ்வில் மாற்றினாய் மன்னா நீ

நான் சிகரங்களைத் தொட்டிட – உன் சிரம் தாழ்த்தி
என் வாழ்வினை உயர்த்திட்டாய்
அன்னையாய் அன்பைப் பொழிந்து
ஆயிரம் எண்ணங்களை என்னுள் தூவி
ஆனந்தம் தந்தவன் நீ - என் மாதாந்த மன்னா நீ

உயிருக்குள் உறவானாய் உதிரத்தில் நிறமானாய்,
உள்ளத்தில் நிலையானாய் உணர்வுடன் கலந்திட்டாய்
ஆண் பெண் நட்பு அசிங்கமென ஊரார் தூற்றினாலும்
உனதும் எனதுமான நட்பு உன்னதமான உறவு

*ஞா. விவித்தாரூபா, நடுக்குடா, பேசாலை.*

## மங்காத புகழோடு நீ வலம் வருகின்றாய்!

மாதத்தில் ஒருமுறை மணம் வீசும் மன்னாவே,
மங்காத புகழோடு மாதம் முழுவதும் வலம் வருகின்றாய்
நீ சுமந்துவரும் ஒவ்வொரு அம்சங்களும் அருமையிலும் அருமை
வாசகர் எண்ணங்களைத் தந்து கொள்ளைகொள்கின்றாய்
சிறுவர் பொழிவினால் எம்மைச் சிந்திக்க வைக்கின்றாய்
இளைஞர்களை வழிப்படுத்த இளைஞர் பொழிவுதனைத் தருகின்றாய்
மறை அறிவுதனைக் கற்க மறையறிவுப் போட்டிதனை தருகின்றாய்
இவ்வாறு பல்வேறு சிந்தனைகளை சுமந்துவரும் மன்னாவே
நீ வாழ்க! தொடரட்டும் உன் சேவை!

*எ. பத்திநாதன் வதனா,*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

# மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி – 2012

### தை

01 - இறைவனின் அன்னை தூய கன்னிமரியாள் (கடன் திருநாள்)
16 - முத்திப்பேறுபெற்ற யோசவாஸ் திருவிழா - தேவன்பிட்டி, மடுக்கரை
18 - கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் - (18 - 25)
20 - தூய செபஸ்தியார் திருவிழா - மன்னார் பேராலயம், கட்டைக்காடு, கண்டல், முதலியார்கமம்
24 - மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 31 ஆண்டுகள் நிறைவு (1981)
25 - தூய சின்னப்பர் திருவிழா - பூலார் குடியிருப்பு
28 - மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 31 ஆண்டுகள் நிறைவு (1981) காலை 7.30 மணிக்கு தோட்டவெளி மறைசாட்சிகள் அன்னை ஆலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
29 - திருப்பாலர் சபைத் தினம் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பப்படும்)
- சலேசியன் அருட்தந்தையர்களின் விழா

### மாசி

02 - தூய மரியன்னை திருவிழா - மடுத்திருப்பதி, மன்னார் மரியன்னை ஆலயம், பாலைக்குழி, காத்தான்குளம், துள்ளுக்குடியிருப்பு, படகுதுறை
04 - இலங்கை மாதா பெருவிழா - (இலங்கையின் பாதுகாவலி) கண்டி அம்பிட்டிய தேசிய குருமட விழா
11 - தூய லூர்து அன்னை திருவிழா - முதலைகுத்தி, கீளியன் குடியிருப்பு, ஜீவநகர்
18 - தூய லூர்து அன்னை திருவிழா - மாந்தை யாத்திரை ஸ்தலம்
22 - திருநீற்று புதன் - தவக்காலம் ஆரம்பம், உண்ணா நோன்பும் மாமிசத்தவிர்ப்பும்
- தூய இராயப்பார் திருவிழா - கத்தாளம் பிட்டி

## காலம் நம் கையில்

2012! புதியதொரு ஆண்டை எதிர்கொள்கின்றோம். முழுதாக 12 மாதங்கள், 365 நாட்கள் எமக்கென ஒப்படைக்கப்பட்டுள்ளன. மணித்துளிகளாக நாம் இவற்றைச் செலவழிக்கப்போகின்றோம். எமது கையில் பெருந்தொகைப் பணம் கிடைத்தால் நாம் எப்படி கவனமாகச் செலவு செய்வோமோ அதைவிட இந்தக் காலத்தை நாம் கவனமாகச் செலவிட வேண்டும்.

அருட்திரு. எயின்சிலி றொசான், (நன்றி - பாதுகாவலன்)

## உண்மை உறைக்கும் — கமிலஸ்

*உங்களுக்கு சமாதானம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!*



(நன்றி - தி. மெசஞ்சர்)

## புத்தாண்டுச் சிந்தனை!

மற்றுமொரு புதிய ஆண்டிலே அடியெடுத்து வைக்கின்றோம். 2011ஆம் ஆண்டு விடைபெற்று புதிய ஆண்டான 2012 பிறந்துள்ளது. இது இறைவன் நமக்கு அளித்துள்ள கொடை.

கொடுக்கப்பட்ட ஐநூறு ரூபாய் நோட்டின் மதிப்பைத் தெரியாமல் கிழித்து எறிந்துவிட்ட குழந்தையிடம் அதன் தந்தை மேலும் ஓர் ஐநூறு ரூபாய் நோட்டினை கொடுத்தால் அதை என்னவென்று சொல்வது? நம் இறைவனும் ஒருவிதத்தில் இத்தந்தையைப் போன்றவர்தான்! கொடுக்கப்பட்ட அற்புதமான காலத்தை நாம் வீணடித்தபோதும் மேலும் ஓர் ஆண்டைக் கொடுத்துள்ளார். அதை நல்ல முறையில் பயன்படுத்துவோம்.

ஜேம்ஸ் அலன் என்பவர் கூறுகின்றார், "எவன் மற்றவர்களின் வேலைகளில் வீணாகத் தலையிடாமல், தன்னுடைய வாழ்வின் கடமைகளை அறிவுடனும், அக்கறையுடனும் கவனிக்கிறானோ அவனுக்கு வெற்றி, கௌரவம், செல்வாக்கு ஆகிய மூன்றும் சேரும்" என்று.

நேரத்தை சரியாகத் திட்டமிட்டு நம் வாழ்வில் வளர்ச்சிபெறுவோம்.

"காலமும் கடலலையும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை!" என்பதை உணருவோம்.

*- அருட்திரு. லெஸ்லி ஜெயகாந்தன்.*
*நன்றி - 'தொண்டன்'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும்

## சர்வமத பேரவைத் தலைவர்கள் கருத்து

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்துவதுடன் இனப்பிரச்சினைக்கு அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென சர்வமதப் பேரவை தெரிவித்துள்ளது.

நாட்டில் சட்டத்தின் ஆட்சிப்படுத்தல் வீழ்ச்சி கண்டு வன்முறை, குற்றச்செயல், கடத்தல் போன்ற செயல்களே அதிகரித்துவிட்டன. எனவே அரசாங்கம் சட்டத்தின் ஆட்சிப்படுத்தலை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை மற்றும் ஊடக சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும் என சர்வமத பேரவை மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டில் யுத்தம் முடிந்துவிட்டாலும் யுத்தத்திற்கான காரணங்கள் இன்னும் உள்ளன. அவற்றை விரைவாகத் தீர்த்துவைக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 18வது திருத்தச்சட்டத்தை நீக்கி 17வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். 18வது திருத்தச்சட்டம் வெளிவந்த பின்னர் ஆணைக்குழுக்களின் சுயாதீனத் தன்மை இல்லாமல் போய்விட்டதென கடந்த ஜனவரி மாதம் 5ஆம் திகதி கூடிய சர்வமதப் பேரவை தெரிவித்துள்ளது. பௌத்த, கத்தோலிக்க, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் தலைவர்கள் சர்வமத பேரவையின் சார்பாக கருத்துக்களை வெளியிட்டனர்.




## ஜனவரி 29ஆம் திகதி திருப்பலத்துவ சபைத் தினம்

### மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் றெஜினோல்ட் அடிகள் வாழ்த்துகிறார்

தேசிய ரீதியில் இலங்கை நாட்டில் ஜனவரி மாதம் 29ஆம் திகதி திருப்பாலத்துவ சபைத் தினம் கொண்டாடப் - படுகின்றது. இதனையொட்டி மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்திரு. பிரான்சிஸ் றெஜினோல்ட் அடிகளார் திருப்பாலத்துவ சபை சிறார்களுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும் தனது நல்வாழ்த்துக்களையும் இறையாசீரையும் தெரிவிக்கின்றார்.



அருட்திரு. பிரான்சிஸ் றெஜினோல்ட்

## 2013ம் ஆண்டில் பிரேசில் நாட்டு றியோ டி ஜெனிரோவில் யூலை 23 முதல் 28 வரை உலக இளையோர் தினம்

2013ம் ஆண்டில் பிரேசில் நாட்டு றியோ டி ஜெனிரோவில் (Rio De Janerio) யூலை 23 முதல் 28 வரை உலக இளையோர் தினம் நடைபெறும் என்பதை திருப்பீட பொதுநிலையினர் அவை உறுதி செய்துள்ளது. இந்த உலக தினத்திற்கென உருவாக்கப்பட்டுள்ள http://worldyouthday.com/rio-2013 என்ற இணையத்தள முகவரியில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 2011ல் ஸ்பெயின் நாட்டின் மாட்றிட் நகரில் உலக இளைஞர் தினம் இடம்பெற்றமை நாம் அறிந்ததே!




### திருத்தந்தையைச் சந்தித்த மக்களின் எண்ணிக்கை

2011ம் ஆண்டில் 25 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் திருத்தந்தை 16ம் பெனடிற்றை நேரடியாகப் பார்த்து ஆசீர்பெற்றுள்ளனர். 2011ம் ஆண்டில் திருத்தந்தையை சந்தித்த மக்களின் எண்ணிக்கை 2010ம் ஆண்டைவிட அதிகம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டு ஏறக்குறை 23இலட்சம் பேர் திருத்தந்தையைச் சந்தித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் 18 – 25

கத்தோலிக்க திருச்சபையில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 18 - 25ஆம் திகதி வரை கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரமாக (Christian Unity Week) கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கத்தோலிக்க திருச்சபையானது Main Line Churches என்று அழைக்கப்படுகின்ற அங்கிலிக்கன், மெதடிஸ்ற், தென்னிந்திய திருச்சபை, பப்ரிஸ்ற் திருச்சபை போன்ற பெரிய திருச்சபைகளோடு ஒன்றிப்பை, புரிந்துணர்வை வளர்க்கின்ற வாரமாகவே இந்த கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது. Fundamental Sects என்று அழைக்கப்படுகின்ற அடிப்படைவாதக் குழுக்கள் அல்லது பெந்தகோஸ்து சபைகளோடு கத்தோலிக்க திருச்சபைக்கு அதிகாரபூர்வமான ஒன்றிப்பு முயற்சிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.



### பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரை ஸ்தலம்

## புனரமைப்பு நடவடிக்கை

பெரியகட்டு புனித அந்தோனியார் யாத்திரைத்தலம் பல ஆண்டுகள் விசுவாச வரலாறு கொண்ட, புதுமைகள் நிறைந்த ஸ்தலமாகும். இத்திருத்தலம் போரினால் பாதிக்கப்பட்டு பல ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டில் 07.08.2011 அன்று பல்லாயிரக்கணக்கான மக்களோடு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த யாத்திரைத் தலத்தைப் புனரமைத்து புதிய ஆலயத்தைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வையும் ஆயர் நிறைவு செய்தார். எந்தவிதமான வசதியும் இல்லாத இவ்விடத்தை புனரமைத்து மக்களின் விசுவாச வாழ்வில் ஒளியேற்ற உங்கள் நிதியுதவியையும்



செபத்தையும் எதிர்பார்க்கிறோம்.

புனித அந்தோனியாரின் பரிந்துரை நிறைவாகக் கிடைக்க நன்றியோடு பிரார்த்திக்கிறோம்.

- அருட்பணி. அலெக்ஸ்சாண்டர் (பெனோ), பங்குத்தந்தை,
புனித அந்தோனியார் ஆலயம்,
செட்டிகுளம்.

தொலைபேசி இல. :
024 - 2260921, 0718612625
வங்கிக் கணக்கு விபரம் :
A/C No : 1-0049-01-8608-2
National Savings Bank (NSB)
Rev. D. Alexander Silva,
Parish Priest,
St. Antony's Church,
Cheddikulam.

மறைக்கல்வி ஆண்டு
"மகிழ்வோடு மறைக்கல்வியை அனைவரும் அறிந்திடுவோம்"

மறைசாட்சியினரின் மண்ணாம் தோட்டவெளிக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு
31 ஆண்டுகள் நிறைவு விழா

தோட்டவெளி மறைசாட்சியர் அன்னை ஆலயத்தில்
மன்னார் ஆயர்
மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தலைமையில்
விழாத்திருப்பலி

காலம் : 28.01.2012 (சனிக்கிழமை)
நேரம் : காலை 7.30 மணிக்கு
அனைவரும் வருவீர்! அன்னையின் ஆசீர் பெறுவீர்!

- போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
- விளையாட்டு, வினோத பொருட்களுக்கான விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.



தோட்டவெளிப் பங்குத்தந்தை
அருட்பணி. ஞானராஜ் குருஸ் (நேரு)

### மன்னார் குருக்களின் வருடாந்த தியானம்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான 2012ஆம் ஆண்டின் வருடாந்தத் தியானம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி (ஞாயிறு) இரவு 9.00 மணிக்கு பரிசுத்த ஆவியின் பாடலோடு ஆரம்பமாகும். மடுத்திருப்பதியில் உள்ள தியான இல்லத்தில் இத்தியானம் நடைபெறும். 27ஆம் திகதி (வெள்ளி) பகல் 1.00 மணிக்கு இத்தியானம் நிறைவுபெறும். இவ்வாண்டு மறைக்கல்வி ஆண்டாக இருப்பதனால் இத்தியானத்தின் கருப்பொருளும் மறைக்கல்வியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தியானம் வெற்றிகரமாக நடைபெற செபிக்கும்படி மன்னா இறைமக்களை வேண்டி நிற்கின்றது.

### இளம் குருக்களின் மகிழ்வுச் சுற்றுலா

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இளம் குருக்கள் 21 பேர் ஜனவரி இரண்டாம் வாரத்தில் மூன்று நாள் மகிழ்வுச் சுற்றுலாவை மேற்கொண்டு கண்டி, நுவரெலியா, கற்றன் ஆகிய இடங்களுக்குச் சென்று வந்துள்ளனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

### ஜெரோம் லெம்பேட் அடிகளாருக்கு புதிய பணித்தளம்



அமதிகளின் ஆன்மீகக் கல்வி நிறுவனமான ஞானோதயத்தின் இயக்குனராக கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணியாற்றிய ஜெரோம் லெம்பேட் அடிகளார் ஜனவரி 15ஆம் திகதியுடன் தன் பணிகளை மன்னாரில் நிறைவுசெய்துகொண்டு தனது புதிய பணித்தளமாகிய யாழ் மாகாண இல்லமாகிய 'தொடர்பகம்' இல்லத்திற்கு முதல்வராகச் செல்கிறார்.

சிறந்த மறையுரையாளராகிய இவர் மற்றவர்களோடு இனிமையாகப் பழகும் சுபாவம் கொண்டவர். தனது நகைச்சுவையினால் சூழ இருப்பவர்களை மகிழ்ச்சியில் மூழ்கடிப்பவர். அடிகளார் மன்னாரில் இருந்த காலத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தோடு இணைந்து பலவித தமிழ்ப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி தமிழ் வளர்த்த சான்றோராகத் திகழ்கின்றார். புதிய பணிப்பொறுப்பை ஏற்கும் அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக இறையாசி வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி ஆண்டு

## யாழ், திருமலை - மட்டுநகர், மன்னார் ஆயர்களின்

# சுற்றுமடல்

யாழ்ப்பாணம், திருமலை - மட்டுநகர், மன்னார் ஆகிய மூன்று தமிழ் மறைமாவட்டங்களும் ஒன்றுசேர்ந்து இவ்வாண்டை (2012) மறைக்கல்வி ஆண்டாகக் கொண்டாடுகின்றது. இதையொட்டி யாழ்ப்பாணம், திருமலை - மட்டுநகர், மன்னார் ஆயர்கள் எழுதிய சுற்றுமடலை இங்கே தருகின்றோம்.



யாழ் ஆயர்
தோமஸ் ஆண்டகை



திருமலை மட்டுநகர் ஆயர்
கிங்சிலி ஆண்டகை



மன்னார் ஆயர்
யோசப்பு ஆண்டகை

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவில் அன்புமிகு அருள்பணியாளர், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் யாழ், திருமலை - மட்டுநகர், மன்னார் மறைமாவட்ட ஆயர்களாகிய நாம் ஒன்றிணைந்து இவ்வாண்டினை மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தி எழுதும் முதல் மேய்ப்புப்பணிச் சுற்றுமடல்.

### முன்னுரை:

திருச்சபையில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு எதிர்வரும் வழிபாட்டு ஆண்டை விசுவாசத்தின் ஆண்டாக திருத்தந்தை அறிவித்துள்ளார். **(இவ்விசுவாச ஆண்டானது 2012ம் ஆண்டு அக்டோபர் 11ம் திகதி தொடங்கி, கிறிஸ்து அரசர் பெருவிழாவாகிய 2013ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி நிறைவடையும்.)** அத்துடன் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு - (CCC), வெளியிடப்பட்டதன் 20ம் ஆண்டு அக்டோபரில் நிறைவடைவதால், இந்த விசுவாச ஆண்டு அக்டோபரில் தொடங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்). எனவே விசுவாச ஆண்டிற்கான முன். ஆயத்தமாகவும், அண்மித்த ஆயத்தமாகவும் இருக்க இந்த ஆண்டினை (2012) மறைக்கல்வி ஆண்டாக எமது மூன்று மறைமாவட்டங்களிலும் பிரகடனப்படுத்தி, மறைக்கல்வியின் அவசியத்தையும் சிறப்பையும் மேலும் உணர்ந்துகொள்ளும் பொருட்டும், மறைக்கல்விப் பணியை சகல மட்டத்திலும் உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து, விரிவுபடுத்தி உன்னத நிலைக்குக் கொண்டுவரக்கூடிய சகல முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளும்படி அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

### மறைக்கல்வியின் மாண்பும் அவசியமும்

திருமுழுக்கின்போது நாம் பெற்றுக்கொண்ட இறைநம்பிக்கை என்ற விதையானது சிறியோர், இளையோர், முதிர்நிலையினர் என மனித வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் படிப்படியாக வளர்ச்சிபெற்று முதிர்ச்சியடைந்து கனிதரச்செய்யும் கல்வியே மறைக்கல்வியாகும். அதாவது ஒவ்வொருவரும் "கிறிஸ்துவோடு இணைந்து முதிர்ச்சிநிலை பெற வேண்டும்" (கொலோ. 1:28); கிறிஸ்துவின் மதிப்பீடுகளுக்குச் சான்றுபகரும் நம்பிக்கை முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக வளர வேண்டும் என்பதையே மறைக்கல்வி இலக்காகக் கொண்டுள்ளது.

இத்தகைய சிறப்புக்களைப் பெற்ற மாண்புமிக்க மறைக்கல்வியை மேலும் மெருகூட்டும் வகையில் "எல்லாருக்கும் மறைக்கல்வி" என்ற விருதுவாக்குடன் இந்த ஆண்டு கொண்டாடப்படும். எனவே மறைக்கல்வியின் மாண்பையும் அவசியத்தையும் அனைவரும் உணர்ந்து, கற்போரும் கற்பிப்போரும் ஆர்வத்துடன் தங்களையே அர்ப்பணித்திட மறைக்கல்வி ஆண்டு உற்சாகப்படுத்தி ஊக்குவிக்குமென நாம் எதிர்பார்க்கிறோம்.

விசுவாச வாழ்வுக்கு உயிர்த்துடிப்பைப் போன்றுள்ள மறைக்கல்விப் பணியை நெறிப்படுத்தவும் ஊக்குவிக்கவும் சிந்திக்க விளைகின்ற இக்காலத்திலே நாம் கருத்தில் கொள்ளவேண்டிய மூன்று விடயங்களையும் உங்கள் சிந்தனைக்கு முன் வைக்கின்றோம்.

### அ) வாழ்க்கை அனுபவங்கள்

மனித வாழ்வில் தொடர்ந்து செல்லும் இறைவெளிப்பாட்டில் இறைவனைக் கண்டு அவரோடு உறவை ஏற்படுத்த மறைக்கல்வி வழிநடத்துகிறது. மறைக்கல்வி வேறு, வாழக்கை வேறு அல்ல. வாழ்க்கை அனுபவங்களை உள்வாங்காத மறைக்கல்வி உப்பற்ற உணவுக்கு சமமானது. வாழ்க்கை அனுபவங்கள் மூலம் வரும் இறைவெளிப்பாட்டை, இறைவார்த்தை ஒளியில் பொருள் விளக்கம் காண கற்றுத்தருகின்றது.

நம் நாட்டு மக்களிடையே தலைவிரித்தாடும் ஏற்றத்தாழ்வுகள், இலஞ்சம், ஊழல், கலப்படம் போன்ற இழிச்செயல்கள்; அரசியல்வாதிகளின் ஏமாற்றுத்தனங்கள், வன்முறைகள், அடிப்படைவாதிகளின் கேள்விக்கணைகள், குழப்பங்கள்; திருச்சபையினுள் புரையோடிக்கிடக்கும் சாதிப்பிளவுகள், பிரிவினைகள், அதிகாரப் பூசல்கள்; இறைமக்களிடம் காணப்படும் அறியாமை, ஆர்வமின்மை, விசுவாசக் குழப்பங்கள்! மூடப்பழக்கங்கள் போன்றவை மறைக்கல்விக்கு எதிராக எழும் சமகாலச் சவால்களாக உள்ளன

### ஆ) அன்பியங்கள் வழி

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 'ஆசியத் திருச்சபை' என்ற மறைத்தூது மடலில் "புதிய சமூகத்தைக் கட்டியெழுப்பும் தொடக்கமாகவும் அன்புக் கலாச்சாரத்தின் வெளிப்பாடாகவும் அமையும் அடிப்படைக் குழுக்களை (அன்பியங்களை) அமைப்பதை திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் நேர்மறை அம்சமாக அமைத்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்" (எண் 25) என அன்பியங்களை அமைக்க அழைப்பு விடுக்கின்றார். இயேசுவின் இறையாட்சி இயக்கத்திற்கு மறுவடிவம் கொடுத்த விசுவாச சமூக வாழ்க்கை முறைதான் அன்பியம். தொடக்கத் திருச்சபையும் அன்பியமாகவே உருவெடுத்தது (திப 2:42-47). ஆசிய ஆயர் பேரவையும், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையும் அன்பியங்கள் வழி புதுவிதமாய் திருச்சபையாக வாழ அழைப்பு விடுக்கின்றன. எனவே இம்மறைக்கல்வி ஆண்டிலும் அன்பியங்களை கட்டியெழுப்புவதுடன், அவற்றை ஆழப்படுத்துவதை நோக்காகக் கொண்டு மறைக்கல்வியை முன்னெடுப்போம்.

### இ) மறைக்கல்வி ஆசிரியர்கள்

மறைக்கல்வியைப்பற்றி சிந்திக்கும்போது மறைக்கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களை நாம் மறந்துவிட முடியாது. திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் 'இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்' என்ற மடலில் மறைக்கல்வி ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, தியாகம், பற்றி எரியும் ஆர்வம், தாராள மனம் இவற்றிற்காக நன்றியுடன் நினைவுகூர்கிறார் (எண் 66). திருத்தந்தை 12ம் பத்திநாதர் "குருத்துவத்திற்கு அடுத்ததாக மிக மேலான நிலையை உடையவர்கள் மறைக்கல்வி ஆசிரியர்களே. ஏனெனில் மீட்பு அலுவலைத் தொடர்ந்து ஆற்றுபவர்கள் இவர்களே!" என்கிறார். எனவே இம்மறைக்கல்வி ஆண்டிலே மறைக்கல்வி ஆசிரியர்களின் தெரிவு, பயிற்சி, உருவாக்கம், தொடர் உருவாக்கம் என்பவற்றை கருத்தில் கொண்டு அதற்கு தேவையானவற்றை செயல்முறைப்படுத்துவோம்.

"எல்லாருக்கும் மறைக்கல்வி" என்னும் விருதுவாக்குடன் தொடங்கப்படும் இந்த மறைக்கல்வி ஆண்டின் பணிகள் அனைத்தும் நமது மறைமாவட்டங்களில் புத்தெழுச்சியூட்டி மறுமலர்ச்சிக்கு மிகவும் உதவும் என நம்புகிறோம். இந்நோக்குடன் இந்த மறைக்கல்வி ஆண்டில் நமது மறைமாவட்டங்களில் மறைக்கோட்ட ரீதியாக, பங்கு ரீதியாக பின்வருவனவற்றைச் செயல்படுத்த வேண்டும் எனப் பெரிதும் விரும்புகிறோம்:

### பங்கு ரீதியில்

❖பங்குகள் தோறும் மறைக்கல்வி மன்றங்கள் அமைத்து அவற்றைச் சிறப்பாக நடத்தி அனைவரையும் ஈடுபடுத்தி மறைக்கல்விப் பணியை மக்கள் மயமாக்குதல்.

❖ஆலயத் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் மறையுரைகளில் மறைக்கல்வி சார்ந்த தலைப்புக்களை மையச் சிந்தனையாகக் கொண்டு திட்டமிட்டுக் கொண்டாடி இறைமக்களின் நம்பிக்கை வாழ்வில் எழுச்சியை ஏற்படுத்துதல்.

❖அருட்சாதன ஆயத்தக் காலங்களில் பிள்ளைகள், பெற்றோர், ஞானப்பெற்றோருக்கு சிறப்பான முன் ஆயத்தப் பயிற்சியும், தொடர் உருவாக்கப் பயிற்சியும் வழங்குதல், அருட்சாதனங்களைப் பெறுவதற்கான முன்கூட்டிய ஆயத்தங்களையும், அண்மித்த ஆயத்தங்களையும் அன்பியங்கள் ஊடாக நடாத்த ஊக்குவித்தல்.

❖அனைத்துப் பங்குகளிலும் மறைக்கல்வி நூலகங்களை உருவாக்கி மறையறிவைப் பெற உதவும் புத்தகங்கள், கதைகள், வரலாறுகள் (தோழன், விவிலிய விருந்து, நற்கருணை வீரன்) போன்றவற்றை வாசிக்கத் தூண்டுதல்.

❖மறைமாவட்டப் பத்திரிகைகளான 'மன்னா', 'பாதுகாவலன்', 'வெட்டாப்பு', 'தொண்டன்' ஆகியவற்றை இல்லங்கள் தோறும் வாங்கிப் படிக்கத் தூண்டுதல்.

❖மறைக்கல்வியை நவீன ஊடகங்கள், தொடர்பாடல் சாதனங்கள் (தொலைக்காட்சி, கணனி போன்றவை) ஊடாக அர்த்தத்தோடு கற்பிக்க முயலுதல். புனிதர்கள் பற்றிய படங்களை (Films) அடிக்கடி காட்டுதல்.

❖ஒவ்வொரு பங்கிலும் ஞாயிறு மறைக்கல்வி சிறப்பாக நடைபெறப் பணியாளர்கள் உரிய முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

❖ஞாயிறு திருப்பலியை, விசேடமாக மறையுரையை, வளர்ந்தோர் மறைக்கல்வியின் ஊடகமாக பயன்படுத்துதல்.

### மறைக்கோட்ட ரீதியில்

❖மறைக்கல்வி ஆசிரியர்களின் மாதாந்த ஒன்றுகூடலை ஒழுங்காக நடாத்தி தொடர் உருவாக்கல் பயிற்சிகளை நடைமுறைப்படுத்தல்.

❖ பக்திச்சபைகள்/ ஆணைக்குழுக்களின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளை வளர்ந்தோர் மறைக்கல்வி வழங்கும் தளங்களாக மாற்றுதல்.

❖இளையோர், வளர்ந்தோர் மறைக்கல்வியினை முதன்மைப்படுத்தி கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடாத்துதல்.

❖பட்டிமன்றம், விவாத அரங்கு, தர்க்கப் பிரசங்கம் போன்றவற்றை ஒழுங்கு செய்தல்.

❖கருப்பொருள் அடிப்படையில் கண்காட்சிகளை ஒழுங்குசெய்தல்.

❖மறைக்கல்வி மாநாடு ஒன்று நடாத்தப்படுதல்.

### மறைமாவட்ட ரீதியில்

❖மாநாடுகள், பெருந்திரள் பேரணிகள், கண்காட்சிகள் போன்றவற்றை நடத்தி மறைக்கல்வி பற்றிய விழிப்புணர்வை பரவலாக்குதல்.

❖மறைமாவட்ட வெளியீடுகளாகிய மன்னா, பாதுகாவலன், வெட்டாப்பு, தொண்டன் போன்றவற்றில் மறைக்கல்விக்கென சிறப்புப் பக்கங்களை ஒதுக்கி நம்பிக்கை வாழ்வில் வளர்வதை ஊக்கப்படுத்துதல்.

❖வினாவிடைப் போட்டிகள்/ வினாடிவினாப் போட்டிகளை நடாத்துதல்.

❖தகுதிவாய்ந்த மறைக்கல்வி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து தமிழகத்துக்கு அனுப்பி பயிற்சி அளித்தல்.

### மறைப் பிரதேச ரீதியில்

❖மறைக்கல்வி ஆண்டுக்கான செபம், பாடல், இலச்சினை, கொடி ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்தி மூன்று மறைமாவட்டங்களிலும் மறைக்கல்வி எழுச்சியை ஏற்படுத்துதல்.

❖உள்நாட்டிலும் தமிழகத்திலுமுள்ள வளவாளர்களின் உதவியுடன் மறையாசிரியர்களின் உருவாக்கல், ஆழப்படுத்துதல் கருத்தரங்குகளை நடாத்துதல்.

❖மூன்று மறைமாவட்ட மறையாசியர்களுக்கான பொது ஒன்றுகூடல் அல்லது பிரதிநிதிகள் (பங்குகளின் மறையாசிரியர் ஒன்றிய தலைவர், செயலாளர் என்ற வகையில்) ஒன்றுகூடலை நான்கு மாதங்களுக்கு ஒரு தடவையாவது சுழற்சி முறையில் மூன்று மறைமாவட்டங்களிலும் வைத்து அனுபவப் பகிர்வுடன் பயிற்சிகளை வழங்குதல்.

❖கட்டுரை, பேச்சு, கவிதை, சுவரொட்டிப் போட்டிகள் நடாத்துதல்.

❖'ஞாயிறு மறைக்கல்விக்கான பாடத் திட்டத்தினை மூன்று மறைமாவட்டங்களுக்கும் பொதுவாகத் தயாரித்து பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

❖ஒவ்வொரு தரப்பினருக்கும் (இளையோர், வளர்ந்தோர், முதியோர்) தனித்தனிப் பாடத்திட்டங்களை தீட்டுவது. இப்பாடத்திட்டத்தில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (CCC) ஏட்டின் உள்ளடக்கங்களை உள்வாங்குதல்.


❖முதியோர், மாற்றுத் திறனாளிகள், புறந்தள்ளப்பட்டோருக்கான மறைக்கல்விக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

அன்பார்ந்த இறைமக்களே, பல வழிகளில் மறைக்கல்விக்கு முதலிடம் கொடுத்து பணியாற்றி மறைக்கல்வியின் தந்தை என அழைக்கப்படும் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் வெளியிட்ட 'இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்' என்ற சுற்றுமடலில் "திருச்சபை மறைக்கல்வியை தனது புனிதக் கடமையாகவும், விட்டுக்கொடுக்க முடியாத உரிமையாகவும் எக்காலத்திலும் கருதி வந்துள்ளது" (எண் - 14) என மறைக்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். எனவே நாமும் இதன் மாண்பினை உணர்ந்தவர்களாக மறைக்கல்விப் பணியை ஒரு கூட்டு முயற்சியாக எடுத்து எமது மூன்று மறைமாவட்டங்களிலும் மறைக்கல்வி மறுமலர்ச்சி காண ஒத்துழைப்போம்.

இறைவன் உங்கள் அனைவரையும்
ஆசீர்வதிப்பாராக.

*மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், யாழ்ப்பாண ஆயர்.*
*மேதகு கி. சுவாம்பிள்ளை, திருமலை- மட்டுநகர் ஆயர்.*
*மேதகு இராயப்பு யோசேப்பு, மன்னார் ஆயர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

### சேவியர் குரூஸ் அடிகளார் எளிமையான தோற்றமும் அமைதியான சுபாவமும் கொண்டவர்

# சிக்கலான சூழ்நிலையிலும் நிதானமாக செயலாற்றக்கூடியவர்!

## பொன்விழாச் செய்தியில் மன்னார் ஆயர் பெருமிதம்

சேவியர் குரூஸ் அடிகளார் எளிமையான தோற்றமும் அமைதியான சுபாவமும் கொண்டவர். யாரும் இலகுவில் அணுகக்கூடியவர். எப்படிப்பட்ட சிக்கலான சூழ்நிலையிலும் நிதானமாக செயலாற்றக்கூடியவர். கடந்த ஐம்பது வருட குருத்துவப் பணிவாழ்வில் அவர் பல்வேறு பணிகளை சிறப்பாக மேற்கொண்டு இறையரசு இம்மண்ணில் மலர தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ளார். பங்குத்தந்தையாக, குருமுதல்வராக, மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் தலைவராக, எதிர்காலக் குருக்களின் உருவாக்குனராக அவர் ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை ஆகும் என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழா தொடர்பாக வெளியிட்டுள்ள வாழ்த்துச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ஆயர் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குருத்துவ வாழ்வில் 50 வருடங்களை நிறைவுசெய்து பொன்விழாக் காணும் அருட்தந்தை சேவியர் குரூஸ் அடிகளாரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன். பணிக்குருத்துவ வாழ்வில் அரை நூற்றாண்டு என்பது மிகப்பெரிய காலப்பகுதியாகும். குருத்துவ வாழ்வின் பல்வேறு அனுபவங்களுடாக நீண்ட பயணம் செய்து அரைநூற்றாண்டை எட்டிப்பிடித்திருக்கும் இவ்வேளையில் அருட்தந்தையின் உள்ளம் நன்றியால் நிறைந்திருக்கும் என்பது திண்ணம். இத்தனை வருடங்களாக அருட்தந்தை அவர்களைக் காத்து வழிநடத்திவந்த எல்லாம்வல்ல இறைவனுக்கு அவருடன் சேர்ந்து நானும் நன்றிகூறுகின்றேன்.

புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டத்தில் இளம் குருக்களே அதிகமாக இருந்த சூழ்நிலையில் ஒரு மூத்த குரு என்ற வகையில் அடிகளாரின் பிரசன்னமும், அறிவுரைகளும், ஆலோசனைகளும் இளம் குருக்களுக்கு மிகவும் தேவையானதாக இருந்தது.

மன்னார் மறைமாவட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து 25 வருடங்கள் அவர் குருமுதல்வராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். மன்னாரின் முதல் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கும் பின்னர் எனக்கும் மறைமாவட்டத்தை வழிநடத்தும் பாரிய பணியில் பல்வேறு விதங்களில் உதவியாக இருந்துள்ளார். மறைமாவட்டம் சார்பாக மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கவேண்டிய சூழ்நிலைகளில் அவரின் ஆலோசனைகள் எனக்கு பெரிய உதவியாக இருந்துள்ளது. தனிப்பட்ட முறையில் எனக்கும் பொதுவாக மறைமாவட்டத்திற்கும் அவர் செய்த அனைத்துப் பணிகளுக்கும் இந்த அருமையான சந்தர்ப்பத்தில் மீண்டும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொன்விழா ஆண்டில் அடிகளாருக்கு இறைவனின் திருக்கர ஆசீர் நிறைவாகக் கிடைக்கவேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறேன். நிறைவான உடல் உள ஆன்ம நலத்தோடு இன்னும் பல்லாண்டுகள் அவர் இறையரசில் பணியாற்ற வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

## வங்காலையில் இடம்பெற்ற சேவியர் குரூஸ் அடிகளாரின் பொன்விழா நிகழ்வுகள்

### யாழில் இருந்து பெருந்தொகையான குருக்கள் பங்கேற்பு

அருட்பணி சேவியர் குரூஸ் அடிகளாரின் குருத்துவப் பொன்விழா நிகழ்வுகள் கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் திகதி காலை 10.00 மணியளவில் வங்காலை புனித ஆனாள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது. ஆலய வளாக முன்றலில் இருந்து பாண்ட் இசையுடன் விழா நாயகரும் ஆயர்களும் குருக்கள் துறவியரும், விருந்தினர்களும் அழைத்துவரப்பட்டனர். பின்னர் பொன்விழா நன்றித் திருப்பலி இடம்பெற்றது. அதைத்தொடர்ந்து ஆலயத்திற்குள்ளேயே சிறிய பாராட்டு வைபவம் இடம்பெற்றது. யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகை, மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை போன்றோர் வாழ்த்துரை வழங்கினர்.



வங்காலைப் பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார்

சேவியர் குரூஸ் அடிகளாரிடம் சிறிய குருமடத்தில் கல்வி கற்ற மாணவர்கள் என்ற வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவான குருக்கள் இவ்விழாவிற்கு வருகை தந்தமை சிறப்பு அம்சமாகும்.
(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## பேசாலை ஆலயத் திருவிழாவும் பங்கு மேய்ப்புப்பணி மாநாடும்

பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத் திருவிழா கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி வெகு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை விழாத்திருப்பலியை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.
(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)



பேசாலைப் பங்குத்தந்தை அவிதப்பர் அடிகளார்

## மடுவீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செபமாலை அன்னை ஆலயம்

மடு வீதிச் சந்திக்கு அருகாமையில் பிரதான வீதியில் இருந்த புனித செபமாலை மாதா ஆலயம் போர்க்கால சூழ்நிலையில் முற்றாக சேதமடைந்திருந்தது. இந்நிலையில் இந்த ஆலயம் முற்றுமுழுதாக புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றுள்ள நிலையில் இதன் திறப்பு விழா நிகழ்வு கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்தை திறந்துவைத்து ஆசீர்வதித்தார்.

மடுப்பரிபாலகர் எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் மற்றும் உதவிப் பரிபாலகர் ரூபன் குரூஸ் ஆகியோர் இந்த நிகழ்வை சிறப்பாக ஒழுங்குசெய்திருந்தனர். புதிதாகக் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ள இந்த ஆலயம் மன்னார் பிரதான வீதியில் கம்பீரமாக அழகுறக் காட்சியளிக்கின்றது.

## மன்னார் பேராலயத் திருவிழா

மன்னார் மறைமாவட்டத்தின் புனித செபஸ்தியார் பேராலயத் திருவிழா ஜனவரி 20ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் கடந்த 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நவநாள் மறையுரையாளராக இந்தியாவில் இருந்து அருட்திரு. ம. சாள்ஸ் வரவழைக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவின் பாளையங்கோட்டையில் உள்ள தூய யோசப் கல்வியியற் கல்லூரியின் செயலராக உள்ளார்.

தமது பங்குத்திருவிழாவைக் கொண்டாடும் மன்னார் பேராலயக் குருக்கள், பங்குமக்கள் அனைவருக்கும் மன்னாவின் வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!



சித்திரவதைக்கு உள்ளாக்கப்படும் புனித செபஸ்தியாரின் திருவுருவம்

## திருவழிபாட்டு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் குருக்கள் துறவியருக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் மற்றும் இருபால் துறவியருக்கான கரோல் மற்றும் கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 19.12.2012 அன்று மன்னார் பேராலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பெருந்தொகையான குருக்கள் துறவியர் கலந்துகொண்டனர்.

குருமுதல்வர் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து நடன ஆசிரியை சுகிர்தா அவர்களின் மாணவிகளினால் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. வருகைதந்திருந்த பல்வேறு துறவற சபைகளினாலும் கரோல் பாடல்கள், இறைவார்த்தை, திருப்பாடல், கிறிஸ்மஸ் செய்தி போன்றவை வழங்கப்பட்டன. இந்நிகழ்வின்போது மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனரும் மறைமாவட்ட நிதியாளருமாகிய அருட்பணி. எஸ். அன்ரன் அவர்களினதும், குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களினதும் முயற்சியில் இந்த கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.



அருட்திரு. எஸ். அன்ரன்

## வவுனியா வின்சன் டி போல் சபையினரின் விற்பனை நிலையம்

வவுனியா புனித அந்தோனியார் பங்கின் புனித வின்சென் டி போல் சபையின் வளர்ந்தோர் பந்தியினரும் பாடசாலை பந்தியினரும் இணைந்து 11.12.2011 அன்று காலை உணவு விற்பனை நிலையம் ஒன்று நடாத்தினர். இதிலிருந்து பெற்றுக்கொண்ட வருமானத்தை ஏழைகள் மற்றும் அனாதைகளுக்கு வழங்க முன்வந்துள்ளனர். இந்நிகழ்வில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

தகவல் : வவுனியா பங்கின் புனித வின்சென் டி போல் சபைப் பொருளாளர், ஏ. ஜே. சவுந்தரநாயகம்.

## வவுனியா சிறைச்சாலையில் ஒளிவிழா

கடந்த 18.12.2011 அன்று வவுனியா சிறைச்சாலை முன்றலில் அருட்தந்தை யோண்சன் (அமதி) அடிகளார் தலைமையில் ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெற்றன.

சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியின் அனுமதியுடனும் ஏனைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும் High five என்று அழைக்கப்படுகின்ற இசைக்குழுவினரின் ஒலி, ஒளி அமைப்புடனும், அருட்தந்தை விமல் அடிகளாரின் உதவியுடனும் அன்னை திரேசா அருட்சகோதரிகளின் இனிமையான பாடல்கள் மத்தியிலும் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக வருகை தந்த அருட்தந்தை விமல் அடிகளார் நத்தார் சிறப்புரை நிகழ்த்தியதுடன் இனிய பாடல்களைப் பாடி கைதிகள் அனைவரையும் மகிழ்வித்தார்.



*ஜோண்சன் (அமதி) அடிகள்*

அதுமட்டுமன்றி அன்னை திரேசா அருட்சகோதரிகளின் பாடல்களோடு, High five இசைக்குழுமத்தின் பாடல்களும் இன்னும் சிறப்பாக நிகழ்ச்சியை நடாத்த உதவியது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து சிறைக் கைதிகளுக்கும் சிற்றுண்டி குளிர்பானங்கள் வழங்கப்பட்டதுடன் கைதிகளின் நலன் கருதி ஆண் பெண் இருபாலாருக்குமான உடைகளும் வழங்கப்பட்டன. இவற்றை அன்னை திரேசா அருட்சகோதரிகளே அன்பளிப்பாக வழங்கினர்.

## மடுவில் 500 புதிய மலசலகூடங்களை அமைக்கும் திட்டம்

மடுத்தேவாலய வளாகத்தினுள் அடிப்படைச் சுகாதார வசதிகளை விரிவாக்குவதற்காக 500 புதிய மலசல கூடங்களை அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்காக பொதுமக்களின் உதவி கோரப்படுகின்றது. அலகொன்றிற்கான செலவு ரூபா 50,000. மொத்தச் செலவு 50,000 ரூபா x 500 = 25 மில்லியன். இச்செயற்திட்டத்திற்கான பங்களிப்பை மடுத்தேவாலயத்தில் ஒப்படைத்து அதற்கான பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம். அல்லது உங்கள் பங்களிப்பை இலங்கை வங்கிக் கிளைகள் ஊடாக, "மடுத்திருத்தல அபிவிருத்தி நிதியம்," என்னும் பெயரில் இலங்கை வங்கி மன்னார் கிளையில் நிர்வகிக்கும் கணக்கு இலக்கம் 71919373க்கு வைப்புச் செய்யலாம் என மடு நிர்வாகம் அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கல்வி ஆண்டையொட்டிய சிறப்புக் கட்டுரைத் தொடர் ①

# மறைக்கல்வி - ஓர் அறிமுகம்

*அருட்பணி. ஆ. செபஸ்தியான்,*
*தமிழக மறைக்கல்விச் செயலர்.*



***1. மறைக்கல்விதானே! அல்ல மறைக்கல்வி தேனே...!***

இந்தியத் தலத் திருச்சபை வரலாறு படைக்கிறது. இந்திய இலத்தீன் ஆயர் பேரவையின் 23-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் சென்னை பூந்தமல்லி திருஇருதயக் குருமடத்தில் 2011 சனவரி மாதம் 6 - ஆம் தேதி முதல் 12 ஆம் தேதிவரை நடைபெற்றது. நமது ஆயர்கள், "வலிமையான இந்தியத் திருச்சபைக்கு மறைக்கல்வியில் மறுமலர்ச்சி அவசியம்" என்ற தலைப்பில் சிறப்பாக சிந்தித்தார்கள். மேலும் "இந்திய மறைக்கல்வி வழிகாட்டி" ஒன்றை ஆய்வு செய்து இந்தியத் திருச்சபைக்குப் புதிய வழிகாட்டுதலை முன் வைத்துள்ளார்கள்.

நமது நம்பிக்கை வாழ்வின் அதிகாரப்பூர்வ ஆசிரியர்களாகவும் நம் மறைமாவட்டங்களின் முதன்மை ஆசிரியர்களாகவும் உள்ள நமது ஆயர்கள் மறைக்கல்வியில் மறுமலர்ச்சி கொண்டுவர உறுதி அளித்துள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் மறைக்கல்வியியல் பற்றி உங்களோடு தொடர்ந்து பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த மன்னா பத்திரிகைக்கு நன்றி.

***1. மறைக்கல்வியின் அவசியம்***

மறைக்கல்வி திருச்சபையின் வாழ்விலுமீ பணியிலும் முக்கியமானதொரு இடத்தைக் கொண்டு உள்ளது. இது ஓர் இறைவார்த்தைப் பணியாகும். இது திருமுழுக்குப் பெற்ற அனைவரையும் நம்பிக்கை வாழ்வில் ஆழப்படுத்தி உறுதிப்படுத்துகிறது. அதாவது நம்பிக்கை வாழ்வில் முதிர்ச்சியைக் கொண்டுவருகிறது. இந்த நம்பிக்கை வாழ்வின் பயிற்சி தொட்டில் முதல் இறப்புவரைத் தொடர்கிறது.

தொடக்கத்தில் மறைக்கல்வி என்பது நம்பிக்கையின் கோட்பாடுகளை சிறுவர்க்கு கற்றுக்கொடுப்பது என்ற நிலை இருந்தது. அதனால் மறைக்கல்வி என்றாலே அது சிறுபிள்ளைக்குரியது அல்லது மறைக்கல்விதானே...!! என்ற நிலை இருந்தது.

இன்று மறைக்கல்வி கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கை வாழ்வில் தொடர் பயிற்சி பெறவும், வளரவும், வாழவும் உறுதுணையாக உள்ள ஒரு பயிற்சிப் பாசறையாக உருப்பெற்றுள்ளது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவைப் பதியச் செய்து கிறிஸ்துவாகவே வாழ வழி காட்டுகிறது. இது ஓர் இறைவார்த்தைப் பணி. இது கிறிஸ்தவ வாழ்வின் மையமும் நம்பிக்கையுமாகும். நம்பிக்கை என்பது கடவுள் அன்புக்குப் பதில் மொழியாகும். மறைக்கல்வி நமது கிறிஸ்தவ குழுமத்தை இந்த நம்பிக்கையில் உறுதிபெறச் செய்து கட்டி எழுப்புகிறது.

***1.1. மறைக்கல்வியின் பொருள்***

'பொது மறைக்கல்வி வழிகாட்டி' மறைக்கல்வி என்பது திருச்சபையின் செயற்பாட்டையும், திருச்சபை சமூகத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் நம்பிக்கை வாழ்வில் முதிர்ச்சிபெறுவதையும் குறிக்கிறது. மேலும் 'கத்தோலிக்க மறைக்கல்வித் தொகுப்பேடு' மற்றும் 'இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்' போன்ற ஏடுகள் பின்வருமாறு மறைக்கல்வியை விவரிக்கின்றன. "மறைக்கல்வி என்பது நம்பிக்கையின் போதனையாகும். சிறுவர்களுக்கும், இளையோருக்கும், முதிர் வயதினருக்கும் சிறப்பாக கிறிஸ்தவ கோட்பாடுகளையும் பொதுவாக முறையாக மற்றும் தெளிவாகக் கற்று கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு அழைத்துச் செல்லும் நோக்கோடு கொடுக்கப்படுவதாகும்." மறைக்கல்வி கிறிஸ்தவர்களின் நம்பிக்கை வாழ்வின் முதிர்ச்சிக்கும் உலக வாழ்வில் சாட்சியம் பகர்வதற்கும் உதவுகிறது. இது கடவுளின் திருமகனில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கையிலும் ஞானத்திலும் இணைந்து வாழ உதவுகிறது.


***1.2 மறைக்கல்வி என்ற மூலச்சொல்***

மறைக்கல்வி என்பது கிரேக்க மூலச்சொல் "காத்தெஷென்" அதாவது 'மேலிருந்து வரும் ஒலி' என்பதைக் குறிக்கிறது. கிரேக்க சூழமைவில் இந்த வார்த்தை கவிஞர்கள் மேடையில் இருந்தவாறு மக்களை நோக்கிப் பாடுவதைக் குறிக்கிறது. பொதுவாக இது இரண்டு பொருள்களைக் கொண்டுள்ளது. முதலாவது ஒன்றை மற்றவரிடம் கூற நினைவுகூர்வது. இரண்டாவது ஒன்றை மற்றவர்க்கு கற்பிப்பது. புதிய ஏற்பாட்டில் சில இடங்களில் நாம் "வாய்மொழி போதனை" என்பதைப் பார்க்கிறோம். உதாரணமாக (லூக் 1:4; திப 18:25; உரோ 2:18; 1 கொரி 14:19 மற்றும் கலா 6:6) போன்ற இடங்களில் காணலாம்.

விவிலியத்தில் வேறு சில பொதுவான சொற்கள் காணப்படுகின்றன. "தீதாகெய்ன்" அல்லது "தீதாகே" என்பது போதித்தல் அல்லது போதிப்பது என்பதைக் குறிக்கிறது. தீதாகெய்ன் என்பது இயேசுவின் போதனையைக் குறிக்கிறது. கிரேக்க மரபில் தீதாகெய்ன் என்பது மெய்யியலாளர்களின் அதிகாரப்பூர்வ போதனையை வலியுறுத்துகிறது. எனவே தீதாகெய்ன் ஒரு அதிகாரப்பூர்வ போதனையாகும். அதே நேரத்தில் "காதெகெய்ன்" என்பதும் ஒருவருக்கு அதிகாரப்பூர்வமான போதனையை அளிப்பதாகும். புனித பவுல் அடிகளார் இயேசுவின் போதனைக்கும் திருத்தூதர்களின் போதனைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை குறிக்க காதெகெய்ன் என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். அதாவது ஆண்டவர் இயேசுவின் போதனையை திருத்தூதர்கள் அறிவிப்பதாகும். இன்று திருச்சபை இந்த வார்த்தையை கிறிஸ்தவ போதனையின் ஒரு குறிப்பிட்ட வழியாகக் காண்கிறது.

எனவேதான் மறைக்கல்வி வாழ்க்கையை நம்பிக்கைக்கும், நம்பிக்கையை வாழ்க்கைக்கும் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தலத் திருச்சபைகள் மற்ற எல்லாக் காரியங்களையும்விட மறைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மறைக்கல்விதானே என்று ஏனோதானோ என்று இல்லாமல் மறைக்கல்வி தேனே! என்று போற்றிப் பாதுகாத்து அப்பணியைச் செவ்வனே செய்ய மறைக்கல்வியியலை அறிவோம். (தொடரும்)

## சலேசிய அருட்தந்தையர்களை வாழ்த்துகிறோம்



இம்மாதம் (ஜனவரி) 29ஆம் திகதி தமது திருவிழாவைக் கொண்டாடும் சலேசிய அருட்தந்தையர்களை அன்போடும் மகிழ்வோடும் வாழ்த்துகின்றோம். இளைஞர் பணியை தமது இதயப் பணியாகச் செய்துவரும் அவர்களின் பணி வாழ்வு சிறக்க இறையருள் வேண்டுகிறோம்.

- மன்னா நிர்வாகம்

## கண்டி தேசிய குருமடம் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகத்தின்

# கலை விழா நிகழ்வுகள்

கண்டியில் உள்ள இலங்கை மாதா தேசிய குருத்துவக்கல்லூரியின் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ்க் கழகமானது 2011 - 2012 ஆம் கல்வி ஆண்டிற்கான தனது 57வது கலை விழாவினை தேசிய குருத்துவக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் மார்கழி நான்காம் திகதி வெகுவிமரிசையாக கொண்டாடி மகிழ்ந்தது. இத்தமிழ் மன்றமானது "மறை வளர மொழி வளர்ப்போம்" எனும் தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்டு தலைநிமிர்ந்து நிற்கிறது என்பது எமக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கின்றது.

புதிய மேலாளராக பதவியேற்றுள்ள மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை பி. கிறிஸ்துநாயகம் தலைமையில் குருமடத்தின் தமிழ்ச் சகோதரர்கள், துறவற சபை சகோதரர்களுடன் இணைந்து "திருமறை காத்த தமிழ் மொழி" என்ற தலைப்பில் சிறந்தவிதமாக கலை விழா நிகழ்வுகளை நடாத்தி அனைவரது பாராட்டுக்களையும் பெற்றனர். கலை விழாவின் சிறப்பு நிகழ்வாக விசேட உரையாற்ற அழைக்கப்பட்டிருந்த திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட குருவாகிய அருட்தந்தை ரமேஷ் கிறிஸ்டி அடிகளார், "மறையுரையில் கவிதையின் பங்களிப்பு" எனும் தலைப்பில் மார்கழி மூன்றாம் திகதி பி. ப. 3.30 மணிக்கு மிகவும் பயனுள்ள விதத்தில் விசேட உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மீண்டும் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்ட சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் நூலகமானது கழக மேலாளர் அருட்தந்தை கிறிஸ்துநாயகம் அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது. அன்றைய தினம் சிறப்பு மாலை வழிபாடு தமிழ் மொழியில் நடைபெற்றமை ஒரு விசேட அம்சமாகும்.

அருட்தந்தை ரமேஷ் கிறிஸ்டி அடிகளார் தலைமையில் தமிழ் கலாச்சாரத் திருப்பலி நான்காம் திகதி காலையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய நாளின் இறுதி நிகழ்வான கலை விழாவானது தமிழ்க்கலையின் சிறப்பையும், பாரம்பரியத்தையும் எடுத்தியம்புவதாகவும் அமைந்திருந்தது. தமிழ் கலாச்சாரத்தை பறைசாற்றும் நடனங்களும், நாடகம், காட்சி கானமும் மற்றும் இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்வுகளும் கலை விழாவை அலங்கரித்து நின்றன. பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக இருக்கும் கலாநிதி வ. மகேஸ்வரன் அவர்கள் தனது உரையில் கிறிஸ்தவர்கள் தமிழுக்காற்றிய அளப்பரிய சேவைகளைப்பற்றி சான்றுகளுடன் எடுத்துக்கூறினார். இவ்வாறு கலை விழா நிகழ்வுகள் பொருள் மிக்கதாகவும், பயனுள்ளதாகவும் தமிழின் மேன்மையை எடுத்துக்கூறுவதாகவும் அமைந்திருந்தது.

## குருத்துவ வாழ்வில் ஐம்பதாவது வருட நிறைவினைக்கொண்டாடும்

# சேவியர் குரூஸ் அடிகளாரின் குடும்ப வரலாற்றுப் பின்னணி

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
(உதவிக் கல்விப்பணிப்பாளர் - தமிழ்) வங்காலை.



கலைவளமும், கரைவளமும், கல்வி வளமும், கடல்வளமும் நிறைந்த வங்காலைப் பதியின் குருக்கள் வரிசையில், மூன்றாவது முத்தாக உதித்தவர்தான் அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளார். இவரின் குருத்துவப் பொன்விழாவை காணுகின்ற வங்கத்தாய், தங்கத்தாய் அன்னை ஆனாள் இன்று அகம் மகிழ்கின்றாள், ஆனந்தக் களிநடனம் புரிகின்றாள்.

"வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி" என்ற பாடலடியுடன் அருட்பணி சேவியர் குரூஸ் அடிகளாரின் குடும்ப வரலாற்றுப் பின்னணியை பகர்கின்றேன்.

சேவியர் குரூஸ் அடிகளார் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பிரான்சிஸ் சின்னப்பு குரூஸ், ஞானப்பு சிசிலியா டயஸ் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். இவர் குடும்பத்திலே நான்காவது நபராகும். மூத்த சகோதரன் டொன் பொஸ்கோ, இரண்டாவது சகோதரி கெலன். இவர்கள் இருவரும் 5 வயதிலே இறந்துவிட்டனர். மூன்றாவது சகோதரர் அருட்பணி விக்ரர் குரூஸ் (omi) நான்காவது அருட்பணி. சேவியர் குரூஸ், ஐந்தாவது சிறில் குரூஸ் (வெளிநாடு), ஆறாவது பத்திநாதன் குரூஸ் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், மடு வலயம்) ஆவர்.

அருட்தந்தையின், தகப்பனாரின் குடும்பப் பின்னணியை நோக்கும்போது, இவரின் தகப்பனார் போஸ்மாஸ்ரர் (அஞ்சல் முகாமையாளர்). அரச வேலையினிமித்தம் நீண்டகாலமாக நானாட்டானில் வசித்து வந்தார். இவர் ஆர்மோனியம் வாசிப்பதில் சிறந்தவர். கலை, கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்று நடிப்பவர். இவரின் தகப்பனாகிய அந்தோனியப்பு குரூஸ் பிறந்த குடும்பம் வளமான கல்வி அறிவும், ஆன்மீக வளமும் செறிந்ததாகும்.

இவரின் தகப்பனாரின் குடும்பத்தை நோக்கும்போது இவரின் தகப்பனாரின் மூத்த சகோதரன் செபஸ்ரியான் குரூஸ் ஆவார். இவருடைய பிள்ளைகள் அதிரியான் குரூஸ் (குள அதிகாரம்), அருட்சகோதரர் பப்ரிஸ் (டிலாசால் சபை), திருமதி இராசாத்தியம்மா குரூஸ் (மரியநாயகம் சோதை, கலாநிதி ஆனந்தன் ஆகியோரின் தாயார்). மற்றும் திருமதி அழகம்மா குரூஸ், (குருமுதல்வர் விக்ரர் சோசையின் தாயார்) ஆவார்.

அடுத்து அந்தோனி குருசின் 2வது சகோதரன் யோசப் குரூஸ் ஆவார். இவர் முன்னாள் பிறப்பு இறப்பு பதிவுக்காரர். நீண்டகாலம் வங்காலை புனித ஆனாள் ஆலயத்தின் வழிபாடுகளை தனது ஆர்மோனிய இசையினால் அலங்கரித்தவர். இவரின் அடுத்த சகோதரர்கள் திரு. பெலிக்ஸ் குரூஸ் (கூட்டுறவு மனேஜர்), நான்காம் நபர் அந்தோனியப்பு குரூஸ் (போஸ்ற் மாஸ்ரர்), ஐந்தாவது சகோதரன் சூசையப்பு குரூஸ் மாஸ்ரர். இவரின் பிள்ளைகள் அருட்சகோதரி அன்ரோனியா, மரியதாசன் குரூஸ் ஆசிரியர் (அமெரிக்கா), அந்தோனி குரூஸ் (இந்தியா) இவர் இளைப்பாறிய இராணுவ அதிகாரி. ஆறாவது சகோதரன் பவுலின் குரூஸ் (சம்மாட்டியார்). ஏழாவது சென்யோன் குரூஸ் (ஆசிரியர்) இவரும் சங்கீத ஆசிரியர். இவரை அடுத்து கடைசி சகோதரன் திரு பங்கிராஸ் குரூஸ் (அஞ்சல் அலுவலகர்) இவரும் ஆர்மோனியத்தில் தேர்ச்சி பெற்றவர். இவர் அருட்சகோதரி மரிய கொறற்றி, சோதி குரூஸ் (தேவபராமரிப்பு சபை), திரு. மரியநாயகம் குரூஸ் (இளைப்பாறிய ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் தகப்பனார் ஆவார்.

அருட்பணி. சேவியர் குரூஸ் அடிகளாரின் வரலாற்றுப் பின்னனி ஆழமான விசுவாசமுள்ள பரம்பரையினராகவும், துறவறம் பூத்துக் குலுங்கும் சோலையாகவும் காணப்படுகிறது.

திரு. அதிரியான் குரூஸ் குடும்பத்தில் அவருடைய மகன் அருட்சகோதரன் கிறிஸ்ரி குரூஸ் (டிலாசால் சபை) என்பவரும், அவருடைய பேரன் அருட்சகோதரன் மேவின் குரூஸ் (டிலாசால்) இவர்களும் சேவியர் குரூஸ் அடிகளாரின் வரலாற்று பின்னணிக்கு இன்னும் சிகரம் அமைத்தவர்களாக காணப்படுகின்றனர்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# அன்னை திரேசா இல்லத்தில் தவறு எதுவும் நடைபெறவில்லை

# நீதிமன்றம் தீர்ப்பு! அருட்சகோதரி எலிசா விடுதலை!

அன்னை திரேசா இல்லத்தில் தவறு எதுவும் நடைபெறவில்லை எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை எனவும் தெரிவித்த நீதிபதி, அருட்சகோதரி மேரி எலிசாவை விடுதலை செய்தார். டிசம்பர் மாதம் 15ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அன்னை திரேசா சபையினர் சார்பாகக் கூடியிருந்த ஏராளமான சட்டத்தரணிகள், குருக்கள், கன்னியர்கள் மத்தியில் இந்த முடிவைத் தெரிவித்த நீதிபதி அவருடைய கடவுச் சீட்டுக்களையும் மடத்தில் இருந்து எடுக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும், உடனடியாகத் திருப்பிக் கொடுக்கும்படியும் பணித்தார். மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் குருக்கள் கன்னியர்கள் எல்லாரும் தேவாலயத்திற்கு விரைந்து சென்று நன்றி வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையில் அன்னை திரேசா மடத்தை சோதனையிட்டு, மேற்படி சகோதரியை கைதுசெய்து பின்னர் பிணையில் விடுவித்தமை வாசகர்கள் அறிந்தவிடயமே. அரச ஊடகப் பேச்சாளர் ஒருவர், மேற்படி சம்பவத்திற்காக சிறுவர் பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே வருத்தம் தெரிவித்தாகச் சொன்னார். அமலமரித்தியாகிகளின் கொழும்பு மாகாண முதல்வர் அருட்திரு. றொகான் சில்வா கருத்துத் தெரிவிக்கையில், இந்த நாட்டில் அன்னை திரேசா சபையினர் ஆற்றும் பணியினை குறிப்பாக ஏழைகள், இயலாதவர்கள், கைவிடப்பட்டோர் மத்தியில் ஆற்றும் பணிகளை முழு உலகமே அறிந்துள்ளது என்றார்.



### என்னை கைது செய்வதற்குக் காரணமானவர்களை

## மனதார மன்னிக்கிறேன்

**விடுதலையான அருட்சகோதரி மேரி எலிசா**



விடுதலை செய்யப்பட்ட பின்னர் அருட்சகோதரி மேரி எலிசா, "என்னை சிறையில் அடைப்பதற்குக் காரணமாக இருந்த அனைவரையும் நான் மன்னிக்கிறேன்" எனத் தெரிவித்தார்.

## யாழ் ஆயர் – கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு

கனடா பாராளுமன்ற உறுப்பினர்களை யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கடந்த 09.01.2012 அன்று யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆயர் யாழ்ப்பாண நிலமைகளையும் யாழ் மக்களின் தேவைகளையும் அவர்களுக்கு விளக்கினார். இலங்கைக்கு எந்த வகையில் உதவிப் பணிகளை ஆற்றமுடியும் என்பதைக் கண்டறிவதற்காக வந்த மேற்படி குழுவினரிடம் யாழ் ஆயர் இங்கு கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. இருப்பினும் இன்னும் நிறையப் பணிகள் ஆற்ற வேண்டியுள்ளன. வீடுகள் இன்னும் கட்டப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக இளைய சமூகத்தினருக்கு தொழில் வாய்ப்பு வசதிகளை வழங்கக்கூடிய தொழிற்சாலைகளை இங்கு நிறுவ வேண்டும். இதனால் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

## அ.ம.திகளின் வருடாந்த ஞானவொடுக்கம்

அமலமரித்தியாகிகளின் யாழ். மாகாண உறுப்பினர்களுக்கான வருடாந்த ஞானவொடுக்கம் கடந்த நவம்பர் மாதம் 6 - 11ம் திகதிவரை மன்னார் ஞானோதயத்தில் இடம்பெற்றது.

## திருத்தந்தையின் பிரதிநிதி மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கினார்



கொழும்பு கரித்தாஸ் நிறுவனத்தின் (செத் செரண) ஏற்பாட்டில் இடம்பெற்ற மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நிகழ்வில் திருத்தந்தையின் பிரதிநிதி பாடசாலை மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கிவைத்தார்.

## தேசிய மறைக்கல்வி நடுநிலையத்திற்கு புதிய இயக்குனர்

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தினால் தேசிய மறைக்கல்வி, விவிலியப்பணி இயக்குனராக குருணாகல் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. பியால் ஜானக பெனாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

மறைக்கல்வி பற்றிய பல்வித பணித்திட்டங்களில் ஈடுபட்ட அவர் "மறைக்கல்வி" என்ற நூலையும் எழுதி வெளியிட்டவராவார். 2010ஆம் ஆண்டிலிருந்து குருணாகல் மறைமாவட்ட குருமுதல்வராக நியமனம் பெற்று பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் இவருக்கு இந்த நியமனம் கிடைத்தது. 2011 மார்கழி மாதம் 1ஆம் திகதியிலிருந்து கத்தோலிக்க தேசிய மறைக்கல்வி இயக்குனராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## இரண்டு பிரபல அ.ம.திகள் இறையடி

அமலமரித்தியாகிகளின் கொழும்பு மாகாணத்தைச் சேர்ந்த அருட்திரு. மாக்கஸ் ரூபசிங்க (அ.ம.தி) மற்றும் அருட்திரு. அன்சிலம் சில்வா (அ.ம.தி) ஆகியோர் கடந்த நவம்பர் மாதம் 18ம் திகதி இறையடி சேர்ந்தனர். இவ்விரு குருக்களும் கொழும்பு மாகாணத்தில் உயர்ந்த பொறுப்புக்களை வகித்து இளைப்பாறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஆன்மா சாந்தியடைவதாக!

## அருட்சகோதரி கிளாரிஸ் இறைபதம்

திருக்குடும்ப கன்னியர் சபையின் யாழ். மாகாணத்தை சேர்ந்த அருட்சகோதரி மேரி கிளாரிஸ் கடந்த ஒக்டோபர் மாதம் 2ம் திகதி இறைபதம் அடைந்தார். அருட்சகோதரியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கிறோம்.

## அ.ம.திகளின் தியாக்கோன் பட்டம்

அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்த ஆறு பேர் கடந்த டிசம்பர் 8ம் திகதி நித்திய வாக்குத்தத்தத்தை அளித்தனர். டிசம்பர் 9ம் திகதி யாழ் ஆயரினால் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

அருட்சகோதரர்கள் எஸ். பற்றிக் லியோ, எஸ். றெஜினோல்ட், ஜெ. றொபின்சன் சதீஸ் குமார், எ. செபஸ்ரியன் றெவல், பி. எ. ஜேசுதாசன், எஸ். அருள் சுதர்சன் ஆகிய ஆறுபேருமே தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் ஆவர்.

## கொழும்பு முன்னாள் பேராயர் ஒல்வோல்ட் விருது பெறுகின்றார்



கொழும்பு மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயரும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தருமாகிய மேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் கல்வித்துறையில் ஆற்றிய பங்களிப்புக்காக கடந்த ஆசிரியர் தினத்தன்று கர்தினால் மல்கம் ஆண்டகையினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## பல்கலைக்கழக கத். மாணவர்களுக்கான கரோல் நிகழ்வு – 2011

இலங்கை பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவ இயக்கமான (SLUCSM) கொழும்பு பிரிவின் கரோல் நிகழ்ச்சிகள் கடந்த 11 டிசம்பர் 2011 அன்று கொழும்பு 10 ஜோசப் கல்லூரி சிற்றாலயத்தில் "மெசியா வார்த்தை மனுவுருவானார்" என்னும் கருப்பொருளில் நிகழ்த்தப்பட்டது. கொழும்பு பேராயர் அவர்கள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இலங்கை பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவ இயக்கத்தின் ஆன்மீக இயக்குனர் சமன் மக்சிமஸ் அடிகளார் இந்நிகழ்விற்கான ஒழுங்குகளை சிறப்புற மேற்கொண்டிருந்தார்.

## அ. பாலதாஸ் அவர்களின் 'மறை காத்த மாவீரன்' நூல் வெளியீட்டு நிகழ்வு



கலாபூசணம் அண்ணாவியார் அ. பாலதாஸ் அவர்கள் எழுதிய "மறை காத்த மாவீரன்" என்ற அருளாளர் யோசவ்வாஸ் அவர்களின் வாழ்வின் முக்கிய அம்சங்களை சித்தரிக்கும் நாட்டுக் கூத்து நூல் 12.11.2011 அன்று பொதுநிலையினர் கழகத்தலைவர் திரு. அலெக்ஸ் அமலரட்ணம் தலைமையில் யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் திரு. பாலதாஸ் அவர்களுடைய கலை ஆளுமையையும் மறைப் பணியையும் விதந்து பாராட்டியதோடு அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அவரே முதல் பிரதியையும் வழங்கி சிறப்பித்தார்.

திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்கள் வாழ்த்துரையையும் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகத்துறை தலைவர் பேராசிரியர் அருட்பணி. விக்ரர் பிலேந்திரன் அடிகளார் அவர்கள் நூலின் நயப்புரையையும் நிகழ்த்தினார். இசைக்கலைஞராக நெறியாளராக படைப்பாளியாக பல்துறைசார் திறமைகளுடன் விளங்கிய பாலதாஸ் அவர்களின் கலை ஆளுமையை அனைவரும் வியந்து பாராட்டினர்.

அண்ணாவியார் பாலதாஸ் அவர்களுக்கு மன்னார் ஆயர் சார்பாகவும், மன்னார் மறைமாவட்டம் சார்பாகவும் மன்னா நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றது.

### யாழ் புனித மரியன்னை பேராலய பங்குப் பணிமனை

## முற்றுப்பெறாத நிலையிலும் இயங்கத் தொடங்கியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் பணித் திட்டங்கள்
# மறைக்கல்வி ஆண்டு – 2012
## "மகிழ்வோடு மறைக்கல்வியை அனைவரும் அறிந்திடுவோம்"

**மறைக்கல்வி ஆண்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி திட்டமிடல் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் இறுதித் தொகுப்பு**

அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு,
செயலர், மறைமாவட்ட மேய்ப்புப் பணி பேரவை

### சிறுவர் / மாணவர் மறைக்கல்வி

சிறுபராயத்திலிருந்தே மறையறிவை தகுந்தமுறையில் புகட்டி மறைக்கல்வி பற்றிய ஆழப்படுத்தலை மாணவர்களுக்கு வழங்கவும் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளுக்கு சமூகமளிக்காமலிருக்கும் பிள்ளைகளை மறைவாழ்வுக் கல்விக்குள் உள்வாங்கவும் தவறாது மறைக்கல்வி வகுப்புக்களில் பங்கெடுக்கும் பிள்ளைகளை உற்சாகமூட்டி உறுதிப்படுத்தவும் பின்வரும் செயற்பாடுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
மாணவர்களுக்கு மறையறிவுப் போட்டிகளை நடாத்துதல்
**செயற்பாடு:** பங்குமட்டத்தில் பங்குத்தந்தை, பங்கு மறையாசிரியர்கள், கோட்ட மட்டத்தில் மறைக்கோட்ட முதல்வரின் தலைமையிலான மறைக்கல்விச் செயற்குழு, மறைமாவட்டத்தில் மறைக்கல்வி ஆணைக்குழு.

**தீர்மானம்: 02**
மாதத்தின் இறுதி வாரத்தில் மறைக்கல்வி மாணவர் மன்றம் நடாத்துதல். அம்மாணவ மன்ற செயற்பாடுகளையும் ஏனைய மறைக்கல்விசார் பிரத்தியேக முயற்சிகளையும் உள்ளடக்கி மாணவர் மறைக்கல்வி சஞ்சிகையை வெளியிடுதல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, மறையாசிரியர்கள்.

**தீர்மானம்: 03**
ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகளுக்கு வருகை தரும் மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்குவதோடு அவர்களின் வரவை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்த வரவு அட்டை வழங்கி அதன் அடிப்படையில் ஊக்குவிப்புப் பரிசு அளித்தல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, மறையாசிரியர் ஒன்றியம்.

**தீர்மானம்: 04**
மாணவர்களை திருத்தலங்களுக்கு கூட்டிச்சென்று அங்குள்ள விடயங்களின் அடிப்படையில் மறைக்கல்வி அளித்தல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, மறையாசிரியர் ஒன்றியம்.

### பாடசாலையில் மறைக்கல்வி
### மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர்

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கத்தோலிக்க கிறிஸ்தவரும் அவரவர் தகுதிக்கும் நிலைக்கும் வாய்ப்பிற்கும் ஏற்ப மறையறிவுப்பணியாற்ற கடமையும் பொறுப்பும் உள்ளவர்கள் என்பதை அனைவரும் உணரச்செய்வதோடு இப்பணியில் சிறப்பாக மறையாசிரியர்களும் கத்தோலிக்க ஆசிரியர்களும் மிகுந்த அர்ப்பண உணர்வோடு பங்களிப்புச்செய்ய அழைக்கப்பட்டுள்ளார்கள் என்ற வகையில் அவர்களின் ஈடுபாட்டுழைப்பிற்கான பின்வரும் விடயங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
மறையாசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகளையும் தொடர் பயிற்சிகளையும் வழங்குவதோடு அவர்கள் பணியினை ஊக்குவித்தல். **செயற்பாடு:** பங்குமட்டத்தில் பங்குத்தந்தை, மறைமாவட்ட மட்டத்தில் மறைக்கல்வி நடுநிலையம்.

**தீர்மானம்: 02**
மறையாசிரியர் கைநூலிலிருந்து பாடத்திட்டம் தயாரித்து துணைக் கருவிகளோடு அவற்றைக் கற்பிக்க உதவி செய்தல்.
**செயற்பாடு:** மறைக்கல்வி நடுநிலையம்.

**தீர்மானம்: 03**
மறையாசிரியர்களுக்கான கௌரவிப்பினையும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி உற்சாகப்படுத்துதல்.
**செயற்பாடு:** மறைமாவட்ட மட்டத்தில் மறைக்கல்வி ஆணைக்குழு, பங்குமட்டத்தில் பங்குத்தந்தையர்.

**தீர்மானம்: 04**
கத்தோலிக்க ஆசிரியர்களை மறைக்கல்விப் பணியில் ஈடுபடுத்தல். கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் இல்லாத பங்குகளில் அதனை ஏற்படுத்தி அவர்களின் பணியினைப் பெற்றுக்கொள்ளல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, பங்கு மேய்ப்புப்பணிச் சபை

**தீர்மானம்: 05**
கத்தோலிக்க ஆசிரியர்கள் ஏனைய பாடங்களைக் கற்பிக்கின்ற வேளையிலும் மாணவர்கள் கிறிஸ்து அனுபவம் பெற தூண்டுதல். **செயற்பாடு:** கத்தோலிக்க பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்.

**தீர்மானம்: 06**
பாடசாலையில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் வலுவுள்ளதாக இயங்க ஊக்குவித்தல், மாதத்தின் முதல் வெள்ளி பாடசாலை திருப்பலியை ஒழுங்குசெய்தல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, கத்தோலிக்க அதிபர், ஆசிரியர்கள்.

**தீர்மானம்: 07**
பாடசாலைகளில் முதல் பாடத்தை சமய பாடமாக கற்பிக்க முயற்சி எடுத்தல். அத்தோடு ஞாயிறு தினங்களில் கருததமர்வுகளையும் ஏனைய பாடசாலை கல்வி, விளையாட்டு சார்ந்த நிகழ்வுகளையும் தவிர்த்து மறைக்கல்வி நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
**செயற்பாடு:** மறைமாவட்ட மட்டத்தில் மறைக்கல்வி ஆணைக்குழு, பங்கு மட்டத்தில் பங்குத்தந்தையர்.

**தீர்மானம்: 08**
மாதத்தில் ஒருமுறையேனும் பாடசாலைகளைச் சந்தித்து மாணவர்களின் மறையறிவு சார்ந்த விடயங்களை கண்காணித்து ஊக்கப்படுத்தல். **செயற்பாடு:** பங்குத்தந்தை, அருட்சகோதரிகள்.

### குடும்ப மறைக்கல்வி

குடும்பமே மறையறிவின் முதற்தளமும் நாற்று மேடையும் என்பதோடு குடும்ப அங்கத்தவரின் மறைவாழ்வே பங்கின் மறைவளர்ச்சியாக அமைவுறுகிறது என்பதை அனைவரும் மனதிலிருத்தி குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இறை-வார்த்தையையும் மறையறிவையும் அறியவும் அடுத்தவருக்கு ஊட்டவும் பெரும் கடமையை கொண்டுள்ளார்கள். இந்நடைமுறையை ஊக்குவிக்க பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
குடும்ப செபத்தை நாள்தோறும் செபிக்க ஊக்குவித்தல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, பங்கில் பணியாற்றும் அருட்சகோதரிகள், அன்பியப் பணியாளர்கள்.

**தீர்மானம்: 02**
குடும்பம் பற்றிய விவிலிய வார்த்தைகளையும் படிப்பினைகளையும் அச்சிட்டு பங்குகளிலுள்ள குடும்பங்களுக்கு வழங்குதல்
**செயற்பாடு:** விவிலிய ஆணைக்குழு, பங்குத்தந்தையர்.

**தீர்மானம்: 03**
திருமண முன் ஆயத்த வகுப்புகளில் (Pre cana classes) நமது திருமறை சம்பந்தமான பாடங்களையும் விடயங்களையும் திருமணம் புரிய உள்ள தம்பதியினருக்குக் கற்பித்தல்.
**செயற்பாடு:** குடும்ப நலப்பணி ஆணைக்குழு.

**தீர்மானம்: 04**
கலப்புத் திருமணம் புரிந்தவர்களுக்கான விசேட மறைக்கல்வியை ஒழுங்கு செய்தல்.
**செயற்பாடு:** மறைமாவட்ட அல்லது மறைக்கோட்ட மட்டத்தில் குடும்ப நலப்பணி ஆணைக்குழு, பங்கு மட்டத்தில் பங்குத்-தந்தையர்.

**தீர்மானம்: 05**
விசேட தேவையுள்ள குடும்பங்களையும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டிய குடும்பங்களையும் (கலப்பு திருமணம் புரிந்து வாழும் குடும்பம், திருச்சபைக் காரியங்களில் முரண்பட்டு ஒதுங்கி இருக்கும் குடும்பம், ஞான வாழ்வை புறக்கணித்து வாழ்வோர் போன்ற பிரிவினரை) இனங்கண்டு அவர்களின் வீடுகளைச் சந்தித்து மறைவாழ்வை வழங்குதல். **செயற்பாடு:** மறைமாவட்ட மட்டத்தில் தன்னார்வப் பணியாளர், பங்கு மட்டத்தில் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், அன்பியப் பணியாளர்கள்.

**தீர்மானம்: 06**
திருமண ஆண்டு நிறைவுகளின் (5 வருடம், 10 வருடம், 25 வருடம், 50 வருடம்) அடிப்படையில் தம்பதியினருக்கு குடும்ப மறைக்கல்வியை அளிக்கும் பாடத்திட்டத்தை உருவாக்குதலும் வழங்குதலும். **செயற்பாடு:** குடும்ப நலப்பணி ஆணைக்குழு.

**தீர்மானம்: 07**
பெற்றோர் தமது பிள்ளைகளை மறைக்கல்வி வகுப்புகளுக்கு கிரமமாக அனுப்ப முழு முயற்சி எடுத்தல். அதற்காக பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, பங்கின் பணியாளர்கள், மறைக்கல்வி ஆணைக்குழு.

**தீர்மானம்: 08**
குடும்பங்களில் திருவருட்சாதனங்களுக்கான ஆயத்தங்கள் செய்யும் அர்த்தமுள்ள வழிபாடுகளை நடாத்துதல். இதற்கான திருவருட்சாதன ஆயத்த வழிபாட்டு கையேடுகளை தயாரித்து வழங்குதல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், அன்பியப் பணியாளர்கள், வழிபாட்டுக் குழு, திருவழிபாட்டு ஆணைக்குழு.

### முதியோர், மாற்றுத்திறனாளிகள், புறந்தள்ளப்பட்டோருக்கான மறைக்கல்வி

"எல்லாருக்கும் மறைக்கல்வி" என்ற அடிப்படையில் நமது சமூகத்தில் வாழும் முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் உலகியல் பார்வையில் புறந்தள்ளப்பட்டோர் எனக் கருதப்படும் அனைவரும் மறைவாழ்வுக்கல்விப் பணியை பெறுவதில் உரிமையுடையவர்கள். எனவே மேற்படி பிரிவினர் ஒவ்வொருவரும் நமது கரிசனைக்கும் விசேட கவனிப்பிற்கும் உரித்துடையவர்களாக கொள்ளப்பட்டு அவர்களுக்கு ஏற்றவகையில் மறையறிவைக் கொடுக்க பின்வரும் முன்மொழிவுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
இல்லச் சந்திப்பு ஊடாக முதியோருக்கு நம்பிக்கை ஊட்டும் நற்செய்திகளை வழங்குதல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, தன்னார்வப் பணியாளர், பங்கின் ஏனைய பணியாளர்கள்.

**தீர்மானம்: 02**
மரணப்படுக்கையில் உள்ளோருக்கு மறுவாழ்வு பற்றிய மனத்திடன் ஊட்டும் செப வழிபாடுகளை நடாத்துதல்.
**செயற்பாடு:** நல்மரண சபை, பரித்தியாக சபை, மரியாயின் சேனை, வின்சன்டிபோல் போன்ற பக்தி சபைகள்.

**தீர்மானம்: 03**
மாற்றுத்திறனாளிகள் உள்ள குடும்பங்களையும் அவர்களுக்கென்று பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள நிலையங்களையும் சந்தித்து அவர்களுக்கு கிறிஸ்து அனுபவம் கொடுத்தல்
**செயற்பாடு:** மறைக்கல்வி ஆணைக்குழு.


மன்னார் பேராலயத்தின் முன்புறத்தோற்றம்

**தீர்மானம்: 04**
புறந்தள்ளப்பட்டுள்ள குடும்பங்கள், தனிநபர்கள் மற்றும் மது போதைக்கு அடிமையானோர், பாடசாலையிலிருந்து இடைவிலகிச் சென்றவர்கள், மணமுறிவு நிலையிலுள்ளோர் போன்றவர்களை கண்டறிந்து அவர்களுக்கு மறைக்கல்வி அளித்தல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தை, பங்கின் பணியாளர்கள், திருப்புமுனை மையம், மறைக்கல்வி ஆணைக்குழு, குடும்பநலப் பணியகம்.

### சிறப்புக்குழுவினருக்கான மறைக்கல்வி

அரசியல், நிர்வாகம், சட்டம், மருத்துவம் போன்ற துறைகளில் பணியாற்றுவோர் தமது கல்வித் தகமைக்கும் தாம் வகிக்கும் நிலைக்குமான சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு சமூக மேம்பாட்டிற்கு கை கொடுக்கும் இவர்களின் மறைவாழ்வை ஆழப்படுத்தி திருச்சபையின் வளர்ச்சிப் பணியில் இவர்களை ஊக்குவிக்க பின்வரும் முன்வைப்புகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
அரச அரச சார்பற்ற ஊழியர்களுக்கான மறைவாழ்வுச் சங்கத்தை உருவாக்கி அவர்களின் மறைவாழ்வினையும் ஆன்மீகத்தையும் ஊக்குவிக்க போயா தினங்களில் அவர்களை ஒன்றுகூட்டுதல்.
**செயற்பாடு:** பங்குத்தந்தையர்கள்

**தீர்மானம்: 02**
அரசியல்வாதிகள், சட்டத்தரணிகள், மருத்துவர், பொறியியலாளர் போன்றோருக்கான கத்தோலிக்க ஒன்றியத்தினை மறைக்கோட்ட மட்டத்திலோ அல்லது மறைமாவட்ட மட்டத்திலோ உருவாக்கி அவர்களின் மறையறிவை ஆழப்படுத்தி ஊக்குவிப்பதோடு அவர்களின் ஆன்மீகத்தை உறுதிப்படுத்தி திருச்சபைப் பணிக்குள் உள்வாங்குதல்.
**செயற்பாடு:** மறைமாவட்ட மட்டத்தில் மறைக்கல்வி நிலையமும் பொதுநிலையினர் பணியகமும். மறைக்கோட்ட மட்டத்தில் மறைக்கோட்ட முதல்வர், பங்குத்தந்தையர்கள்.

**தீர்மானம் : 03**
மேற்படி நபர்களுக்கு விசேட வழிபாடுகளையும் ஆன்மீக உரைகளையும் இடைக்கிடையே ஏற்பாடு செய்து வழங்குவதோடு அவர்களுக்கு விசேட தவக்கால தியானத்தை வழங்குதல்.
**செயற்பாடு:** மறைக்கல்வி ஆணைக்குழு, பொது நிலையினர் பணியகம்.

### பொதுத்தளத்தில் மறைக்கல்வி

மறைக்கல்வியை பல்வேறு சிறப்பு வாய்ப்புக்கள் காலங்கள், நேரங்களை பயன்படுத்தி தகுந்த முறையில் அனைவரும் மகிழ்வோடு ஊக்கமாக அறிந்திட பின்வரும் விடயங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**
அனைத்து அருட்சாதனங்களையும் பெற இருப்போருக்கான போதிய முன் ஆயத்த பயிற்சிகளையும் அண்மித்த ஆயத்தங்-களையும் (Remote and Proximate Preparation) தவறாது செய்வதுடன் அவர்களுக்கான தொடர் உருவாக்கற் பயிற்சிகளை (Follow up Classes) வழங்குதல்.
**செயற்பாடு :** பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், மறைமாவட்ட ஆணைக்குழுக்கள்.

**தீர்மானம்: 02**
பக்திச் சபையினருக்கு ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஆன்மீக உரைகளை கிரமமாக வழங்குதல். **செயற்பாடு:** பங்குத்தந்தை

**தீர்மானம்: 03**
மறையறிவை பெற உதவியாகவும் ஆன்மீக வாசிப்பிற்கென பங்குகளில் நூலகங்களை (தோழன், விவிலிய விருந்து, நற்கருணை வீரன் போன்றன உள்ளடக்கி) அமைத்து அனைவரும் பயன்படும் முறையில் போட்டிகள் ஊடாக ஊக்குவித்தல்.
**செயற்பாடு :** பங்குத்தந்தை, பங்கு மேய்ப்புப்பணிச் சபை, மறையாசிரியர் ஒன்றியம்.

**தீர்மானம்: 04**
மறையறிவில் பின்தங்கிய கிராமங்களுக்கு தேர்ச்சிபெற்ற மறையாசிரியரின் உதவியோடு அடிப்படை மறையறிவைக் கொடுத்தல்.
**செயற்பாடு :** பங்குத்தந்தை, மறைக்கல்வி ஆணைக்குழு.

**தீர்மானம்: 05**
மறையாசிரியர் மற்றும் கத்தோலிக்க ஆசிரியர் பற்றாக்குறையுள்ள கிராமங்களில் ஞாயிறு மறைக்கல்வியையும் பாடசாலைக் கிறிஸ்தவ பாடநெறியையும் கற்பிக்கும் பணியை தாராள உள்ளத்தோடு ஆற்றக்கூடியவர்களை இனங்கண்டு ஊக்குவித்து அவர்களின் சேவையை பெறுதல்.
**செயற்பாடு :** பங்குத்தந்தை, பங்கு மேய்ப்புப்பணிச் சபை


(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# அமைதியை அடைவதற்கு மனித மாண்பு மதிக்கப்படவேண்டும்

### திருத்தந்தையின் உலக சமாதான தினச் செய்தியை திருப்பீடத்தின் நீதி மற்றும் அமைதி அவைத் தலைவர் கர்தினால் பீற்றர் கொட்வோ வெளியிட்டார்



திருப்பீடத்தின் நீதி மற்றும் அமைதி அவைத் தலைவர் கர்தினால் பீற்றர் கொட்வோ


நீதியையும் அமைதியையும் வளர்ப்பதற்கு மனித மாண்பும் மனித உரிமைகளும் மதிக்கப்படவேண்டும் என்று உலக சமாதான தினச் செய்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கூறினார். 2012ஆம் ஆண்டு சனவரி முதல் நாள் கடைப்பிடிக்கப்படும் 45வது உலக அமைதி தினத்திற்கான செய்தியை திருப்பீடத்தின் நீதி மற்றும் அமைதி அவைத் தலைவர் கர்தினால் பீற்றர் கொட்வோ அப்பியா ரேக்சன் (Peter Cardinal Kodwo Appiah Turkson ) டிசம்பர் 16ஆம் திகதி நிருபர் கூட்டத்தில் வெளியிட்டார். அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலாபம், பொருட்களைக் கொண்டிருத்தல், அவற்றின் பயன்பாடு ஆகியவற்றால் மனிதனின் மதிப்பு கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளது. நீதியிலும் அமைதியிலும் வாழ்வதற்கு இளையோரைப் பயிற்றுவித்தல் என்ற தலைப்பில் அமைந்துள்ள இச்செய்தியில், நீதியையும் அமைதியையும் அடைவதற்கு அறநெறிகள் பற்றிய தேவை இளையோருக்கு கற்றுக்கொடுக்கப்படவேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

இளையோர் உலகத்திற்கு புதிய நம்பிக்கையை வழங்கமுடியும் என்பதில் தான் கொண்டுள்ள நம்பிக்கையையும் தெரிவித்துள்ள திருத்தந்தை, கல்வி பெறுவதற்கு அனைவருக்கும் உரிமையும் கடமையும் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

உண்மையான, உறுதியான கல்வி, உண்மையிலும் சுதந்திரத்திலும் வழங்கப்படும் கல்வியாகும். சுதந்திரத்தை சரியான வகையில் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்படுவது, நீதியையும் அமைதியையும் வளர்ப்பதற்கு மையமாக அமைகின்றது என்றும் திருத்தந்தை அதில் கூறியுள்ளார். பெற்றோர்களே முதல் ஆசிரியர்கள். நீதியிலும் அதையிலும் கற்றுக்கொடுப்பதற்கு குடும்பமே முதல் பள்ளிக்கூடம் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, தங்கள் குடும்பங்களுக்கு எத்தகைய கல்வியை வழங்கவேண்டும் என்பதை தேர்வுசெய்வதற்கு, குடும்பங்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுமாறும், கல்வி வசதிகளை அனைவருக்கும் வழங்கவும், அரசியல் தலைவர்களை வலியுறுத்தியுள்ளார்.

நாம் உண்மையான அமைதி ஆர்வலர்களாக இருப்பதற்கு, முதலில் நம்மையே பரிவு, ஒருமைப்பாடு, ஒன்றிணைந்து வேலை செய்தல், சகோதரத்துவம், வளங்களின் சமபங்கீடு, போன்ற பண்புகளில் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அச்செய்தி கேட்டுக்கொண்டுள்ளது.





## சிறைக்கைதிகளைச் சந்தித்த திருத்தந்தை

குற்றவாளிகளும் மனிதர்களே! அவர்களும் மதிப்புடனும், மாண்புடனும் நடத்தப்படவேண்டும் என திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அழைப்புவிடுத்தார். உரோம் நகரின் ரெபிபியா சிறைக்கு டிசம்பர் 18ஆம் திகதி சென்று சிறைக்கைதிகளைச் சந்தித்த திருத்தந்தை ஏறக்குறைய ஒன்றரை மணித்தியாலங்கள் சிறைக்கைதிகளோடு இருந்தார்.

தவறை சரிசெய்வது மட்டும் நீதியாகாது, மாறாக அது கருணையையும் உள்ளடக்கியது என்று கூறியதோடு, சிறைகளில் சீர்திருத்தம் கொண்டுவருமாறு இத்தாலிய அரசுக்கும் அழைப்பு விடுத்தார். சிறையில் உள்ள கோவிலில் ஏறத்தாள 300 ஆண் பெண் சிறைக்கைதிகளைச் சந்தித்த திருத்தந்தை, அவர்களை தான் அன்புசெய்வதாகவும், அவர்களுக்காக செபிப்பதாகவும் கூறினார்.

## அறநெறி விழுமியங்கள் குறைந்து வருவதே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்

### மும்பை கர்தினால்



தனிமனிதர்களிலும் நிறுவனங்களிலும் அறநெறி விழுமியங்கள் குறைந்து வருவதே, தற்போது உலகில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கான முக்கிய காரணம் என்றார் மும்பை கர்தினால் ஒஸ்வோல்ட் கிரேசியஸ். உலகப் பொருளாதாரம் சரியான முறையில் இயங்க வேண்டுமெனில், பகுத்தறிவையும் நம்பிக்கையையும் ஆதாரமாகக் கொண்ட அடிப்படை விழுமியங்களும், பொது நன்நெறிக் கோட்பாடுகளும் தேவைப்படுகின்றன என்றார் கர்தினால் கிரேசியஸ்.

## இளைய தலைமுறையினருக்கு நற்செய்தி அறிவிக்க புதிய வழிகளைக் கண்டுபிடியுங்கள்!

### 33 ஐரோப்பிய ஆயர் பேரவைகளின் ஒன்றியமான ஐரோப்பிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்புக்கு திருத்தந்தை செய்தி

நற்செய்தி அறிவிப்புப் பணியில் ஐரோப்பிய ஆயர்கள் கண்டுள்ள புதிய வழிகளையும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு இப்பணியைச் செய்வதில் அவர்கள் துணிவுடன் எடுத்துவரும் புதிய முயற்சிகளையும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் பாராட்டியுள்ளார். அல்பேனியத் தலைநகர் திரானாவில் இடம்பெற்ற ஐரோப்பிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பின் நான்கு நாள் அமர்வின் நிறைவு நிகழ்வுக்கு அனுப்பியுள்ள செய்தியில் திருத்தந்தை இவ்வாறு கூறியுள்ளார் அருட்பணிகள் மற்றும் கிறிஸ்தவ ஒன்றிப்பு நடவடிக்கைகளில் ஐரோப்பிய ஆயர்கள் மத்தியில் கடந்த நாற்பது ஆண்டுகளாகக் காணப்படும் ஒத்துழைப்பு தொடரும் என்ற தனது நம்பிக்கையையும் திருத்தந்தை தெரிவித்தார்.

திருத்தந்தையின் பெயரில் வத்திக்கான் செயலர் கர்தினால் தர்ச்சீசியோ பெத்தோனே. ஐரோப்பிய ஆயர் பேரவைகளின் அவைத் தலைவர் கர்தின்ால் பீட்டர் எர்டோவுக்கு இச்செய்தியை அனுப்பியுள்ளார். மேலும் சி.சி.இ.இ (Concilium Conferentiarum Episcoporum Europae - CCEE) என்ற இந்த ஐரோப்பிய ஆயர் பேரவைகள் கூட்டமைப்பில் ருத்தேனியன் பைஸன்ட்டைன் ரீதித் திருச்சபையும் தற்சமயம் புதிதாக உறுப்பினராகச் சேர்ந்து இக்கூட்டத்தில் கலந்துகொண்டது.

இந்தப் புதிய வரவுடன் சி.சி.இ.இ அவை, 33 ஐரோப்பிய ஆயர் பேரவைகளின் கூட்டமைப்பாக மாறியுள்ளது. ருத்தேனியன் பைஸன்ட்டைன் ரீதித் திருச்சபை, 1646ம் ஆண்டில் கத்தோலிக்கத் திருச்சபையில் இணைந்தது.


## நன்னெறி என்பது வர்த்தக உலகின் உள்ளார்ந்த நாடித்துடிப்பு

### பேராயர் சில்வானோ தொமாசி

நன்னெறி என்பது வர்த்தக உலகிற்கு அந்நியமாக வெளியிலிருந்து சேர்க்கப்படும் ஓர் இணைப்பு அல்ல. மாறாக வர்த்தகத்தின் ஓர் உள்ளார்ந்த நாடித்துடிப்பு என ஜெனிவாவில் உள்ள ஐ. நா. அவை மற்றும் பிற பன்னாட்டு நிறுவனங்களில் திருப்பீடத்தின் சார்பாக, நிரந்தரப் பார்வையாளராகப் பணியாற்றும் பேராயர் சில்வானோ தொமாசி கூறினார்.

அண்மையில் நடைபெற்ற உலக வர்த்தக நிறுவனத்தின் உயர்மட்டக் கூட்டத்தின் எட்டாவது அமர்வில் வர்த்தக உலகைக் குறித்த திருப்பீடத்தின் எண்ணங்களை வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பொருளாதாரம் குறித்து எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவும், நன்னெறியின் அடிப்படையில் எடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்திக்கூறிய



பேராயர், நலிந்த மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டாத பொருளாதாரத் திட்டங்கள், நன்னெறியைச் சாராதவை என்றும் அவர் கூறினார். "வறியோர்மீது அக்கறை கொள்வது என்றால், அவர்களுக்கு தேவையான உணவைத் தருவது மட்டுமல்ல, அவர்களது பசிக்கும் பட்டினிக்கும் காரணம் என்னவென்று ஆராய்வது" என்று திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தனது உரையில் கூறியதை பேராயர் நினைவுகூர்ந்தார்.

## இக்கால உலகிற்கு புனிதர்கள் தேவைப்படுகின்றார்கள்





கிறிஸ்தவ விசுவாசத்தில் மிகவும் ஆர்வமுடைய புனிதர்கள் இக்காலத்திற்கு தேவைப்படுகின்றார்கள். இத்தகைய புனித வாழ்வுக்கு அன்னை மரியா எடுத்துக்காட்டாய் விளங்குகிறார் என்று திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறினார்.

அன்னை மரியாவைப்போல செபத்தின் மகிழ்ச்சியைக் கண்டுணருமாறு கேட்டுக்கொண்ட திருத்தந்தை வேகமாக வளர்ந்துவரும் இக்காலத்திய போக்குகளால் அடித்துச் செல்லாதபடி கவனமாக இருக்குமாறும் வலியுறுத்தினார்.

வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா வளாகத்திலும், வத்திக்கானிலும் வைப்பதற்கென பெரிய மற்றும் சிறிய அளவிலான கிறிஸ்மஸ் மரங்களை வழங்கிய உக்ரேயன் நாட்டின் சுமார் 500 பேரை திருப்பீடத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தபோது திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

கிறிஸ்மஸ் மரமும் குடிலும் கிறிஸ்மஸ் சூழலை வெளிப்படுத்தும் கூறுகளாக இருக்கின்றன என்று கூறிய திருத்தந்தை, இன்றைய நுகர்வுக் கலாச்சார சமுதாயத்திலே இத்தகைய ஆன்மீக மரபுகளைத் தொடர்ந்து காத்துவருமாறும் விண்ணப்பித்தார்.

### துறவிகளின் தொகை வீழ்ச்சி

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 2007ம் ஆண்டு 60,642 ஆக இருந்த பெண் துறவிகளின் எண்ணிக்கை தற்போது 46,451 ஆக குறைந்துள்ளதாக கலிபோர்னியாவில் நடைபெற்ற பெண்துறவு சபைகளின் தலைமைத்துவக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

### இந்தியாவில் குழந்தைகளின் நிலை

இந்தியாவில் 2010ம் ஆண்டில் 10,670 குழந்தைகள் கடத்தப்பட்டனர். 5,484 குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாயினர், 1,408 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டனர் என மத்திய அரசின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆசிய ஆயர் பேரவைக்கு புதிய தலைவர்

ஆசிய ஆயர் பேரவையின் புதிய தலைமைச் செயலராக மும்பை பேராயர் கர்தினால் ஆஸ்வால்ட் கிரேசியஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### இந்தியாவில் தற்கொலை தமிழகம் முதலிடம்!

இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 15 பேர் தற்கொலை செய்துகொள்வதாக உள்த்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. கடந்த 2010ம் ஆண்டில் மட்டும், நாடு முழுவதும் 1,34,599 பேர் தற்கொலை செய்து கொண்டனர். இதில் அதிக எண்ணிக்கையுடன், அதாவது 12.3 விழுக்காட்டுடன் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

### சீனால் திருவிவிலிய விநியோகம்

சீனாவில் இதுவரை 5,50 கோடி விவிலியப் பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு ஆண்டும் 35 இலட்சம் பிரதிகள் என்ற விகிதத்தில் அதன் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் சீனக் கிறிஸ்தவ அவைத் தலைவர் காவோ ஃபெங் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

## அருட்பணியாளர் அன்புராசா (அமதி) எழுதும்

### சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர்

தொடர் 04

**பிந்திவந்து பிதற்றாதே**

ஓர் அருள்பணியாளரின் இருபத்தைந்து ஆண்டுப் பங்குப் பணியைப் பாராட்டும் முகமாக சிறிய அளவிலான விழா ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. அப்பங்கைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவர், தான் அவ்விழாவில் பங்குத் தந்தையைப் பற்றிப் பேச வேண்டும் என வலுக்கட்டாயமாக நின்றதால் பங்குப் பேரவையினர் விரும்பாவிட்டாலும் அப்பொறுப்பை அவரிடமே விட்டுவிட்டனர்.

குறிப்பிட்ட நாளில் விழா ஆரம்பமாகியது. அரசியல் பிரமுகர் வழமைபோல குறிப்பிட்ட நேரத்தில் சமூகமளிக்கவில்லை. நிகழ்ச்சி நிரலின்படி விழாவின் இறுதி நிகழ்வாக பங்குத்தந்தையின் உரை இடம்பெற்றது. அவர் தம் உரையை, "இப்பங்கைப் பற்றிய என் முதல் மனப்பதிவை இப்பங்கிற்கு வந்த முதல் நாளில் நான் கேட்ட முதல் பாவசங்கீர்த்தனத்தில் இருந்துதான் பெற்றுக்கொண்டேன். பாவசங்கீர்த்தனத்தின் இரகசிய (மறைபொருளின்) தன்மையையும் புனிதத்துவத்தையும் மனதில் வைத்துக்கொண்டு இதனைப் பகிர்கிறேன்," என ஆரம்பித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில், "'மிக மோசமான ஒரு பங்கிற்கு வந்திருக்கிறேன்,' என்றுதான் முதலில் நினைத்துக்கொண்டேன். காரணம், நான் உங்கள் பங்கிற்கு வந்த முதல் நாளில் முதன் முதலாக பாவசங்கீர்த்தனத்திற்கு வந்தவர், தான் பெரிய கொள்ளையில் ஈடுபட்டதாகவும், வரும் வழியில் பொலிஸ்காரர்கள் வழிமறிக்குகையில் அவர்களில் ஒருவனைக் கொன்றதாகவும் குறிப்பிட்டார். மேலும், பல களவுகள் செய்ததாகவும், தம்முடன் வேலை செய்வோருடன் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும், குடியிலும் வெறியிலும் களியாட்டத்திலும், தான் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

'இவனைப் போலத்தான் இப்பங்கு மக்களும் இருப்பார்கள். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்தானே,' என அப்போது எண்ணிக்கொண்டேன். இதனால், உண்மையில் உங்களைப் பற்றி - உங்கள் பங்கு பற்றி, மிக மோசமான - எதிர்மறை எண்ணத்தைத்தான் கொண்டிருந்தேன். எனினும், நீங்கள் எவ்வளவு அன்பான, புரிந்துணர்வுள்ள மக்கள் என்பதை நாட்கள் செல்லச் செல்ல உணர்ந்துகொண்டேன். அந்த வகையில் இப்பங்கில் உங்களோடு சேர்ந்து பணிசெய்ய, வாழக் கொடுத்து வைத்தவன்," எனக்கூறி அமர்ந்தார். அவ்வேளையில், அரசியல் பிரமுகர் தாம் பிந்தி வருவதற்கான காரணங்களைக் கையோடு கட்டிக்கொண்டு, அலுமினியக் கடைக்குள் யானை புகுந்தது போல படை பட்டாளங்களுடன் விழா மண்டபத்துக்குள் நுழைந்தார்.

அவருடைய நேரம் - சந்தர்ப்பம் முடிந்துபோனாலும் தாம் உரையாற்றவே வேண்டும் எனப் பிடிவாதம் பிடித்துக்கொண்டு தமது உரையைத் தொடங்கினார். "எங்கள் பங்குத்தந்தை எமது பங்கிற்கு வந்த அந்த முதல் நாளை நீங்கள் (தன் பங்கு மக்களையும், பங்குத்தந்தையையும் விழித்துச் சொல்கிறார்) மறந்தாலும் நான் மறக்க மாட்டேன், என்னால் மறக்கவும் முடியாது! உண்மையில், எங்கள் பங்குத்தந்தை பங்குக்கு வந்த முதல் நாளில், முதல் ஆளாக பாவசங்கீத்தனத்திற்குச் சென்ற பெருமை எனக்குத்தான் உண்டு...," என்றபோது பங்குத்தந்தையின் கண்கள் உட்பட எல்லாருடைய கண்களும் பிதுங்கின. அரசியல் பிரமுகரின் கண்களைத் தவிர!

**பிந்திச் செல்வதே பெருமை!**

நேரத்திற்கு நிகழ்வுகளுக்கு நிற்கவேண்டும் என்பதன் பெறுமதி இப்போது புரியும். பிந்தி வந்து, பிந்தி வந்ததற்கான அறுபத்தெட்டுக் காரணங்களைச் சொல்வார்கள். நிகழ்வுக்குப் பிந்தி வருகின்றவர்கள் பொதுவாகச் சொல்லுகின்ற எல்லாருக்கும் நன்கு தெரிந்த காரணம், 'தவிர்க்க முடியாத காரணம்' என்பதாகும். 'தவிர்க்க முடியாத காரணங்கள்' ஓரிரு சந்தர்ப்பங்களாக இருக்கலாம். அதெப்படி, 'தவிர்க்க முடியாத காரணங்கள்' இவர்களைப் போன்றவர்கள் போகின்ற இடங்களைச் சுற்றியும், இவர்கள் தொடங்குகின்ற நிகழ்வுகளைச் சுற்றியும் இருக்கின்றன?

சரி, அப்படிச் சொல்லிவிட்டு 'சும்மா' என்றாலும் வாயைப் பொத்திக்கொண்டு - மன்னிக்கவும் - வாயை வைத்துக்கொண்டு இருக்க வேண்டியதுதானே! இப்படிப்பட்டவர்கள், அப்படியும் இருக்க மாட்டார்கள். தங்களின் இருப்பைக் காட்ட முற்பட்டு மேற்குறிப்பிட்ட அரசியல் பிரமுகரைப்போல மொக்கயீனப்படுவார்கள் - வெட்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள். இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால், நிகழ்வுகளுக்குப் பிந்திச் செல்வதையே பெருமையாக நினைக்கின்ற பல துறைசார்ந்த சில பிரமுகர்களைப் பார்த்திருக்கிறேன். பாவம், இவர்கள் உண்மையில் பரிதாபத்துக்குரியவர்கள்.

"ஒன்பது மணிக்கூட்டத்தை எத்தனை மணிக்குத் தொடங்குவிங்க?" என ஒருதடவை ஒருவர் என் நண்பர் ஒருவரிடம் கேட்ட ஞாபகம் இருக்கிறது. இதேபோன்ற இன்னுமொரு சம்பவம் இருக்கிறது. ஒரு பங்குக்குருவின் அழைப்பில் திருப்பலி நிறைவேற்றச் சென்றிருந்தேன். ஒருவர், "ஐந்து மணிப் பூசையை எத்தனை மணிக்கு வைப்பீங்க?" எனக் கேட்டார். எனக்குத் 'தலை சுற்றியது'. சுதாகரித்துக்கொண்டு, "ஐந்துமணிப் பூசை ஐந்துமணிக்குத்தான்," என்றேன். அவர், "ஆனால், சனம் வராது," என்றார். "பரவாயில்லை, நீங்களும் நானும் நிற்கிறோம்தானே. குறித்த நேரத்தில் தொடங்கலாம்தானே," என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டேன். திருப்பலிக்கு, அவரைத் தவிர வேறு சிலர் குறித்த நேரத்தில் சமுகமளித்திருந்தார்கள்.

**ஈழத்திலும், வந்து இருக்கிற இடத்திலும் பிந்தித்தான்**

பிரான்சில் லூர்து திருத்தலத்தில் பணிசெய்த நாட்களில் (2008 – 2010 வரை) நிகழ்வுகளை குறித்த நேரத்தில் தொடங்கி குறித்த நேரத்தில் முடிக்கவும் வேண்டியிருந்தது. அதனால், வருகின்ற தமிழ்த் திருப்பயணிகள் நிகழ்வுகளுக்கு குறித்த நேரத்தில் நிற்க வேண்டிய அவசியத்தை சுருக்கமாக அடிக்கடி நினைவூட்டுவேன். குறித்த நேரத்தில் நிகழ்வுகளுக்கு நிற்கவேண்டும் என்பதை எல்லாருமே விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், பெரும்பாலானோர் குறித்த நேரத்தில் நிற்க மாட்டார்கள்.

சிலர் தனிப்பட்ட முறையில் என்னைச் சந்தித்து, "அது நல்லது பாதர் (father). அப்பிடித்தான் நீங்க இருக்க வேணும். நேரத்தில, நீங்கள் 'கட் அன்ட் றயிற்றாத்தான்' (Cut and Right) இருக்க வேணும். இல்லாது போனால், உங்களால ஒண்டும் செய்ய ஏலாது, அதிலையும் நம்மட சனங்களோட...!" என்று தொடங்குபவர்கள், "அது நீங்க எதைச் செய்தாலும், இந்த விசயத்தில, நம்மட சனம் திருந்தவே திருந்தாது!" என்று கூறி முடிப்பார்கள். ஆராய்ந்து பார்த்தால் இப்படிச் சொல்பவர்கள்தான் பெரும்பாலும் குறித்த நேரத்தில் நிகழ்வுக்கு நிற்க முடியாதவர்களாக அல்லது அடியோடு நிகழ்வுகளுக்கு வராதவர்களாக இருப்பார்கள்.

மீண்டும் இவர்களைச் சந்திக்கின்றபோது, கேட்காமலே பிந்தி வந்ததற்கான காரணத்தை கூறத்தொடங்கிவிடுவார்கள், "கோட்டலில் (Hotel) சாப்பாடு பிந்தீற்றிது!" "பிள்ளைகள வெளிக்கிடுத்திறதில நேரம் போயிற்றுது!" "றபிக்கில (Traffic) மாட்டீற்றம்!" "நாங்க நேரத்துக்கு வந்திற்றம், ஆனா கடையில நிண்டம்!" "நாங்க நினச்சம், நீங்க பிந்தி வருவீங்க எண்டு!" எனப் பல காரணங்களை வடிவாக இறைச்சிக் கறியைக் 'காச்சுவது'போல, 'கூட்டி', 'வதக்கி,' 'தாளித்து'ச் சொல்வார்கள்.

இத்தோடு, "ஒருநாளும் பிந்திறதில்ல, இண்டைக்குத்தான்... அதுவும் இதுகளால!" என்று இறைச்சிக் கறியோடு ஒரு 'பொரியல்'லும் சாப்பாட்டில் சேர்ப்பதுபோல விடுகதை எல்லாம் விடுவார்கள். ஏதோ, அவர் குறித்த நேரத்தில் நிற்பவர் போலவும் இவரோடு சேர்ந்து வந்தவர்களால்தான், தான் பிந்தியதாகவும் உரையாடலை முடித்துவிடுவார்கள். இதன்பின், இவர்களோடு எதைக் கதைப்பது? – என்னத்தைப் பேசுவது? நடுவர் ஒருவரை வைத்து நியாயங்களை விவாதித்தாலும் அவர்கள்தான் இறுதியில் வெற்றிபெறுவார்கள். அந்த அளவிற்கு அவர்களின் நியாயங்கள் வலுப்பெற்றிருக்கும்.

இவ்விடயத்தில் மேலைத்தேய மக்கள் நேரத்தை மிகக் கச்சிதமாகக் கடைப்பிடிக்கிறார்கள்தானே! அதனால்தான், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டு போகின்றார்கள். அவர்களும் கொட்டலில் சாப்பிடுகிறார்கள், அவர்களும் பிள்ளைகளைப் பெறுகிறார்கள், அவர்களும் பிள்ளைகளை 'வெளிக்கிடுத்துகிறார்கள்', அவர்களும் நம்மவர்கள் பயணம் செய்யும் வீதிகளில் பயணம் செய்கிறார்கள், அவர்களும் கடைக்குப் போகிறார்கள். ஆனால், அவர்கள் எல்லாரும் (விதிவிலக்காக ஒருசிலரைத் தவிர) குறித்த நேரத்தில் குறித்த நிகழ்வுகளுக்கு நிற்கிறார்கள். எப்படி அவர்களால் குறித்த நேரத்தில் நிற்கவும், நம்மவர்களால் முடியாமலும் போகிறது?

**செய்வதறியாது சினந்து நிற்கும் குரு(வி)**

நம்மவர்களின் திருமணத் திருப்பலிகள் மேற்சொன்ன விடயத்தை விளக்குவதற்கு அதிசிறந்து உதாரணங்களாகும். திருப்பலி, ஒன்பது (09) மணிக்கென்றால் ஒன்பது முப்பதுக்கும் (09.30), பத்து (10) மணிக்கென்றால் பதினோரு (11) மணிக்கும், பத்து நாற்பத்தைந்து (10.45) மணிக்கென்றால் பன்னிரெண்டு (12) மணிக்கும் வருகிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களிடம் அங்கு கேட்டால், "'றவிக்'கில (Traffic) அம்பிட்டிட்டம்" என்பார்கள். இங்கு, ஈழத்தில் வாழும் எம்மவர்களிடம் வினவினால், "வீடியோக்காரன் பிந்திற்றான்," என்பார்கள். இத்தனைக்கும் திருமண வீட்டுக்காரர்கள் விரும்பும், அவர்களுக்கு வசதியான - ஏற்ற நேரத்தில்தான் திருப்பலி நிறைவேற்றும் நேரம் அனேகமாகத் தீர்மானிக்கப்படுகிறது. அப்படியிருந்தும், குறித்த நேரத்தில் கோவிலில் ஒரு குருவியைக்கூட காண முடியாது. விதிவிலக்காக, ஓரே ஒரு குரு(வி) மட்டும் சோர்ந்து போய், குந்திக்கொண்டு, செய்வதறியாது, சினந்து நிற்கும்!

**'பழக்கதோஸத்தை களிக்கிற' வரையில்...!:**

இதற்குக் காரணம் வேறொன்றுமல்ல, நம்முடைய 'பழக்கதோஸம்'தான் என்பது என் முடிவு! இப்'பழக்கதோஸத்தை களிக்கிற' வரையில் இதிலிருந்து நாம் மீள முடியாது! "மானம் (மானம் என்றால் இங்கு வானம் என்று பொருள்) இருக்கும் வரை மழை போகாது, மண்டை இருக்கும் வரை சளி போகாது" என்ற ஒரு பழமொழியைச் சொல்வார்கள் நம் முன்னோர்கள். அதுபோல, இந்த 'பழக்கதோஸத்தைக் கழிக்கும்' வரையில் வாழ்க்கை ஓட்டத்தில் நாம் பிந்தியவர்கள்தான்! ஒருவகையில் தோற்றுப் போனவர்களும்கூட! நமது தமிழர் போராட்டத்திற்கும் இந்த 'நேரத்திற்கும் (காலத்திற்கும்) இடையே நிறையத் தொடர்பு இருப்பதுபோலத்தான் தெரிகிறது. காலத்தின் அறிகுறிகளைக் கணிப்பதில் நாங்களும், அவர்களும் 'நிபுணர்கள்' என்றுதான் நினைத்திருந்தோம். 'நினைப்பு', பிழைப்பைக் கெடுத்ததாம்! தமிழர்களாகிய நம்முடைய வாழ்வில் அது உண்மையாகிவிட்டது!

(தொடர்ந்து அ...தி...ரு...ம்...)

# இறையடியார் தோமஸ் அடிகள்

## விண்ணகப் பிறப்பும் 100வது ஆண்டு குருத்துவ நிறைவும்


## செபமாலைக் கன்னியர்களின் பார்வையில் சில சிந்தனைகள்

ஈழ மண்ணின் இறைவாக்கினர்- செபமாலைக் கன்னியர் சபையின் ஸ்தாபகர், இறையடியார் பி. ஏ. தோமஸ் அடிகளின் பாதச்சுவடுகளில் தடம் பதித்து பயணிக்கும் செபமாலைக் கன்னியரான நாம், இன்றைய சமகாலத் தேவைகளோடு இந்த மூன்றாம் மிலேனியத்தில் அவர் தன் இதயக் கனவுகளை நனவாக்க தொடர்ந்து எம்மை அர்ப்பணிக்கின்றோம்.

அருட்பணி. எட்வின் வசந்தறாஜ் (அமதி) அடிகளாரின் ஆன்மீக வழிநடத்தல்களின் ஊடாக "ஊற்றுக்குத் திரும்புங்கள்" என்ற திருச்சபையின் சிந்தனை தொடர்ந்து எமக்கு வழங்கப்படுகின்றது. அந்த அழைப்பை புதிய உத்வேகத்தோடு வாழ எமது புதிய நிர்வாகம் உறுதிபூண்டுள்ளது.

இவ்வேளையில் எம் சபை ஸ்தாபகரின் 48வது ஆண்டு விண்ணகப் பிறப்பு விழாவும் (26/01/2012) அவருடைய 100வது ஆண்டு குருத்துவ நினைவும் (06/01/2012) மீண்டும் ஒரு திருப்பத்தை நோக்கி, உயிர்த்துடிப்போடு பயணிக்க எம்மை அழைக்கின்றது.

எம் சபை ஸ்தாபகரின் வாழ்வையும் பணியையும் நோக்குவோமானால் இவர் தந்தையாகிய இறைவனை தன்னுடைய அப்பா என்ற உரிமையோடு அழைத்து வாழ்ந்தவர். தன்னுடைய ஏழ்மையான, எளிமையான, பரிகாரம் நிறைந்த மறைந்த மடஅடைப்புத் தியானயோக வாழ்வினால், அன்னை மரியின் வழியாக, இயேசுவின் அன்பு இதயத்திற்கு தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர். கடவுளை விட்டுப்பிரிந்து பாவத்திலே



மூழ்கியிருக்கும் அனைவரையும் அவரிடம் திரும்பக் கொணர தன்னுடைய வாழ்வை தீவிரமான செபத்தால் இரவு, பகல் ஆராதனையின் வழி தகனப்பலியாக்கினார்.

ஆண்டவர் இயேசுவில் இவர் கொண்டிருந்த ஆன்ம தாகத்தால் பற்றி எரிந்தவராய் இந்தப்பலியான வாழ்வை சுதந்திரமாக ஏற்று இறைவனுடைய அரசு இந்த மண்ணகத்திலே பரவ வேண்டுமென்ற வாஞ்சையோடு நற்கருணை ஆண்டவரின் பிரசன்னத்திலே தன்னுடைய இயலாமைகளையும் உடல் நோய்களையும் ஏற்று கத்தாத செம்மறியாக வாழ்ந்தார்.

வாழ்க்கையிலே எழுந்த சவால்கள், துன்பங்கள், எதிர்ப்புக்கள், புறக்கணிப்புக்கள் அனைத்திலும் ஒரு இரத்தம் சிந்தாத மறைசாட்சியாக இயேசுவின் மரணப் பாடுகளோடு எல்லாவற்றையும் இணைத்து அவரோடு ஒன்றித்து அவரின் இதயத்திலே இருந்து வழிந்த இரத்தத் துளிகளை தன்னுடைய உடலிலே மறைவாக அனுபவித்தார்.

தன்னை முழுமையாக வெறுமையாக்கியதன்வழி தன்னைப் பகைத்தவர்களை அன்போடு அரவணைத்தார். ஏழைகளோடு ஏழையானார். இறைவனில் தன்னுடைய ஆன்மா நிறைவடைய வேண்டுமென்ற ஆர்வத்தால் நற்கருணைப் பேழையில் இறைத்தந்தையோடு இதயம் நிறைந்த உறவில் தங்கியிருந்தார். எம் வாழ்வு முழுவதையும் தொடர்ந்து பிதாவுக்கு அர்ப்பணிக்கும்படி அழைப்பு விடுக்கும் இயேசுவோடு செபத்தின்வழி மௌனத்தோடு ஒன்றாகியிருந்தார். இந்த மனுக்குலத்தை தன் அன்பு இதயத்திலும், செபிக்கும் கரங்களிலும் தாங்கியவராய், இறைவனின் மறைபொருளின் மௌன அறிவிப்பாளராகவும் தாழ்மையின் சாட்சியாகவும் இருந்து பலரை இயேசுவின் பக்கம் கவர்ந்தார்.

இவரின் தியாகம் நிறைந்த சாட்சிய வாழ்வினால் கவரப்பட்ட செபமாலைக் கன்னியரான நாம், இவர் இலங்கை யாழ் மண்ணிலே உருவாக்கிய தியானயோக சபையிலே இணைந்து இந்தியாவிலும் பல கிளைகளாகத் துளிர்விட்டு இந்த உலகிற்கு ஆண்டவரின் ஆசீரையும் அன்பையும் இரக்கத்தையும் பெற்றுக் கொடுக்கின்ற வாய்க்கால்களாகத் திகழ முயற்சிக்கின்றோம். திருச்சபையின் இதயத் துடிப்பாகவும் தந்தை தோமஸ் அடிகளின் ஒளிக்கீற்றுக்களாகவும் இருந்து அவரின் பணியை நிறைவுசெய்துகொண்டிருக்கின்றோம். அவரின் வழிவந்தவர்களாகிய எமக்கு இதுவே தகுந்த காலம், புத்தாண்டின் உதயம் புதிய நிர்வாக அமைப்பு முறை, புதிய எண்ணக்கருக்கள் புத்தெழுச்சியோடு விழித்தெழுவோம்! எம் சபை ஸ்தாபகரின் கனவை ஆர்வத்தோடு நனவாக்குவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாளர் யோசப்வாஸ் அடிகளார் திருவிழா 16.01.2012

## அருளாளர் யோசப்வாஸ், மறைபரப்பாளர், இலங்கை – (1651 – 1711)



இன்று இலங்கையில் கத்தோலிக்க விசுவாசம் ஓர் ஆலமரமாகக் காட்சியளிக்கிறதென்றால், அதற்கு புத்துயிர் ஊட்டிய பெருமை தந்தை ஜோசப் வாஸ் என்பவரையே முற்றிலும் சாரும். 17வது நூற்றாண்டில் இலங்கைத் தீவில் போர்த்துக்கீசியரும் டச்சு நாட்டினரும் போட்டி போட்டுக்கொண்டு காலணி ஆதிக்கம் செலுத்திவந்தனர். போர்த்துக்கல் நாட்டினர் இலங்கையைக் கைப்பற்றிய அதேசமயம் கத்தோலிக்க விசுவாசத்திற்கு டச்சு நாட்டினரும் போட்டி போட்டுக்கொண்டு வித்திட்டிருந்தனர். அது முளைத்து வளரும் சமயம் டச்சு ஆதிக்கத்தினர் கல்வின் பதிதத்தைப் புகுத்தி, கத்தோலிக்க விசுவாசத்திற்கு பெரும் சவாலகத் தோன்றினர். கத்தோலிக்க விசுவாசத்தைப் பூண்டோடு அழித்தொழிக்கத் திட்டம் தீட்டிய சமயம் பார்த்து தந்தை ஜோசப்வாஸ் இலங்கையில் தனது பொற்பாதத்தைப் பதித்தார். இவர் புதிய இரத்தத்தைப் பாய்ச்சியிருக்காவிட்டால் இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்திற்கு எப்போதோ சமாதி கட்டப்பட்டிருக்கும்.

1651, ஏப்ரல் 21ம் நாள் வாஸ் அடிகளார் கோவாவில் சால்செட் தீவில் பெனாலிம் என்ற இடத்தில், கிறிஸ்டோபர் வாஸ், மரியா தே மிராண்டாவின் 8-வது பிள்ளையாகப் பார்ப்பனர் குலத்தில் தோன்றினார். சிறு வயதிலிருந்தே ஜெபவாழ்விலும், ஏழைகளின்மீது கரிசனை கொள்வதிலும் தனி ஆர்வம் காட்டினார். கோவாவில் சேசுசபைக் கல்லூரியில் தனது படிப்புகளை முடித்துக்கொண்டு, புனித தோமஸ் அக்வீனாஸ் குருமடத்தில் சேர்ந்து படித்து தனது 25வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் கொங்கண் பகுதியில் மங்களூரிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் போர்த்துக்கீசியர் தோற்றுவித்த கத்தோலிக்க திருச்சபை நல்ல கனிதரக்கூடிய மரமாக வளர்ந்துவரும் நிலையில், டச்சு நாட்டுக் கல்வின் பிரிவினை சபையார் கத்தோலிக்கத் திருச்சபையை அடியோடு அழிக்கத் திட்டம் தீட்டினார்கள். இவர்கள் மத்தியில் 3 ஆண்டுகள் கடுமையாக உழைத்து, கத்தோலிக்கர்களை ஊக்குவிக்கும் பணியில் முழு வீச்சில் இறங்கி நல்ல பலன் கிடைத்ததைப் பார்த்த பிறகு மீண்டும் கோவா சென்றடைந்தார்.

### *மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்*

### ஜனவரி

ஜனவரி 15ஆம் திகதி அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரின் திருவிழா - அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது

கோவாவில் இருந்த சமயம், இலங்கையிலும் டச்சுப் பிரிவினை சபையார் கத்தோலிக்க விசுவாசத்திற்குச் சவாலாகத் தோன்றினர். கத்தோலிக்கர் பலவழிகளிலும் கொடுமைப்படுத்தப்பட்டனர். சில கத்தோலிக்கர் தெரிந்தோ, தெரியாமலோ புத்தமத வழிபாடுகளிலும் பங்கேற்றனர். தனது மங்களூர் அனுபவம் தந்தை வாசுக்குக் கைகொடுத்தது. தனிமையாக இலங்கைக்குப் போவதைவிட ஒரு குழுவாகப்போய் கத்தோலிக்கர்களை டச்சுக்காரர்களின் பிடியிலிருந்து மீட்க வேண்டுமெனத்திட்டம் தீட்டினார்.

கோவாவில் ஏற்கனவே தந்தை பாஸ்கால் டக்கோஸ்டா ஜெரமியாஸ் ஒரு வேதபோதக துறவற சபையைத் தோற்றுவித்திருந்தார். அதில் தந்தை வாஸ் சேர்ந்த சில ஆண்டுகளுக்குப்பின் சபைத்தலைவரானார். நாளடைவில் இந்த சபைக்குப் புனித பிலிப்புநேரி ஜெபக்குழுவினர் என்று பெயரிட்டார். இந்த சபையினரைக் கொண்டு இலங்கையில் சுமார் ஒரு நூற்றாண்டு காலமாக கத்தோலிக்க விசுவாசத்திற்கு உறுதுணையாகப் பணிபுரிந்தார். ஆனால் 1835ல் கோவாவில் ஏற்பட்ட கொந்தளிப்பில் மற்ற துறவற சபைகளைப்போல், இந்தப் புதிய சபையும் துர்அதிர்ஷ்டவசமாக கிள்ளி எரியப்பட்டு முற்றிலும் நாசப்படுத்தப்பட்டது.

இந்தச் சூழலில் இலங்கை சென்று திருச்சபைக்கு உறுதுணையாக இருப்பதற்காக, அங்கே செல்லும்போது ஒரு கூலிவேலை பார்ப்பவர்போல் மறைமுகமாகவே கப்பலேறினார். அதுவும் ஜென்ம விரோதிகளாகக் கருதப்பட்டவர்களின் டச்சுக் கப்பலில்! ஒரு பரம ஏழைபோல கப்பலுக்குள் மாறுவேடத்தில் இடம்பிடித்து, இலங்கைத் தீவை அடைந்ததில் இறைவனின் சிறப்பான பராமரிப்பு இருந்ததை தந்தை வாஸ் நன்கு உணர்ந்திருந்தார். இவ்வாறு முதலில் 1687ம் ஆண்டு மன்னாரில் காலடிகளைப் பதித்தார். அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று சில்லாலை என்ற கத்தோலிக்க கிராமத்தில் 3 ஆண்டுகள் தங்கி பணிபுரிந்தார். அங்கிருந்து பல இடங்களுக்கும் சென்று மேய்ப்புப் பணியை மேற்கொண்டார். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் கவர்ந்துகொள்ளும் முறைகளைக் கையாண்டார். நொறுங்குண்டு கிடந்த கத்தோலிக்க சமுதாயம் புதிய தெம்பு அடைந்தது.

இவர் இவ்வாறு மாறுவேடத்தில் பணியாற்றுவதை ஓரளவு டச்சு நாட்டினர் உணர்ந்தாலும், ஆடுகளை மந்தைக்குள் கொண்டு வந்து சேர்த்தார். எத்தகைய வலைவிரித்தாலும் இவரைப் பிடிக்கத்தான் இயலவில்லை.

1690ல் கண்டி நகரில் சேசுசபையைச் சேர்ந்த பழமை வாய்ந்த ஆலயத்தைக்கண்டுபிடித்ததுடன் அதைச் சுற்றிலும் வாழ்ந்து வந்த கத்தோலிக்க சமுதாயத்தையும் கண்டுபிடித்தார். இதனருகில் பற்பல சிற்றாலயங்களை எழுப்பினார். ஆங்காங்கே இருந்த கிறிஸ்தவர்களைக் கவனிக்க வேதியர்களை உருவாக்கினார். இவர் ஒருமுறை இவ்விடங்களைப் பார்த்துவர மாட்டுவண்டியில் பயணித்தபோது, இவரை வேவுபார்ப்பவன் என்று எண்ணி அரசு சிறையில் தள்ளினர். இவரைச் சார்ந்த 7 பேர் தூக்கிலிடப்பட்டனர். வாஸ் அடிகளாரோ நான்கு ஆண்டுகள் சிறையில் தள்ளப்பட்டிருந்தார். இறுதியில் இவர் குற்றமற்றவர் என்று உணர்ந்த குறுமன்னன் இவரை விடுதலை செய்ததோடு, கத்தோலிக்கர் மத்தியில் பணியாற்றவும் உத்தரவளித்தார். அரசனே, வாஸ் அடிகளார் தனக்கு உதவியாக வேறு ஒரு குருவையும் அழைத்துக்கொள்ள பரிந்துரைத்ததின் பேரில், கோவாவிலிருந்து தந்தை சல்டானா என்பவரையும் சேர்த்துக்கொண்டார்.

இக்காலத்தில் ஒரு சமயம் கண்டியில் கடுமையான வறட்சி தலைவிரித்தாடியது. புத்தபிக்குகள் என்னென்ன மந்திரமெல்லாம் ஓதிப்பார்த்தும் பயனில்லை. அதன் பின்னர் தந்தை வாஸ் பொது இடம் ஒன்றில் ஒரு திருச்சிலுவையை நட்டு, பெருங்கூட்டத்தினர் முன்னிலையில் மண்டியிட்டு பக்திப் பரவசத்துடன் ஜெபித்தார். மிகவிரைவில் கார்மேகம் எங்கும் கிளம்பி கனத்த மழை பெய்தது. அதிலும் இன்னும் ஓர் புதுமை என்னவெனில், தந்தை வாஸ் ஜெபித்துக்கொண்டிருந்த இடத்தைச் சுற்றி ஒரு சொட்டு மழை விழவில்லை. மன்னன் இதைக் கேள்வியுற்று, தனது அரசின் எந்த ஒரு பகுதிக்கும் சுதந்திரமாக சென்று செயல்பட உத்தரவளித்தான்.

1697ல் கண்டி நகர் மக்களில் பலர் பிளேக் நோய்க்கும் பெரிய அம்மைக்கும் பலியானார்கள். அரசனும் அவரது தோழர்களும் தப்பித்து ஓடிவிட்ட சமயம், தந்தை வாஸ் அஞ்சா நெஞ்சத்துடன் நோயுற்றவர்களுக்குத் தேவைப்பட்ட அனைத்துச் சேவைகளையும் ஆற்றினார்.

பின்னர் திருகோணமலை, நீர்கொழும்பு, கொழும்பு, மட்டக்களப்பு முதலிய நகரங்களுக்கும் சென்று மக்களை விசுவாசத்தில் திடப்படுத்தினார். இருப்பினும் செல்லும் இடமெல்லாம் கல்வின் பதிதர்கள் இவரைப்பதம் பார்க்கத்தான் செய்தனர். பற்றாக்குறைக்கு, யானைகள், காட்டு மாடுகள், இன்னும் பலவிதமான காட்டுவிலங்குகளின் ஆபத்தும் இவருக்கு நிறையவே இருந்தது.

டச்சு நாட்டு வெறியர்கள் இவரைப் பிடிக்க இயலாத சூழ்நிலையில் ஏழைக் கத்தோலிக்கர்மீது குறிவைத்தனர். அவர்களின் காது, மூக்கைக்கூடத் துண்டித்தனர். சிறையில் தள்ளினர். ஊரைவிட்டுத் துரத்தினர். ஒருமுறை திருப்பலிக்காக கூடிவந்த 300 ஏழைக் கிறிஸ்துவர்கள்மீது புலிபோல் பாய்ந்து சித்திரவதை செய்தனர்.

இருப்பினும் குறுமன்னர்கள் எப்போதுமே தந்தை வாஸ் பக்கம் இருந்து, மேலும் பல மேய்ப்பர்களைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பளித்தனர். சுமார் 11 பேர் இவ்வாறு வந்து சேர்ந்தனர். இவர்களின் ஆன்ம தாகத்தை நேரிடியாகப் பார்த்தவர் திருத்தந்தையின் பிரதிநிதியாக முழுஅதிகாரத்துடன் வந்தவர் கர்தினால் டூர்னோன். தந்தை வாசுக்கு ஆயர் பதவி காத்துக் கொண்டிருந்ததை அறிவித்தார். வாஸ் அடிகளார் இப்பதவியை வேண்டாமென்று உதறிவிட்டார். எப்படியோ, தந்தையின் அரவணைப்பில், கோவாவிலிருந்து வந்த ஏனைய குருக்களின் அயராத உழைப்பினால் 1710ல் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 55,000 ஆக உயர்ந்திருந்தது.

இறுதியில் தந்தை வாஸ் திருகோணமலைக்கும், மட்டக்களப்புக்கும் ஊடே இருந்த வாக்கோட்டை என்ற இடத்தில் மக்களுக்கு சேவை செய்த சூழ்நிலையில் நோய்வாய்ப்பட்டார். கண்டி மருத்துவமனைக்கு மாட்டுவண்டியில் தந்தையை ஏற்றிச்சென்றடைய 8 நாட்கள் எடுத்தன. 16.01.1711 நோய் முற்றியதை உணர்ந்ததும் இறுதியாக பாவமன்னிப்பு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார். ஒரு படுக்கையைப் பயன்படுத்த தனக்குத் தகுதியில்லை என்று சொல்லி, தன்னைத் தரையில் போடக் கேட்டுக்கொண்டார். பின்னர் பாடுபட்ட சுரூபத்தை ஒரு கையில் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையில் எரியும் மெழுகுவர்த்தியுடன் அமைதியாக தனது ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். கண்டியில் இவர் இறந்த செய்தி கேட்டுப் பெருங்கூட்டம் வர ஆரம்பித்தது. இதனால் 3 நாட்கள் உட்லை நல்லடக்கம் செய்ய முடியவில்லை.

# மன்னார் பேராலய முதியோர்களின் மகிழ்ச்சிப் பயணம்

அன்று 12.10.2012 காலை 7.00 மணி. புனித செபஸ்தியார் பேராலயம் முதியோர்களால் நிரம்பி இருந்தது. ஊதவிப்பங்குத் தந்தை அருட்பணி. டேவின் அவர்களால் நன்றித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பங்குத் தந்தை உதவிப் பங்குத் தந்தையர்களால் முதியோர்கள் சுமார் 80 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டது. காலை 9.00 மணியளவில் பயணம் செய்ய வந்திருந்த உறுப்பினர்கள் பேருந்து அருகில் கூடிநின்றனர். பின்னர் பங்குத்தந்தை அவர்களால் ஆசீர் வழங்கப்பட்டு பயணம் ஆரம்பமானது. பயணத்தில் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. டேவின் அடிகளாரும் கலந்துகொண்டார்.

மகிழ்ச்சிப் பயணம் மடுமாதாவின் பாடலுடன் ஆரம்பமானது. பள்ளமடு முதியோர் ஓய்வு மண்டபத்தை 9.30 மணிக்கு சென்றடைந்தனர். அங்கு பொதுநிலைப் பணியாளர்கள் இவர்களை வரவேற்றனர். அவர்களின் வரவேற்பும் சிற்றுண்டி தேனீர் உபசரணையும் முதியோர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. பின்னர் பணியாளர்களில் ஒருவர் அங்கு செய்யப்படும் பணியையும் சேவையையும் தான் எவ்வளவு ஆர்வத்துடன் இந்த சேவையை செய்து வருகிறேன் என்றும் சிறிய உரையே ஆற்றிவிட்டார். அவர்களிடம் விடை பெற்ற எமது உறுப்பினர்கள் மகிழ்ச்சிப் பயணத்தில் கலந்துகொண்டனர். 10.00 மணியளவில் பேரூந்து பெரிய மடுவை நோக்கி பாய்ந்து சென்றது. இரு மருங்கிலும் உயர்ந்து வளர்ந்த மரங்கள் சிறிய கிராமங்கள் பறவைகள், மிருகங்கள் என பலவகையான இயற்கைக் காட்சிகளை ரசித்தவாறு பயணம் தொடர்ந்தது.

சுமார் 11.00 மணியளவில் பெரியமடு கிறிஸ்து அரசர் ஆலயத்தை அடைந்தோம். சிலர் பெரியமடு குளத்தை பார்க்கச் சென்றார்கள். குளக்கட்டில் ஏறி குளத்தைப் பார்த்ததும் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். ஆ, என்ன பிரமாண்டமான குளம்! எங்கு பார்த்தாலும் கொக்குகளும், நாரைகளும், நீர்க்காகங்களும் நீர்தாராக்களும் கூட்டம் கூட்டமாக இருப்பதும் பறப்பதும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் பல கோணங்களில் பலதரப்பட்ட புகைப்படங்கள் எடுக்கப்பட்டு மீண்டும் பேரூந்து நின்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கு சிறிய சிறிய குழுக்களாக இணைந்து பாட்டுகளும் ஆட்டங்களுமாக ஆடிப்பாடி மகிழ்ந்து புகைப்படங்களும் எடுத்தக்கொண்டோம். மீண்டும் ஆலயம் வந்தடைந்து பெரியமடு முதியோர் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அதிலும் பாடல்கள் பாடி மகிழ்ந்தோம். அதில் ஒரு சிறப்பம்சம் எமது முதியோர் சங்க உறுப்பினர் திருவாளர் கீத பொன்கலன் (கை அங்கிள்) அவர்களின் காசியம் நிறைந்த கதையும் அவரது நடிப்பும் அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. இதுதான் மகிழ்ச்சிப்பயணமா என ஒவ்வொருவரும் பேசிக்கொண்டார்கள். இதேவேளை பகிர்தலும் நடந்து முடிந்தது.

பேருந்து விடத்தல்தீவை நோக்கி சீறிப்பாய்ந்தது. விரைந்து சென்றது. சுமார் 3.30 மணியளவில் முகாமிட்டது. அனைவரும் பேருந்தை விட்டிறங்கி ஆலயத்துள் சென்று இறைவனுக்கு நன்றி செலுத்தியபின் எமது உதவிப் பங்குத் தந்தையால் நற்கருணை வழிபாடு நடாத்தப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் ஆசீர் வழங்கி வழிபாட்டை நிறைவுசெய்தார். முடிவில் தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோரால் நன்றி கூறப்பட்டது. தொடர்ந்து விடத்தல்தீவு முதியோர் சங்க உறுப்பினர்களால் அளிக்கப்பட்ட தேநீர் உபசரணையில் கலந்து கொண்டபின் பேரூந்து மன்னார் நோக்கி பயணமானது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## புத்தாயிரமாமாண்டின் புலர்வினிலே...!

புத்தாண்டே புத்தாண்டே புத்தாயிரமாமாண்டே!
புதுப்பொலிவும் புதுமணமும் பரப்பிவரும் ஆண்டே!
புனிதத்தைக் காக்கவும் மனிதத்தைப் பேணவும்
புத்தூக்கம் பெற்று புதுப்படைப்பாகி வா...!

புத்தாண்டின் விடியல் எம் மனங்களை
புடைசூழ்ந்து வந்திட - எம்
அகத்தினில் அழுக்குகள் அகற்றி
அருள் விளக்கேற்றி ஆனந்தம் கொள்வோம்...!

கலைகளும் கல்வியும் கருத்தூன்றி வளரவும்!
காளையரும், பாவையரும் கவனமாய் வாழவும்
கடவுளின் சந்நிதியில் காலமெல்லாம் கனிந்திருக்க
புலர்ந்துவரும் புத்தாண்டு புதுமணம் வீசட்டும்....!

காலம் செய்த கோலத்தால் பலம் இழந்து குலம் இழந்து;
மலர்ந்த முகம் உலர்ந்து போனது!
கனத்த நெஞ்சம் அணைத்துச் சொன்னது...
நீ கலங்காதே! பலம் இறங்காதே!

நிலைகுலையாமல் இலை கருகாமல்
மணம் வீசும் மலர்ந்த ஆண்டு!
மறுமலர்ச்சியோடும் புது எழுச்சியோடும்
புத்தாண்டில் புலர்வினிலே
புதுவாழ்வு பெற்றிடுவோம்;
இருகரம் சேர்த்து இறைவரம் கேட்டிடுவோம்!

இனமத பேதமின்றி இணையற்ற இறையோன் துணையில்
இகபர நன்மை பெற்று இனிதாக வாழ்வோம்!
தணியாத தாகத்தோடும்; பணிவான வேகத்தோடும்
விடியலின் மடியிலே அடிவைத்து
படியேறி நடப்போம்.....!

*அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

## இளைஞனே!

இளைஞனே நில்
எங்கு செல்கின்றாய்?
உனக்குப் பின்னால் -
உன்னையே நம்பி இருக்கும்
உலகத்தைச் சற்றுத்
திரும்பிப் பார்.
அந்த உலகத்தை ஆட்சி
செய்கின்ற - உன்
கடவுளைப் பார்.
அவருக்காக நீ என்ன
செய்தாய்?
இன்று உனது வாழ்வு
ஒரு கையடக்க
தொலைபேசிக்குள்
சுருங்கிவிட்டதை
நினைத்துப்பார்.
பிறந்தோம் வளர்ந்தோம்
இறந்தோம் என்றல்லவா
உனது வாழ்க்கை முடிகிறது.
ஆனால் போன வருடம்
முழுவதும் ஆண்டவர் - உன்
கையில் நாட்களை
தந்துவிட்டார்.
அந்த நாட்களில் உன்னை
உருவாக்கிய
உன் ஆண்டவருக்கு நீ
என்ன செய்தாய்?
என்ன செய்யப் போகிறாய்?
இளைஞனே விழித்தெழு!


*செ. பஸ்ரியான்,*
*இல. 22, சாளம்பன்,*
*ஆண்டான்குளம்,*

## இளைஞனே நீ வேண்டி நிற்பது என்ன?

இளைஞனே இந்த உலகைப்
பார்த்தாயா?
எங்கு பார்த்தாலும் பகையும்
பழிவாங்கும் எண்ணங்களும்!
இவைகளை மாற்றி அமைக்க
நீதான் எடுக்க வேண்டும்
ஆயுதத்தை!
வன்முறை என்னும்
ஆயுதமா?
அல்லது அன்பு என்னும்
ஆயுதமா?
பீரங்கிகளோ,
எறிகணைகளோ,
கண்ணிவெடிகளோ அல்ல!
உன்னில் புதைந்துகிடக்கும்
இயேசுவின் வார்த்தை
என்னும் ஆயுதத்தை எடு.
இந்த உலகை புது
உலகமாக மாற்றி
அமைத்திடு.

*ஈ. எச். தர்மேந்திரன்,*
*பள்ளிமுனை, மன்னார்*

# கொஞ்சம் சிரிங்க



**ஒருவர் :** நாடகத்திற்கும் சினிமாவுக்கும் என்ன வித்தியாசம்?
**மற்றவர் :** தெரியலையே!
**ஒருவர் :** அப்ப கேட்டுக்க - நாடகம் நடக்கும், சினிமா ஓடும்.

......................

**முருகேசு :** ஒருவன் எருமை மாட்டை அடித்து துன்புறுத்தினான். நான் அதனைக் காப்பாற்றினேன். இதனை எவ்வாறு வர்ணிப்பீர்கள்.
**ரத்னம் :** 'சகோதர பாசம்' என்று.

........................

**நோயாளி :** எனக்கு ஞாபக மறதி கூடிக்கிட்டே போகுது ... மருந்து ஏதும் இருக்கா டாக்டர்?
**டாக்டர் :** இருக்கு
**நோயாளி :** அப்ப கொடுங்க.
**டாக்டர் :** அதை எங்க வைச்சன் என்று மறந்திற்றனே....!

..........................

**ராமு :** உங்க பிறந்த நாளன்று என்ன விஷேசம்?
**சோமு :** அன்றுதான் மகாத்மா காந்தி இறந்து போனார்!
**ராமு :** ஓ... ஒரே நாளில் இரண்டு துக்க கரமான விடயங்களா?

*அ. மேரி கொண்செப்ரா, மடுக்கோவில், மடு.*

**டாக்டர் :** இவருக்கு என்ன நடந்தது?
**புனிதா :** அது ஒண்டும் இல்ல டாக்டர். நான் ஒரு கேள்வி கேட்டன். அதக் கேட்டு மயங்கி விழுந்துட்டா?
**டாக்டர் :** அப்படி என்ன கேள்வி கேட்டீங்க?
**புனிதா :** அதா? "பஸ் ரூட்ல பஸ் போகும். ரெயின் ரூட்ல ரெயின் போகும். பீட்ரூட்ல என்ன போகும்?" என்றுதான் கேட்டேன்.
**டாக்டர் :** .........? ............? ...............?

...............................

**அண்ணா :** டேய்! ராமு இந்த பெரிய யானையில எப்படி ஏறுவாங்க?
**தம்பி :** தெரியாதே! அண்ணா.
**அண்ணா :** இது தெரியாம இருக்கிறியாடா? நான் சொல்லுறன் கேளு. யானை குட்டியாக இருக்கும்போதே ஏறிடுவாங்க.

*புனிதா வேலுச்சாமி,*
*திருக்குடும்பக்கன்னியர் மடம், வவுனியா.*

**மாமி :** பக்கத்து வீட்டு மருமகளைப் பாரு. தினமும் அவ மாமியாரை நமஸ்காரம் பண்றா.
**மருமகள் :** எனக்கும் ஆசையாகத்தான் இருக்கு. மாமியாரின் படத்தை நமஸ்காரம் பண்ண!!!

ம. டிஸாளினி,
தாஸ் கோட்டம், நெளுக்குளம், வவுனியா

# திருப்பாலத்துவ சபைத் தினம் - 29.01.2012

## எமது நாட்டின் சின்னஞ்சிறு மறைத்தூதர்கள் நாமே!

### தேசிய இயக்குனரின் செய்தி

*அருட்தந்தை. ரெஜினோல்ட் சபரமாது,*
*தேசிய இயக்குனர், பாப்பிறை மறைபரப்பு சபைகள்.*



மீட்பராம் கிறிஸ்து திருச்சபையிடம் ஒப்படைத்துள்ள பணி நிறைவு பெறுவதற்கு இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டும். அவரது வருகைக்குப்பின் இரண்டாயிரம் ஆண்டுகள் நிறைவெய்தப்போகும் இவ்வேளையில் மனுக்குலத்தையே ஒரு முழுப்பார்வை பார்க்கும்போது இப்பணியானது இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளதையும், நாம் அதிலே முழுமூச்சுடன் ஈடுபடவேண்டும் என்பதையும் அறிகிறோம். (அருளாளர் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரால் எழுதப்பட்ட "மீட்பின் பணி" என்ற திருத்தூது மடலின் முன்னுரை) திருத்தந்தை 6ம் சின்னப்பர் எழுதிய – 'மறைபரப்பு' என்னும் சுற்றுமடலில் அவர் எடுத்துக்காட்டுவது யாதெனில் "திருச்சபை இருப்பது நற்செய்தியைப் பரப்புவதற்கே" என்பதாகும். அதாவது நற்செய்தியைப் போதிப்பது திருச்சபையின் விசேட அழைப்பாகும். அந்த வகையில் பார்க்கும்போது மீட்பரான கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவரை பின்பற்றிச் செல்பவர்கள் என்னும் ரீதியில் எல்லாக் கிறிஸ்தவர்களும் மறைத்தூதர்களே. துறவற குருத்துவ மற்றும் பொதுநிலையினர், முதியோர், இளைஞர், யுவதிகள், சிறுபிள்ளைகள் என நாம் எல்லோருமே இயேசுக் கிறிஸ்துவின் மறைத்தூதர்கள் ஆவோம். நாம் அனைவருமே அவருக்கு தேவையானவர்கள். ஏனெனில் மீட்பைப் பற்றிய நற்செய்தி, இறையரசைப் பற்றிய நற்செய்தி, இறைத்தந்தையைப் பற்றிய நற்செய்தி ஆகியவற்றை உலகிற்கு எடுத்துக்கூறுவது எமது கடமையாகும். அப்படியாயின் அவரது இம் மறைத்தூதுப் பணியில் பங்குகொள்ள இயேசுவின் சிறிய மறைத்தூதர்களோடு நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

"சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள்." (மாற். 10:14) இது இயேசுவின் அழைப்பாகும், அவர் கட்டளையாகும். அவரது அரசைக் கட்டியெழுப்ப சிறுபிள்ளைகள் அவருக்கு அவசியமாகின்றனர். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் "பொதுநிலையினர் மறைபரப்புப்பணி" பற்றிய வெளியீட்டில் 3வது பகுதியில் தெளிவாகக் கூறப்படுவது யாதெனில், "சிறுபிள்ளைகளுக்குக்கூட அவர்களுக்கான மறைத்தூதுப் பணி உள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் அவரவருக்கு இயலுமான வகையில் தம் நண்பர்களுக்கிடையில் இயேசுவுக்கு உயிருள்ள சாட்சிகளாக வேண்டும்." அவ்வாறே இயேசுக் கிறிஸ்துவின் மறைத்தூதுவராவதற்கு சிறுவர்கள் அவருக்கு தேவைப்படுகின்றார்கள். அவர்களுக்கும் திருச்சபையினுள்ளும் கிறிஸ்துவினுள்ளும் செய்வதற்கான பணிகள் உள்ளன.

கி.பி 1843ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் நான்சி என்னும் இடத்தில் திருத்தந்தை சாள்ஸ் டீ போபின் ஜான்சன் என்பவரால் "சிறுவர்களுக்காக சிறுவர்" எனும் நோக்கோடு திருப்பாலர் சபை ஆரம்பம் கண்டாலும், இன்று இருப்பதைப்போல இலங்கையில் திருப்பாலர்சபை 1987 ஆம் ஆண்டு இன்றைய கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயரும், அப்போதைய பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனருமாக இருந்த அருட்தந்தை மல்கம் றஞ்சித் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 2012ஆம் ஆண்டு திருப்பாலர்களுக்கு ஒரு விசேட ஆண்டாகும். அதாவது இவ்வாண்டு அவர்களின் 25வது ஜுபிலி ஆண்டாகும்.

இவ்வாண்டிற்கான திருப்பாலர் சபை கருப்பொருளானது, "எமது நாட்டின் சின்னஞ்சிறு மறைத்தூதர்கள் நாமே" என்பதாகும்.

திருப்பாலர் சபையின் முக்கிய நோக்கங்களையும் நாம் இவ்விடத்தில் ஞாபகப்படுத்திக்கொள்வோம். அதாவது: இயேசுவை அறிதல் (விசுவாசத்தை அறிதல்), இயேசுவை வாழ்தல் (அறிந்த விசுவாசத்தை வாழுதல்), இயேசுவைப் பகிர்தல் (வாழும் விசுவாசத்தை ஏனையவர்களோடு பகிர்ந்துகொள்ளுதல்) என்பனவாகும். அப்படியாயின் நாம் இந்த ஜுபிலி ஆண்டில் மேலும் மேலும் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி அவர்களது வாழ்வை அர்த்தமுள்ளதாக்குவோம். பூரணப்படுத்தும் இயேசுவிடம் அழைத்துச்செல்வோம். அவர்கள் இயேசுவின் மறைதூதர்கள் என்பதை அவர்களுக்கு புரியவைப்போம். எமது பிரதேசத்தில், கிராமத்தில், பங்கில் உள்ள அனைத்து பிள்ளைகளும் இயேசுவிற்கு அவசியமானவர்கள் என்பதை உணர்ந்து நாம் எமது பிள்ளைகள் அனைவரையும் எமது பங்கின் திருப்பாலர் சபையில் ஒன்றிணைய வழி கோலுவோம். அவர்களோ, நாம் எல்லோருமே எமது சமூகத்தை, உலகை அழகுபடுத்த, ஒளிமயமாக்க வேண்டிய மறைதூதர்கள் என்பதை நினைவில் கொள்வோம்.

பிள்ளைகளே, இயேசு கிறிஸ்துவிற்கு நீங்கள் அனைவரும் தேவை என்பதையும், அவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கிறார் என்பதையும் புரிந்து கொண்டு, இயேசுவின் சிறிய மறைதூதர்களாக இவ்வருடம் முழுவதும் விசேடவிதத்தில் செயலாற்றுங்கள்!

# மன்னா விளம்பரப் பலகை

"உண்மையைப் பேசி உத்தமனாய் வாழ்"
"கடவுளை நம்பு உழைப்பை மறந்துவிடாதே"

*இ. மகிந்தன், அந்தோனியார்புரம்,*
*இலுப்பைக்கடவை, வவுனியா.*

இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் இறப்பு உண்டு. அந்த இறப்பைக் கண்டு பயந்தால் வாழ முடியாது!

*ஜெ. மரியசுகிர்தா, அந்தோனியார் புரம்,*
*இலுப்பைக்கடவை, மன்னார்.*

"நீ தோல்வி பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் உனக்கு வெற்றியின் வழியைக் காட்டுகின்றது"
"நீ பெற்றோருக்கு அடிபணி. பின்பு அனைத்தும் உனக்கு அடிபணியும்"
"அழகான உடையைவிட அன்பான இதயம் மேலானது"

*வி. நிதர்சினி, செம்மண்தீவு, முருங்கன்*

உன்னைப் புண்படுத்தும் உள்ளத்தை நேசி.
ஆனால் நேசிக்கும் உள்ளத்தை புண்படுத்தாதே.
உன்னைப் புரிந்துகொண்டு புண்படுத்துபவர்களைவிட
புரிந்துகொள்ளாமல் பிரிந்துசெல்பவர் மேலானவர்.

*அ. றொபேட்சன், நறுவிலிக்குளம், வங்காலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

— ஆங்கில மூலம் —

தொடர் கட்டுரை அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P*
*வங்காலை.*

## யார் அதிகம் அன்பு செய்கிறாரோ அவருக்கு...

### அத்தியாயம் – 11

நான் பாடசாலையில் படிக்கும்போது மரியாதையின் நினைவுக்குரிய வகுப்பாசிரியரான வண. சகோதரர் சீசர் அவர்கள் லைய்ஹண்ட் என்பவர் எழுதிய "தங்கப் பீங்கான்" என்ற ஒரு அழகான கவிதையை எங்களுக்கு கற்றுத்தந்தார்.

அது கருத்து நிறைந்த ஒரு கவிதையாக இருந்தபடியால் மாணவர்களாகிய நாங்கள் அதை மிகவும் விரும்பினோம். அது இன்றுகூட ஒரு பெறுமதிமிக்க கவிதான்.

"யார் அதிகம் அன்பு செய்கிறாரோ அவருக்கு மோட்சத்தில் இருந்து ஒரு கொடை" இந்தக் கவர்ச்சியான சொற்கள் செதுக்கப்பட்ட ஒரு தங்கப்பீங்கான் மோட்சத்தில் இருந்து பெனாறஸ் தேவாலய வளவுக்குள் விழுந்தது. அந்த தேவாலயத்தின் குருவானவர் ஆச்சரியமடைந்தார். அவர்கள் அந்த அதிசய தங்க பீங்கானைச் சுற்றி குழப்பத்துடனும், கலக்கத்துடனும் ஒன்றுகூடினார்கள்.

அந்த நாடு பூராக உள்ள பக்தர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும், தயாளகுணம் உள்ளவர்களுக்கும் மோட்சத்தில் இருந்து வீழ்ந்த அற்புதமான கொடையைப் பெறத்தகுதி உள்ளவர்கள் வந்து பெற்றுக்கொள்ளும்படி செய்தி அனுப்பினார். ஆயிரக்கணக்கான விண்ணப்பதாரிகள் வந்து குவிந்தனர். அவர்களுக்குள்ளே தனது தோட்டத்தை ஒரு வருடத்துக்குள்ளே பிரித்து ஏழைகளுக்கு கொடுத்த ஒருவரைத் தெரிந்தெடுத்தார். அவரை வந்து அந்த தங்கப் பீங்கானைப் பெற்றுக்கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். அவர் வந்து அதைத் தொட்டவுடனே ஓ! என்ன ஆச்சரியம் அந்தத் தங்க பீங்கான் வெறும் ஈயப்பீங்கானாக மாறிவிட்டது. அந்த விண்ணப்பதாரர் தான் இந்த மோட்சக் கொடைக்கு தகுதியற்றவர் என்பதை அறிந்துகொண்டார். ஆகவே அவர் அதைக் கீழே போட்டதும் அது திரும்பவும் தங்கபீங்கானாக மாறிவிட்டது. பின்னர் அந்தக் குருவானவர் அந்த நாட்டில் உள்ள பரிசுத்தமான ஆண்களுக்கும் பெண்களுக்கும், முனிவர்களுக்கும், கல்விமான்களுக்கும், இளவரசர்களுக்கும், இளவரசிகளுக்கும் கடிதங்களை எழுதி அனுப்பினார். மூன்று முறைகள் அந்தக் கொடை கொடுக்கப்பட்டு ஈயபீங்கானாக மாறியது. குருவானவர் திகைப்பும் ஆவலும் அதிசயமும் கொண்டார். அதேவேளை பிச்சைக்காரர்களின் கியூ வரிசை பெனாரஸ் கோவில் வளவை அண்டி நீண்டுவிட்டது. அங்கே நொண்டி, முடவர், அனாதைகள், துறவிகள் நகரத்தின் வழி நெடுக நின்று விண்ணப்பித்தவர்களிடம் ஒன்று, இரண்டு நாணயங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். மறுவருடமும் கடந்துவிட்டது. ஆனால் இன்னும் அந்தத் தங்கபீங்கான் அது விழுந்த இடத்திலேயே கிடந்தது.



ஒரு நாள் ஒரு சாதாரண மனிதர் தான் முன்பு வைத்த நேர்த்தியைச் செலுத்துவதற்காக - ஆனால் மோட்சத்தின் கொடையைப் பற்றி அறியாமல் - வந்துகொண்டு இருந்தார். அவர் அந்த ஏழைகள் நின்ற வழியாலே வந்துகொண்டிருக்கும்போது அவரது கவனம் யாவராலும் ஒதுக்கப்பட்டு ஒரு மூலையில் நடுங்கிக்கொண்டிருந்த, முற்றாகக் கண் தெரியாத ஒரு ஏழைப் பிறவியின்மீது விழுந்தது. அந்த மனிதன் கருணையுடன் சென்று அவனை அணுகி அவன் காலடியில் முழந்தாளிட்டான்.

அவன் அந்த ஏழையின் கைகள் நடுங்குவதையும், உதடுகள் துடிப்பதையும் கண்களில் நீர் நிறைந்து வழிவதையும் கண்டு "சகோதரா" என்று அன்புடன் மெதுவாக அழைத்து, "தைரியமாக இரு. கடவுள் நல்லவர். அவர் உன்னைக் கவனித்துக்கொள்வார். நான் எனது செபத்தில் உன்னை எப்பொழுதும் நினைப்பேன்." என்று கூறி தனது பையில் உள்ள பணத்தை அந்த ஏழை குருட்டுப் பிறவியின் பாத்திரத்தில் இட்டு தனது பையைக் காலியாக்கினார்.

அவர் தனது கோவிலிலே நேர்த்திக்கடனை முடித்துவிட்டு வெளியேறத் தொடங்கினார். ஒரு அதிசயமான குரல் குருவானவரைத் தூண்டி கோவில் வளவிலே செல்லும் அந்த மனிதரை அழைக்குமாறு கூறியது. குருவானவர் அந்த மனிதரை அணுகி மோட்சத்து கொடையை தொடுமாறு பணித்தார். அவர் அதைத் தொட்டதும் ஓ! என்ன அதிசயம் அந்தத் தங்கபீங்கான் மூன்று பங்கு பிரகாசமாக ஜொலித்தது. "வெற்றி" அந்த குருவானவர் சப்தமிட்டார். "நண்பனே அந்த அதிசயமான கொடை உன்னுடையதே ஏனென்றால் உன் அன்பு அதிகமானது என்றார்.

---

## எம் மண்ணில் ஒரு தியானயோகி தவத்திரு தோமஸ் அடிகள்



1. தவத்திரு தந்தை தோமஸின் அவதாரம்
   தந்தையின் நித்திய திட்டத்தில் ஓர் அத்தியாயம்
   தாழ்மையின் இருப்பிடமான அவர்
   தபத்தை தனதாக்கி வீரனானார்
2. உடலில் பலமில்லை உருவமில்லை
   பாரின் கண்களுக்கு உன்னிப்பாய் உயர்ந்து நிற்க
   ஆன்மாவின் கவசமாய் தாழ்ச்சியைக் கொண்ட இவர்
   தியானத்தில் மனதை ஒறுத்து யோகியானார்.
3. திரித்துவத்தின் ஆலயமாக வாழ்ந்த இவர்
   வாழ்வின் எந்நிலையிலும் நற்கருணை பிரசன்னம் நாடி
   தூய ஆவியில் நிறைவுகண்டு மகிழ்ந்து
   காண்போருக்கு வாழ்வால் சாட்சி சொன்னார்
4. தியாகத்தில் தனைக்கரைத்த தியான யோகி
   பாரிற்கு இறை செய்தி சொல்ல தரிசனம் பெற்றவர்
   இறை வல்லமையில் அற்புதங்கள் செய்தவரைக் கண்டு
   வாழும் புனிதரைக் காண்கிறோமென வியந்தது மனிதம்.
5. பத்திமா அன்னையின் வேண்டுகோளுக்கு அடிபணிந்து
   கரமேந்திய செபமாலைவழி பாரினை மீட்க
   மண்ணக அரசை நிலைநாட்டும் சாத்தானை முறியடிக்க
   செபமாலைக் கன்னியராக எம்மை மாற்றினார்.
6. வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய எம் ஞானத்தந்தைக்கு
   புதல்வியர் நாம் புகழாரம் சூட விழைகின்றோம்.
   விண்ணகத்தில் புனிதராய் திகழும் தந்தைக்கு
   வாழ்த்துக்கள் பல நாம் கூறுகின்றோம்.
7. உம் பிள்ளைகள் நாங்கள் உம்மை வாழ்த்துகிறோம்
   எம் வாழ்வு சிறந்து பலன் கொடுத்திட
   நூறாண்டுகள் கடந்த யூபிலி ஆண்டில்
   மகிழ்வோடு நாமும் வாழ்த்தி நிற்கின்றோம்.

செபமாலைக் கன்னியர், பட்டிம், மன்னார்.

---

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 99இற்கான கேள்விகளுக்கு 18 பேர் விடையளித்திருந்தனர்.

### பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:

*வி. ஜீன் சுயாட்,*
*மடுமாதா சிறிய குருமடம்,*
*மன்னார்.*

### பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. நிலோமி லியோன், முத்தரிப்புத்துறை.
2. வி. மேரி மெற்றலின், தெற்கிலுப்பைக்குளம், வவுனியா.
3. எ. பத்திநாதன் வதனா, வா.பெற்றான்கண்டல், அளவக்கை.
4. சுமணா ஜோண் பிகிறாடோ, பள்ளிமுனை மேற்கு, மன்னார்.
5. ஜெ. மயூரினி பெணான்டோ, 9ம் வட்டாரம், வங்காலை.
6. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.
7. அ. நெல்சினி, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
8. பி. யே. அமலக்குயின், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
9. விஜயதாஸ் நிதர்சிக்கா, செம்மண்தீவு, முருங்கன்.
10. வி. வின்சன் பற்றிக், 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.

### போட்டி 99 இற்கான சரியான விடைகள்

1. விற்கவோ வாங்கவோ முடியவில்லை (13:16-17)
2. ஓர் ஆளை (நீரோ மன்னனை) (13:18)
3. கடவுளுக்கு அஞ்சுங்கள்; அவரைப் போற்றிப் புகழுங்கள். ஏனெனில் அவர் தீர்ப்பளிக்கும் நேரம் வந்துவிட்டது. மண், கடல், நீரூற்றுக்கள் ஆகியவற்றைப் படைத்தவரை வணங்குங்கள். (14:7)
4. ஏழு வானதூதர்கள் கொண்டிருந்த ஏழு வாதைகளோடு (15:2)
5. ஆறுகள்மீதும் நீரூற்றுக்கள்மீதும் ஊற்றினார். (16:4)
6. இறைமக்களின் இரத்தத்தையும் இயேசுவின் சாட்சிகளுடைய இரத்தத்தையும் குடித்து வெறிகொண்டிருந்தாள். (17:3;6)
7. பாபிலோன் நகர் (18:1)
8. இறைமக்களின் நீதிச் செயல்கள் (19:8)
9. ஆயிரம் ஆண்டுகளுக்கு (20:2)
10. இறந்தோரின் செயல்கள் அந்நூலில் எழுதப்பட்டிருந்தன. (20:12)

**அறிவித்தல்** - குறுக்கெழுத்துப்போட்டி, மறையறிவுப் போட்டி ஆகியவற்றிற்கான பரிசுத்தொகைகள் அனுப்பாதவர்களுக்கு காசுக்கட்டளையாக பரிசுகள் பதிவுத் தபாலில் [illegible] - ஆசிரியர்

---

## உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 101

திருப்பாடல்கள் இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் எவ்விதம் பயன்பட்டன? எங்கு எப்போது பயன்பட்டன? என்பது பற்றி சென்ற மாத இதழில் பார்த்தோம்.

திருப்பாடல்கள் 150 தொகுக்கப்பட்டு வேதாகமத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. இவை யாவும் ஒரு கால எல்லையில் ஒருவரால் அல்லது ஒரு குழுவினரால் எழுதப்பட்டவை எனச் சொல்வதற்கில்லை. இஸ்ராயேல் மக்களின் நீண்ட வரலாற்றில் அவர்கள் துன்பங்களால் பீடிக்கப்பட்டபோது, அல்லது அடிமைத்தனங்களில் அல்லற்பட்டபோது அல்லது அந்தத் துன்பங்களிலிருந்து மீட்கப்பட்டபோது அவர்கள் ஒன்றுகூடிச் செபிக்க இப்பாடல்கள் தோன்றின. இவை வாய்மொழியாக பரம்பரையாகப் பாடப்பட்டு எழுத்துருவம் பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வேதாகமத்திலும் இடம்பிடித்துள்ளன.

இவற்றில் அதிகமான பாடல்கள் தாவீதின் பாடல்கள் ஆகும். அவை 70 பாடல்கள். பொதுப் பாடல்களாக 50 பாடல்கள் உள்ளன. கோராக்கியரின் பாடல்கள் 10ம், ஆசாமின் பாடல்கள் 12ம், ஏனைய பாடல்கள் ஒவ்வொன்றாகவும் இருக்கின்றன. மோசேயின் பாடல்கூட ஒன்று இருக்கின்றது என்றால் மோசேயின் காலத்திலிருந்தே இப்பாடல்கள் தோன்றியிருக்கின்றன என்று அர்த்தமாகின்றது.

ஒவ்வொரு பாக்களிலும் கடவுளின்மேல் இஸ்ராயேல் மக்கள் கொண்டிருந்த விசுவாச உணர்வு இழையோடி இருப்பதைக் காணலாம்.

**இனி நமது வினாக்களுக்கு வருவோம். வினாக்கள் 9ம் திருப்பாடல் முதல் 13ம் திருப்பாடல் வரை உள்ள பகுதியிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**
**பொருத்தமற்ற வாக்கியத்தின்கீழ் கீறிடுக.**

1. துன்பத்திலிருக்கும் தாவீது மன்னன் ஆண்டவரை நோக்கி வேண்டுவது என்ன?
1.1 ஆண்டவரே என்மீது இரக்கமாயிரும்
1.2 என்னைப் பகைப்போரை ஆசீர்வதியும்
1.3 சாவின் வாயிலில் நின்று என்னை விடுவியும்
1.4 நீர் அருளும் விடுதலை குறித்து மகிழ்வேன்.

2. பொல்லாதவர் செய்யும் கருமங்கள் எவை எனச் சொல்லப்படுகின்றது?
2.1 தம் இறுமாப்பினால் எளியோரைக் கொடுமைப்படுத்துகின்றனர்.
2.2 தம் தீய நாட்டங்களினால் தற்பெருமை கொள்கின்றனர்.
2.3 சூதறியாதவர்களை மறைவிடங்களில் கொலை செய்கின்றனர்.
2.4 நேர்மையான வழிகளில் நாட்டம் கொண்டுள்ளனர்.

3. ஆண்டவரின் வாக்குறுதிகள் எப்படிப்பட்டவை?
3.1 நேர்மையற்ற வாக்குறுதிகள்
3.2 கலப்பற்ற வாக்குறுதிகள்
3.3 மண் உலையில் தூய்மையாக்கப்பட்ட வெள்ளி போன்றவை
3.4 ஏழுமுறை புடமிடப்பட்டவை

4. 13ம் திருப்பாடலில் தாவீதரசன் வேண்டுவது என்ன?
4.1 என்னைக் கண்ணோக்கி எனக்குப் பதிலளியும்
4.2 என் விழிகளுக்கு ஒளியூட்டும்
4.3 என் பகைவர் என்னை வெல்ல உதவும்
4.4 சாவின் உறக்கத்தில் நான் ஆழ்ந்துவிடாமற் காத்தருளும்.

5. யாக்கோப்பின் இனத்தார் எப்போது களிகூர்வார்கள்? இஸ்ராயேல் மக்கள் எப்போது அகமகிழ்வார்கள்?
5.1 ஆண்டவர் தம் மக்களுக்கு மீண்டும் வழமான வாழ்வை வழங்கும்போது
5.2 சீயோனிலிருந்து இஸ்ராயேல் மக்களுக்கு மீட்பு வரும்போது
5.3 ஆண்டவர் எளியோருக்கு அடைக்கலமாய் இருக்கும்போது
5.4 எளியோரின் திட்டத்தை அவர்கள் தோல்வியுறச் செய்யும் போது.

6. தாவீதரசன் இறைவன் தனக்கு என்ன உதவிகள் செய்வார் என எண்ணுகின்றார்?
6.1 தன்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டார் என்று
6.2 தன்னைப் படுகுழியைக் காணவிடமாட்டார் என்று
6.3 இனிமையான நிலங்கள் தனக்கு பாகமாகக் கிடைக்காது என்று
6.4 வாழ்வின் வழியை அறியச் செய்வார் என்று

7. பிறமானிடர் போலல்லாது தான் என்ன செய்ததாக தாவீது மன்னர் ஆண்டவரிடம் கூறுகின்றார்?
7.1 வன்முறையாளர்களின் வழிகளை விட்டுவிலகியுள்ளேன்
7.2 எனது நடத்தை தீயவழிகளில் நாட்டம் கொண்டுள்ளது.
7.3 என் நடத்தை உம் பாதைகளில் அமைந்துள்ளது.
7.4 என் காலடிகள் உம் வழியினின்று பிறழவில்லை.

8. தாவீதின் எதிரிகள் என்ன செய்வதாக அவர் ஆண்டவரிடம் முறையிடுகின்றார்.
8.1 அவர்கள் கடவுளைப் போற்றிப் புகழ்கின்றனர்.
8.2 அவர்கள் தாவீதரசனைப் பின்தொடர்கின்றனர்.
8.3 அவர்கள் அவரை வளைத்துக்கொண்டனர்
8.4 அவர்கள் அவரை வீழ்த்துவதற்கு வைத்தகண் வாங்காது காத்திருக்கின்றனர்.

9. என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன். அவர் என் குரலைக் கேட்டார். தாவீதரசனுக்கு வந்த நெருக்கடி என்ன?
9.1 சாவின் கயிறுகள் என்னை நெருக்கின
9.2 அழிவின் சுழல்கள் என்னை மூழ்கடித்தன
9.3 சாவின் கண்ணிகள் என்னைச் சிக்கவைத்தன
9.4 என் எதிரிகள் என்னைவிட்டு ஓடிப்போயினர்.

10. தாவீதரசனின் கதறல் ஆண்டவரின் செவிகளுக்கு எட்டியதும் கடவுளிடமிருந்து வெளிப்பட்டவை எவை?
10.1 மலைகளின் அடித்தளங்கள் கிடுகிடுத்தன
10.2 அவரது நாசியிலிருந்து புகை கிளம்பிற்று
10.3 அவரது வாயினின்று எரித்தளிக்கும் தீ மூண்டது.
10.4 அவரிடமிருந்து நெருப்புக்கனல் வெளிப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.114

## சீராக்கின் ஞானம் 1 முதல் 30 முடிய

உங்கள் விடைகளை பெப்ரவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | 03 | ✸ | | 04 | | 05 |
| | | | 06 | | | 07 | | 08 | |
| | | | | ✸ | ✸ | | | | 09 |
| | | 10 | 11 | | | | 12 | | |
| ✸ | | 13 | | | 14 | | | | 15 |
| | | | | ✸ | | | | | 16 |
| | | | | | | 17 | | 18 | 19 |
| | | | | | ✸ | | | | |
| | 20 | 21 | 22 | | | | 23 | | |
| 24 | | | ✸ | 25 | | | | | |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. உங்கள் தந்தையாகிய எனக்குச் ................ சாயுங்கள்.
4. நான் அழகு அளித்திடும்___செல்வத்தினுடைய ................கள், என் மலர்கள்.
6. சமவெளியெங்கும் வளமான வயலைத் ................
10. உன் வழிகளைச் சீர்படுத்து, ................ நம்பிக்கைகொள்.
12. தாகம் கொண்ட___போன்று .............. தன் வாயைத் திறப்பாள்.
13. ................ கணவரை___அவருக்கு___உருவாக்கும்.
22. கன்னிப் ................ உற்றுநோக்காதே.
24. நீ ................ நிலையில்___நண்பர்களாய் இருப்பார்கள்.
25. அவர்களுக்குப் பதிலாக ................ அமர்த்துகிறார்.

### வலமிருந்து இடம்

5. என் ................ வயிறார உண்ணுங்கள்.
8. அறிவுக்கூர்மை கொண்டோரின் பேச்சு ................ தருகின்றது.
9. பொய் பேசுதல் மனிதருக்கு அருவருக்கத்தக்க ................ ஆகும்.
15. ................ நிலவுபோல மாறுபடுவர்.
16. அறிவிலார் சிந்திக்குமுன் ................
18. கண்ணியினின்று தப்பி ஓடும் ................ போல் ஓடிவிட்டார்.

### மேலிருந்து கீழ்

1. அன்னையரை மேன்மைப்படுத்துவோர் ................ திரட்டி___ஒப்பாவார்.
2. ஆண்டவர் உன்னைத் தண்டியாமல் ................ .
3. ................ பனிபோன்று மண்ணுலகை மூடிக்கொண்டேன்.
5. மனிதரின் ................ கண்டுவிடுமோ___அஞ்சுகிறார்கள்.
7. அப்போது உன் வீட்டாரின் ................ ச் சொற்களை நீ கேட்க மாட்டாய்.
8. ................ ப் பற்றுள்ளோர்மீது அதற்கு ஆற்றலில்லை.
10. ................ ப் பணி செய்வோர்___புரிகின்றனர்.
14. மூடரின் உள்ளம் ஓட்டைக் ................ போன்றது.
17. உன்னத இறைவன்___நினைத்துப் ................
18. அவரது படைத்திரள்___தமது ................ யை எடுத்துரைக்கிறது.
19. தங்களுக்கு எதிராகவே குற்றம் ................ நீதிமான்களென யாரே கணிப்பர்?

### கீழிருந்து மேல்

8. ஒருகால் அதைச் செய்திருந்தாலும் ................ மேலாவது செய்யாதிருப்பார்கள்.
10. ஆண்டவரிடம் கொள்ளும் ................ மாட்சியும் பெருமையுமாகும்.
11. உயர் வானங்களில் நான் வாழ்ந்து ................
12. அதன் முகம் இரும்பு நுகம் ................ சங்கிலிகள் வெண்கலச் சங்கிலிகள்.
17. தக்க நேரம் ................
18. புறங்கூறுவோர் தங்களையே ................ படுத்திக்கொள்வர்.
20. ................ முன் உன்னையே___கொள்ளாதே.
21. உன் தகுதிக்கு ஏற்ப உன்னையே நீ ................
22. ................ அழகால்___பிறழ்ந்துள்ளனர்.
23. அடுத்திருப்பவருக்கு___தேவைகளில் ................ கொடு.
24. உன் செல்வங்களில் ................ வைக்காதே.
25. உண்மையான___ஒபீர் நாட்டுப் பொன்னுக்காகவும் ................ மாற்றாதே.

## மன்னார் மறைமாவட்ட ............

8ஆம் பக்கத் தொடர்ச்சி

**தீர்மானம்: 06**

இறப்பு வீடுகளில் நல்லடக்கச் சடங்கிற்கு முன்பாகவும் நல்லடக்கத்திற்குப் பின்னரும் திருப்பாடல்களையும், கிறிஸ்தவ புலம்பல்களையும் பாடுவதும், இறந்தோரின் ஆன்ம சாந்தி வேண்டியும் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் வேண்டியும் செபவழிபாடுகளை நடாத்துவதுமான செயற்பாடுகளைச் செய்தல். இப்படியான பல்வேறு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மறைக்கல்வியை வாழ்க்கைப்பாடமாக கடைப்பிடிக்க முயலுதல்.

செயற்பாடு: பங்குத்தந்தை, பங்கு வழிபாட்டுக் குழு, நல்மரண பரித்தியாக சபை, முதியோர் சங்கம்.

**தீர்மானம்: 07**

வைகாசி, ஐப்பசி ஆகிய வணக்க மாதங்களில் அன்னை மரியாள் பக்தியை ஊக்கப்படுத்த மாதா சுருபங்களை அனைத்துக் குடும்பங்களுக்கும் எடுத்துச்சென்று சிறப்பு வழிபாடுகளை நடாத்துதல். அச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மறைக்கல்வியை ஊட்டுகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

செயற்பாடு: பங்குத்தந்தை, மரியாயின் சேனை, மாதா கூட்டத்தினர், வழிபாட்டுக்குழு, அன்பியப் பணியாளர்.

### ஆணைக்குழுக்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள்

மறைமாவட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் மறைமாவட்ட சிறப்புப் பணிகளை முன்னெடுத்து அதனது விடயப்பரப்புக்குள் உள்ளவர்களுக்கும் மறைமாவட்ட பங்குகளுக்கும் மறைவாழ்வு அறிவினையும் அனுபவத்தையும் கொடுக்கும் பெரும் பணிகளை ஆற்ற கடமைப்பட்டுள்ளதன்படி இவ்வாண்டில் ஆணைக்குழுக்கள் முன்னெடுக்க விதந்துரைக்கப்படும் செயற்பாடுகள்:

**தீர்மானம்: 01**

ஏன் இந்த மறைக்கல்வி ஆண்டு என்பதைத் துண்டுப்பிரசுரங்கள் ஊடாக பங்கின் அனைத்து நிலையினருக்கும் மறையாசிரியர்கள் ஊடாகவும் பங்குப்பணியாளர்கள் ஊடாகவும் அறியச் செய்தல்.

செயற்பாடு: மறைக்கல்வி ஆணைக்குழு

**தீர்மானம்: 02**

மறைக்கல்விக் கண்காட்சியினை நடாத்துதல்.

செயற்பாடு : மறைக்கல்வி ஆணைக்குழு தலைமையில் அனைத்து ஆணைக்குழுக்களும், பங்குகளும்.

**தீர்மானம்: 03**

மறைக்கல்வி பற்றிய நூல் வெளியிடுதல், கலைகள் ஊடாக மறைக்கல்வி விழிப்புணர்வைக் கொடுத்தல், மறைமாவட்ட பத்திரிகையில் மறைக்கல்விச் சிந்தனைகளைக் கொடுத்தல்

செயற்பாடு: சமூகத் தொடர்பு ஆணைக்குழு, மன்னா பத்திரிகை மையம்.

**தீர்மானம்: 04**

தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மறைக்கல்வி வகுப்புகளுக்கு இடையூறு இல்லாத வகையில் இயங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

செயற்பாடு : பல்சமய உரையாடல் ஆணைக்குழு

**தீர்மானம்: 05**

இளைஞர் ஆண்டு தொடர் நிகழ்வுகளை (இளைஞர் குழு திருப்பலி, இளைஞர் தோழமைக் குழு உருவாக்கம், விளையாட்டு, குறுந்திரைப்படம், நாடகம், பாசறை போன்றன) மேற்கொண்டு இளைஞர்களுக்கு மறைக்கல்வி வழங்குதல்.

செயற்பாடு: பங்குமட்டத்தில் பங்குத்தந்தை, மறைமாவட்ட மட்டத்தில் இளைஞர் ஆணைக்குழு.

**தீர்மானம்: 06**

வேதாகம அறிவை பல்வேறு மட்டத்தினருக்கு துண்டுப்பிரசுரங்கள், வேதாகம வகுப்புகள், விவிலியத் திரைப்படங்கள், இறைவார்த்தைப் பகிர்வு மற்றும் விவிலியத் தியானங்கள் ஊடாக வழங்கி மறைக்கல்வியை வாழ்க்கைப்பாடமாகக் கொடுத்தல்.

செயற்பாடு: விவிலிய ஆணைக்குழு, மறைக்கல்வி ஆணைக்குழு, சமூகத் தொடர்பு அருட்பணி மையம் மற்றும் ஆன்மீக மையம்.

### பிராந்திய மட்டத்தில் மறைக்கல்வி

மன்னார், யாழ்ப்பாணம், திருமலை மட்டுநகர் மறைமாவட்டங்கள் மூன்றும் 2012ம் ஆண்டினை மறைக்கல்வி ஆண்டாகக் கருத்தொருமித்து கடைப்பிடிக்க தீர்மானித்ததன் பின்னணியில் இம்மறைமாவட்டங்களுக்கிடையிலான மேய்ப்புப் பணி சார்ந்த வளங்களைப் பகிர்ந்து இணைந்த செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக பின்வரும் முன்வைப்புக்கள் பரிந்துரைக்கப்படுகின்றன.

**தீர்மானம்: 01**

ஏனைய தமிழ் மறைமாவட்டங்களுக்கு மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்களை உறவுப்பால நிகழ்வுகளுக்காக அழைத்துச் செல்லல்.

**தீர்மானம்: 02**

மூன்று மறைமாவட்ட (மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை-மட்டக்களப்பு) மறையாசிரியர்களுக்கான பொது ஒன்றுகூடல்களை மறைமாவட்ட மறையாசிரியர் பிரதிநிதிகளைக் கொண்டு ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஒரு தடவையேனும் வைத்து அனுபவப் பகிர்வுடன் பயிற்சி வழங்குதல்.

**தீர்மானம்: 03**

மூன்று மறைமாவட்டங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மறைக்கல்வி ஆண்டு பொது ஒன்றுகூடலை நடாத்த முயலுதல்.

*"திருச்சபை மறைக்கல்வியை தனது புனித கடமையாகவும் விட்டுக்கொடுக்க முடியாத உரிமையாகவும் எக்காலத்திலும் கருதி வந்துள்ளது."* - திருத்தந்தை 2ம் யோவான் பவுல்

## வங்கி மூலம் மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978‍2

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 112ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
அ. டிலோஜன்,
சூரியகட்டைக்காடு, நானாட்டான்.

**இரண்டாம் பரிசு:**
ஜெ. மயூரினி பெணான்டொ,
9ம் வட்டாரம், வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
கி. கீதப்பிரியன்,
தேவன்பிட்டி, மன்னார்

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 62 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 56 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 112ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ச. அன்ரனீற்றா, பொன்தீவுகண்டல், அளவக்கை.
2. ம. றீசா ராசமலர் குரூஸ், முத்தரிப்புத்துறை, அரிப்பு.
3. ச. ஜெயந்திமாலா, கல்நாட்டி, முருங்கன்.
4. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
5. அ. றொசானி, சென் மேரீஸ் வீதி, அடம்பன்.
6. யே. வினோதினி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
7. எம். சோபியா, பறப்பாங்கண்டல், பெரியகுளம்.
8. இ. டில்ஷா, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
9. அ. டிசாந்தன், சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
10. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
11. டெபோறா மோகன்ராஜ், தபால்கந்தோர் வீதி, மன்னார்.
12. ம. மத்தியூஸ் குருஸ், முத்தரிப்புத்துறை, அரிப்பு.
13. செ. யேசுதாசன், முருங்கன்பிட்டி, முருங்கன்.
14. எல். கனிஸ்டன், முதலியார் குளம், செட்டிகுளம்.
15. எஸ். பிரான்சிஸ் ரமா, தலைமன்னார் கிராமம்.
16. ச. அருளானந்தம், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
17. எஸ். டயானா, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
18. ஜெ.எஸ். சுகன்யா, மாதா கோவில் வீதி, தலைமன்னார்.
19. பி. நிதன், நறுவிலிக்குளம், வஞ்சியங்குளம்.
20. நோ. ஜெக ஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
21. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்
22. எஸ். மேரிகுலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
23. யே. ஜீவஜெஸ்மின் (சுஜி) முருங்கன் கமம், முருங்கன்.
24. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
25. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
26. ஜெ. எஸ். லிற்வினியா, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
27. ந. ஜெஸ்மின், முதலியார் குளம், செட்டிகுளம்.
28. எஸ். மேவின், பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
29. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
30. கிறிஸ்துராசா கிளின்ரன், தேவன்பிட்டி.
31. எஸ். மிதுசன், பனங்கட்டுகொட்டு மேற்கு, மன்னார்.
32. ஜெ. எ. பிறிற்றோ, மாதாகோவில் வீதி, தலைமன்னார்.
33. எஸ். ஆனந்டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
34. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
35. பி. டிறோன், பனங்கட்டுகொட்டு மேற்கு, மன்னார்.
36. ம. யஸ்ரீன் பிரபாகர், பெரிய குளம், பறப்பாங்கண்டல்.
37. எவ். கில்மன், மணற்குளம், உயிலங்குளம்.
38. அ. றஞ்சினி செபஸ்தியம்மா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
39. அருட்சகோதரி, மேரி பற்றீசியா, ஆலயவீதி, தோட்டவெளி.
40. கென்றீசன் சுகந்தினி, பொன்தீவு கண்டல், அளவக்கை.
41. ய. யனோசிகா, பெரியகுளம், பறப்பாங்கண்டல்.
42. ராணி அரசரத்தினம், தபால் கந்தோர் வீதி, மன்னார்.
43. இ. செலின் மதுசா, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
44. அ. றூபிகா லியோன், முத்தரிப்புத்துறை.
45. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
46. எஸ்.கே. டில்ஷன், செட்டியார் மகன் கட்டையடம்பன்.
47. குணமணி சேவியர், திருக்குடும்ப கன்னியர் மடம், மன்னார்.
48. இ. சகாய றொக்சன், சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
49. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
50. சுமன் டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.

## இல.112 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப[1] | ரி | சு | செ[2] | ல் | வ | த் | தி[3] | ன் | ர் |
| டை | ✸ | ன் | இ[4] | ர | ண் | டு | ர | ணி | வோ |
| ப் | வை[5] | க | றை | யி | ல் | னி | ண் | ண் | ரி |
| பு | லி | ம[6] | வ | ய் | தா[7] | க[8] | டு | பெ[9] | பு[10] |
| க | ப[11] | ✸ | ன் | பொ[12] | கா[13] | ளை | க[14] | ண் | க[15] |
| ள் | டை | நா[16] | ண | ல் | வி[17] | டி | மு[18] | ணை | ழ் |
| கு[19] | ழ | லு | ம் | தி | ழி | ம் | மை | தீ[20] | ப் |
| ரு | உ[21] | ம் | யு | ந் | ப் | ணு | ம் | லு | பா[22] |
| வா[23] | ன் | ✸ | னி | ரு | பா | ண் | ந[24] | ✸ | ட |
| ய் | வா[25] | மு | க[26] | வி[27] | ய் | க[28] | ட | லி | ல் |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.113ற்கான முடிவுகளை 2012ம் ஆண்டு பெப்ரவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/=
கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



கி.ஜெராட் ஞானகரன் (ஜெராட்)
மலர்வு – 1979.06.28
உதிர்வு – 2008.01.29



செ. யூட்கொஸ்ரன் (றெனி)
மலர்வு –1992.08.11
உதிர்வு – 2008.01.29



செ. யூட்கொலின்ரன் (ஜெனி)
மலர்வு – 1995.07.08
உதிர்வு – 2008.01.29

*"நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன் உங்களிடம் திரும்பிவருவேன்"*
*(யோவான் 14:18)*

அன்பின் அருமைச் சகோதரர்களே!
ஆண்டுகள் நான்கு அகன்றுவிட்டாலும்!
இவ்வுலகைவிட்டு நீங்கள் சென்றுவிட்டாலும்!
ஆண்டவன் அடியில் உங்கள் ஆன்மா இளைப்பாறும்!
உங்கள் முகங்கள் ஒருபோதும் எம்மைவிட்டுப் பிரியாது
ஊர் எல்லாம் உங்கள் பேச்சு இன்னும் கேட்கிறது
எங்கள் உள்ளம் உங்களுக்காய் ஏங்குகின்றது.
ஏன் இந்த நிலை எமக்கு என்று வருந்துகிறோம்
ஐயோ, என்று ஆறுதலுக்காய்க் காத்திருக்கிறோம்.

ஒருபொழுதும் எம் விசுவாசம் வீண்போகாது
ஓடிவிடாது உங்கள் நினைவுகள்!
எம்மை விட்டு அகலாது உம் பேச்சுக்கள்.

*இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கும்*
*என்றும் உங்கள் உறவுகள்,*
*அப்பா, அம்மா, சகோதரர்கள்*
*உற்றார், உறவினர், நண்பர்கள்.*

தகவல் : குடும்பத்தினர்.

அன்றைய நாளில் இறந்த அனைத்து
ஆன்மாக்களையும் நினைவு கூறுகின்றோம்.

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி





திரு. நந்தகுமார் — திருமதி. றெசின் ஜீன்
மலர்வு : 14.02.1975 — 18.08.1979
உதிர்வு 12.01.2006



கனிந்தவுன் பூ முகமும்
கண்கொள்ளாப் புன்னகையும்
இனிய வார்த்தைகளும்
இன்றெங்கே போனதம்மா?
நீங்கள் மறைந்து வருடங்கள்
ஆறு ஆனாலும் கண்ணீருடன் உங்கள்
நினைவுகளையும் பாசத்தையும்
நிதம் நினைத்து அழுகின்றோம்.
காலங்கள் எத்தனை ஓடி மறைந்தாலும்
என்றுமே எங்கள் இதயத்தில் நீ இருப்பாயம்மா...

*உங்கள் பிரிவால் துயருறும் :*
*குடும்பத்தினர், பேசாலை.*

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 02 | | 09 |
| 10 | | 01 |
| 1979 | | 2010 |



*மொறின் கேமலதா*
*குமனாயங்குளம், ஆண்டாங்குளம்.*

புன்னகையானது உன் முகம்.
புண்படுத்தாதது உன் மனம்.
பாசமானது உன் கரங்கள்.
பார்த்திருக்கப் பிரிந்து சென்றாயோ?
நேசமாகப் பழகுவாயே
நினைத்துக்கொண்டிருக்கின்றோம்
உன் நீங்காத நினைவுகளை
நித்திய இறைவனோடு சங்கமமாக - உனக்காக
செபிக்கின்றோம் எப்போதும்.

தகவல் - குடும்பத்தினர்.

## குருத்துவ வாழ்வில் ஐம்பதாவது .....

6ஆம் பக்கத் தொடர்ச்சி

தொகுத்து நோக்கும்போது அடிகளாரின் வரலாற்றுப் பின்னனி பலவித சிறப்புக்களைக் கொண்டது. விசுவாசத்தின் வித்துக்களாகவும், துறவறத்தின் பூங்காவாகவும், இசைக்கலைஞர்களுடைய உருவாக்கத்தின் தொட்டிலாகவும், ஆசிரியத்துவம் சிறந்து விளங்கிய வித்தியாலயமாகவும், குள அதிகாரத்தின் அதிகார ஆட்சியாகவும் குடும்பங்கள் மிளிர்ந்தன என்றால் மிகையாகாது.

சேவியர் குரூஸ் அடிகளார் குருப்பட்டத்தை உரோமாபுரியில் 1961 மார்கழி 20 ஆம் திகதி பெற்றார். 1964 – 1970 வரை உயிலங்குளம் - முருங்கன் பங்குத்தந்தையாகவும், புனித மடுத்தீனார் குருமடத்தில் 1970 – 1976 வரையும் குருமட மாணவர்களின் உருவாக்க இயக்குனராகவும் இருந்தார். 1976 – 1978 வரை ஓ. எல். ஆர் என்று அழைக்கப்படும் யாழ் அடைக்கல மாதா ஆலயப் பங்குத்தந்தையாகவும், 1981 இல் இரண்டு ஆயர்கள் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம், பேரருட்திரு. இராயப்பு யோசப் ஆண்டகைகள் ஆட்சிக்காலத்தில் குருமுதல்வராகவும் பணிபுரிந்திருக்கின்றார். மன்னார் மடு மாதா சிறிய குருமடத்தில் 1989 – 1995 வரையும், 2007ல் இலிருந்து - இன்று வரையும் இரு தடவைகளாக சிறிய குருமட அதிபராகப் பணிபுரிந்து வருகின்றார். அத்துடன் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வுச்சங்கத்தின் (ம.து.ம.ச) தலைவராக கடந்த 30 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வருகின்றார். இன்றுவரை அச்சங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்து, உயிரூட்டமாக இயங்கச்செய்து வருகின்ற பெருமை அடிகளாரையே சாரும்.

சேவியர் குரூஸ் அடிகளாரின் விசேட திறன்கள், இலத்தீன் பாடற்பூசை பாடுதல், நன்றாகப் பாடல்கள் பாடும் திறன், ஆர்மோனியம் இசைத்தல், நாடகம் நடித்தல் என்பனவாகும்.

அடிகளார் ஆண்டவன் யேசுவின் அன்புப் பணியினை தொடர்ந்து ஆற்றுவதற்கு உடல் நலமும், ஆன்மீக பலமும் பெற்றிட இறைவனை வேண்டுகின்றேன்.

குருத்துவ வாழ்வில் ஐம்பதாவது பொன்விழாவை கொண்டாடுகின்ற இவ்வேளையில் என் பெற்றோரின் உறவு வழி நின்று உரிமையுடன் வாழ்த்துகின்றேன்.

*வாழ்க பல்லாண்டு! வளர்க உங்கள் சேவை! வாழிய வாழியவே!*

## ஆசியாவிலேயே முதன் முதலாக ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து அருட்திரு எம். நிர்மலராஜ் அடிகளாரால் உருவாக்கப்பட்ட 'அஞ்சாதே நீ' என்ற ஒலி ஒளி குறுந்தகடு வெளியிடப்பட்டது. இந்தக் குறுந்தகடு பற்றிய ஆய்வுரையை மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமான தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார். சபையின் உயர் தலைவர் எம். ஏ. ஸ்ரீபன் அடிகளார் நன்றியுரை வழங்கினார்.

அடிகளாருடைய புனிதப் பட்டத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதால், அவரை மேன்மைப்படுத்தவும் அவருடைய புனிதமான வாழ்வை மக்களுக்கு எடுத்துரைக்கவும் இவ்விழாவும் வெளியிடப்பட்ட குறுந்தகடும் வழிகோலியது' எனலாம்.

தவத்திரு தோமஸ் அ.ம.தி அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு விழா ஆண்டிலே அவரை மிக விரைவில் புனிதர் நிலைக்கு உயர்த்த இறைவரம் வேண்டுவோம். தோமஸ் அடிகளாரின் பெயரால் புதுமைகளை பெற்றுக்கொண்டவர்கள் அது தொடர்பான எழுத்து மூலமான சாட்சியங்களை செபமாலை மாதா துறவற இல்லங்களிலோ அல்லது ஆயர் இல்லங்களிலோ கையளிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

## எருசலேமில் மகாத்மா காந்திக்கு .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த நினைவு மண்டபத்தை எங்கு நிறுவுவது என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை எனினும், ஏதாவது ஒரு அரபு நாட்டுக்கும் இஸ்ரேயலுக்கும் இடையே இந்நினைவு மண்டபத்தை வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மகாத்மா காந்தி உருவச்சிலையை, ஜெனீவா மாநகராட்சி, எருசலேம் மாநகராட்சிக்குக் கொடையாக வழங்கவுள்ளதாகவும் ஊடகச் செய்தி ஒன்று கூறுகிறது.

## அன்னை திரோசவின் வல்லமை ....

1ம் பக்கத் தொடர்ச்சி

அங்கு தொடர்ந்து உரையாற்றிய திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமா, நீடித்த மகிழ்வு என்பது பிறருக்கான சேவை வழியாகவே கிட்டுகின்றது என்றார்.

நம் இதயங்களிலிருந்து எதிர்மறை எண்ணங்களைக் களைந்து, ஆங்கு பொய்மைக்கும், ஏமாற்று வேலைகளுக்கும் எந்த இடமும் வழங்கமால் இருப்பதன்வழி மற்றவருக்கான அக்கறையையும் இளகிய இதயத்தையும் நாம் பெறமுடியும் என்றார்.

இந்தியாவின் மத நல்லிணக்கத்தையும் தன் உரையின்போது பாராட்டிய தலாய் லாமா, தான் அன்னை தெரேசாவின் பல்வேறு சபை இல்லங்களைப் பார்வையிட்டுள்ளதாகவும் அவர்களின் சேவையால் பெரிதும் கவரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

## இளம் குருக்களின் ....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

2006 - 2011 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்களே இச்சுற்றுலாவில் இணைந்துகொண்டனர்.

இக்குருக்களோடு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளாரும் நிதியாளர் அன்ரன் அடிகளாரும் உடன் பயணித்தனர்.

## வங்காலையில் இடம்பெற்ற .....

5ஆம் பக்கத் தொடர்ச்சி

யாழ்பாபணத்தில் அடிகளாரின்கீழ் சிறிய குருமடத்தில் கல்வி கற்ற மாணவர்கள் சார்பாக ஜெரோம் செல்வநாயகம் அடிகளார் பாராட்டுரை நிகழ்த்தினார். விக்ரர் பிலேந்திரன் அடிகளார் விழா நாயகருக்கு பொன்னாடை போர்த்தினார்.

தொடர்ந்து மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துரை வழங்கப்பட்டது. வங்காலை பங்கு சார்பாக வாழ்த்துப்பா வாசித்து அளிக்கப்பட்டது. நிகழ்வின் முடிவில் மதியபோசன விருந்துபசாரம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மன்னார் அராங்க அதிபர், நீதிபதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். அடிகளாரின் குடும்பத்தினர் சார்பாக சொந்தக் கிராமமான வங்காலையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழா ஒழுங்குகளை வங்காலை பங்கு மேய்ப்புப்பணிச் சபையினரின் உதவியோடு வங்காலை பங்குத்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.
வங்காலையில் நடைபெற்ற இந்த விழா அடிகளாரின் குடும்பத்தினர் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட விழாவாகும். அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் சார்பாக ஜனவரி 18ஆம் திகதி மன்னார் சிறிய குருமடத்தில் இன்னுமொரு விழா ஏற்பாடாகியுள்ளது.

## பேசாலை ஆலயத் திருவிழாவும் .....

5ஆம் பக்கத்தொடர்ச்சி

நவநாள் மறையுரைகளை இந்தியாவின் கோட்டாறு மறைமாவட்டத்தைச் சேர்ந்த யூட். றாஜேஸ் அடிகளார் வழங்கினார். பேசாலை ஆலய விழா பாரம்பரியத்தின்படி மார்கழி 8இல் இடம்பெற்றாலும் அது ஜனவரி மூராசாக்கள் விழா என்று அழைக்கப்படும் திருக்காட்சி விழாவோடுதான் நிறைவுக்கு வரும். திருக்காட்சி விழா அன்று ஆலயத்தின் சிங்காசனத்தில் உள்ள வெற்றி நாயகி அன்னையின் திருச்சுருபம் இறக்கப்பட்டு ஆசீர் வழங்கப்படும். அன்றைய தினம் கடற்கரையும் ஆசீர்வதிக்கப்படும்.

பேசாலைப் பங்கு மட்ட மேய்ப்புப் பணி மாநாடு கடந்த ஜனவரி மாதம் 4ந் திகதி இடம்பெற்றது. பங்கின் பல்வேறு பணிக்குழுக்களைச் சோந்த 105 பேர் இதில் பங்கேற்றனர். ஸ்ரனி அன்ரனி அடிகளார் மாநாட்டின் முக்கிய உரையை நிகழ்த்தினார். பேசாலைப் பங்குத் தந்தை விக்ரன் அவிதப்பர் அடிகளார் இந்நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

# எம். நிர்மலராஜ் அடிகளாரின் அஞ்சாதே நீ

## ஒலி, ஒளி குறுந்தகடு வெளியீட்டு விழா

செபமாலை மாதா துறவற சபையின் ஸ்தாபகர் இறையடியார் வண. பி. ஏ. தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு செபமாலை மாதா துறவற சபையைச் சார்ந்த எம். நிர்மலராஜ் அவர்களின் முயற்சியில் 'அஞ்சாதே நீ' என்ற பெயரில் ஒலி - ஒளி பேழை உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 6ம் திகதி யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் இடம் பெற்ற தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு நிகழ்வின்போது இப்பேழை வெளியிடப்பட்டது

யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை, செபமாலை மாதா துறவற சபையின் உயர் தலைவர் அருட்திரு. ஏ. எம். ஸ்ரீபன் அடிகளார் ஆகியோர் இப்பேழைக்கு ஆசியுரை வழங்கியுள்ளனர்.

இந்த இசைப் பேழையில் தவத்திரு தோமஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட குறும்படமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.


போரினால் அலைக்கழிக்கப்பட்ட இலங்கை மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்ட ஒரு உருக்கமான பாடலும் இடம்பெற்றுள்ளது.

இந்த இசைப் பேழை பற்றிய மதிப்பீட்டுரையை மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும் மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் வழங்கினார்.

தென்னிந்தியாவின் பிரபல பாடகர்களான எஸ். பி. பாலசுப்பிரமணியம் உட்பட பல பாடகர்கள் இப்பேழையில் பாடியுள்ளனர்.

அருட்திரு நிர்மலராஜ் அடிகள் தற்போது திருச்சி கலைக்காவேரியில் இசைத்துறையில் முதுமானிப்பட்டப்படிப்பை (M.Phil.) மேற்கொண்டுள்ளார். அடிகளாருக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

இந்த ஒலி, ஒளி பேழைகளை மன்னார் மறைக்கல்வி நிலைய விற்பனைக் கூடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




60 ஆவது ஆண்டு யூபிலி நினைவில்

**அருட்சகோதரி திரேசிந்றா**

அவர்களுக்கு அன்பு வாழ்த்துக்கள்



அன்புடன்
அருட்சகோதரியின் மாணவக் குருக்கள்
(முருங்கன் பங்கு)

## மன்னார் திருக்குடும்ப பாலர் பாடசாலை ஒளிவிழா நிகழ்வுகள்

மன்னார் நகரமண்டபம் 26.11.2011






## உங்கள் அன்புக்குரியவர்களுக்கு

பயனுள்ள புதுவருட அன்பளிப்பு வழங்குவதைப்பற்றி சிந்திக்கின்றீர்களா?

**இதோ உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் அன்புக்குரியவர்கள் மன்னாவை மாதா மாதம் பெற்று பயனடைய நீங்கள் வழிசமைக்கலாமே!

உங்கள் அன்புக்குரியவரின் முகவரியை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பிவையுங்கள் உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 800ஐயும், வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 3000ஐயும் அனுப்பவும்.

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ, அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ, அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம்.

காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. Mannar.
பணம் பெறுபவர் பெயர் : The Editor - MANNA.
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782
என்று குறிப்பிடவும்.


## திருமண வாழ்வில் 25 ஆண்டுகள்

# வெள்ளி விழா




**சிலுவைராசா ஸ்ரனிஸ்லோஸ்** B.A., Dip.in Ed
**அயின்ரீனா ஸ்ரனிஸ்லோஸ்** B.A.
(யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசான்கள்)

பத்திரிசியார் கல்லூரியில் நாம் பயின்ற வேளை
பண்புடனே எமை நீங்கள் பரிவாக நடத்திட்டீர்
எந்நாளும் உம் அன்பை இதயத்தில் போற்றுவோம்
இனிதாக உம் வாழ்வு இகத்தினில் செழித்திட
இறையேசு பதமதில் இறைஞ்சியே வேண்டினோம்

நல்வாழ்த்துக்களுடன், தங்களின் மாணவக் குருக்கள்
(பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள்)

## 5ம் ஆண்டு நினைவு | 16ம் ஆண்டு நினைவு



அமரர் ஆனந்தம் ஒஸ்பிஸ் குரூஸ்



அமரர் அருட்திரு ஆனந்தம் ரெம்சி குரூஸ்

உதிர்வு

25. 11. 2006    27. 12. 1995

"சீரியதோர் பந்தயத்தில் ஓடினேன்.
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன்.
எனக்குரிய வெற்றிவாகை
வானக வீட்டில் காத்திருக்கிறது" (2 தீமொ)

குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்தீர்
வான் வீட்டில் ஒளிவிளக்காக திகழ்வீராக.

இவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

ஆனந்தம், வங்காலை - 08, மன்னார்.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 04 † 06 † 1940
உதிர்வு: 10 † 01 † 2011



**அமரர். திரு. மாணிக்கம் கபிரியேல் சந்திரபோஸ் பெர்னாண்டோ**

முன்னாள் சென். செபஸ்ரியன்ஸ் டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர், மன்னார்.

"நீதிமான்கள் இறப்பிலும் வாழ்வார்கள்".
எம் அன்புத் தந்தையே, இவ்வுலகில்
எமக்காய் வாழ்ந்து, எம் இன்ப துன்பங்களை
நீரே சுமந்து, எம்மை அன்போடும், பண்போடும்,
நேர்மையோடும் வாழக் கற்றுத் தந்தீர்
இறைவனின் நிலைவாழ்வில் அமைதிபெற
அருள் வேண்டி நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவில் வருந்தும்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
பிறின்ஸ் ஸ்ரூடியோ, மன்னார்.

## 31ம் நாள் நினைவு

மலர்வு: 28 † 06 † 1943
உதிர்வு: 24 † 12 † 2011



**அமரர். நட்சத்திரம் ஜோசப்**

உயிரோடு உயிராக கலந்த பாசமிகு தந்தையே!
அன்போடும் பண்போடும் பழகிய பெருந்தகையே!
உயர்ந்த சிந்தனை சிரிப்பு புன்முறுவல்
அனைவரின் உள்ளங்களை ஈர்க்கத்தான் செய்தது
எத்தனை உறவுகள் இருந்தாலும் உந்தன் இழப்பு
ஈடுசெய்ய முடியாததொன்று என்பதை உணர்கிறோம்.
இன்று நீங்கள் எமதருகில் இல்லையே!
இருந்தும் எம் நெஞ்சை விட்டு அகலாத
அகல் விளக்காய் எம்முடன் நெஞ்சில்
எப்போதும் இருப்பீர்கள்!
உங்கள் ஆத்ம அமைதிக்காக என்றென்றும்
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.
பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் பிரதான வீதி 17ம் இலக்கத்திலுள்ள [illegible] – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org